கல்கி

KALKI 30-5-1976 75 காசு




ஓரியண்ட்

நான்கு இணையற்ற தினுசுகள்


டிலக்ஸ்—ஸூபர் டிலக்ஸ்—டெஸ்க்—ஆல் பர்ப்பஸ்

இந்தியாவில் ஃபேன்கள் தயாரிப்பதில் அனுபவமிருந்தவர்களால் செய்த ஓரியண்ட் டேபிள் ஃபேன்கள் எல்லாம் நவீன டிஸைன் கொண்டவை. பல்வேறு தினுசுகளில் உங்கள் குறிப்பிட்ட தேவைகளுக்கும், நவீன கால வீடுகளின் அழகிற்கு அழகு செய்யும் வகையிலும் கிடைக்கின்றன. தயாரிக்கும் நிலைகளிலெல்லாம் இவை கண்டிப்பான தரக்கட்டுப்பாடுடன் இடைவிடாத ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் செய்யப்பட்டிருப்பதால் ஆண்டுக்கணக்கில் அசைவற்றும் அமைதியாகவும் தொந்தரவு இல்லாமலும் உழைக்கின்றன.


எல்லா ஃபேன்களுக்கும் இரண்டு வருட உத்தரவாதம்.




ஆல் பர்பப்ஸ் ஃபேன்



டெஸ்க் ஃபேன்



ஸூபர் டிலக்ஸ் டேபிள் ஃபேன்



டிலக்ஸ் டேபிள் ஃபேன்

காற்றிற்கு அழகூட்டும் ஃபேன்கள்

ஓரியண்ட்
மின்விசிறிகள்

ஓரியண்ட் ஜெனரல் இண்டஸ்ட்ரீஸ் லிட். 6, கோர் பீபி லேன், கல்கத்தா 700 054

தொழிற்சாலைகள் : கல்கத்தா மற்றும் பரிதாபாத்

CC/OGI-5/76 TAM



கல்கி

அலை ஒளி
வைகாசி 17
மே 30. 1976



நீரில் மிதந்தபடி
நீந்தும் கதை!

குளத்திலும் ஏரியிலும் மரக்கட்டைபோல் மிதக்கும் வித்தையைத்தான் 'ஜலஸ்தம்பனம்' என்பார்கள். நீரில் படுத்தபடி கால்களைப் பத்மாசனம் போல மடக்கியபடி மணிக்கணக்கில் மிதப்பார்கள். — அந்நிலையிலேயே பேசுவார்கள்!

திருமுருக கிருபானந்த வாரியாருக்கு இந்த வித்தை நன்றாகத் தெரியும்.

''கடப்பை ஜில்லாவில் ஒரு சாமியார் ஜல ஸ்தம்பனம் செய்வதாயும் திரளாக மக்கள் தினம் வந்து பார்ப்பதாகவும் செய்தி கேள்விப்பட்டேன். அதை நானும் ஒரு சாமியாரிடம்தான் கற்றுக் கொண்டேன். மூன்று நாட்கள் என்னோடு குளத்தில் கூட இருந்தால் விரும்புவோருக்கு நான் கற்றுத் தருவேன்!'' என்கிறார் வாரியார். மேலும் ''ஜலஸ்தம்பனம் ஒரு பொடி வேலை!'' என்கிறார்.

—ஏ. சுவாமிநாதன்

(அடுத்த வாரம்: புதுப் பெரியவாள் பற்றிப் புதுத் தகவல்!)

''கல்கி''யில் வெளிவரும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

தலையில் துளையிட்டு அறுவைச் சிகிச்சை!



ரானல்டு கட்டுலாக்

நேரில் கண்டவர் எழுதிய புல்லரிக்கச் செய்யும் கட்டுரை இது. படித்து முடித்ததும் ஆபரேஷனை வெற்றிகரமாக முடித்த டாக்டர் குழாம் பெருமூச்சு விட்டது போலவே நீங்களும் நெடுமூச்செறிவீர்கள்!


அவர் பெயர் மிச்சல்போகாஸ். அவருக்கு விந்தையான ஒரு நோய் வந்து உயிருக்கே ஆபத்து ஏற்பட்டிருந்தது. சற்று மறந்து விரைவாகத் தலையைத் திருப்பினால் அவருக்கு மயக்கம் வந்து விடும். எந்த வேளையிலும் வலிப்பு வந்து உயிர் போய் விடலாம்.

நோயின் காரணத்தைச் சிக்காகோ நகரிலுள்ள இல்லினாய்ப் பல்கலைக் கழக மருத்துவக் கல்லூரி டாக்டர்கள் கண்டுபிடித்து விட்டார்கள். மிச்சலின் மூளைக்குச் செல்லும் சிறிய இரத்த நாடிகளுக்குள் மெல்லிய பிளாஸ்டிக் குழாய்களைச் செலுத்தி, அவற்றின் வழியாக இரத்த நாடிகளுக்குள் ஒரு சாயத்தைப் பாய்ச்சினார்கள். இது ஒளி ஊடுருவாத சாயம். பின்னர், எக்ஸ்—கதிர்களின் துணையுடன் சாயம் போகும் பாதையைக் கண்காணித்தார்கள்.

மிச்சல் இன்னும் உயிரோடு இருப்பது தான் அவர்களுக்கு வியப்பளித்தது. மூளைக்கு இரத்தம் கொண்டு செல்லும் இரு பெரிய இரத்த நாடிகளிலும் அடைப்பு ஏற்பட்டிருந்தது. இவற்றில் ஒன்றில் அடைப்பு ஏற்பட்டாலும் அதிர்ச்சியால் ஆள் இறந்துபோய் விடுவான். உடலில் கொழுப்புச் சத்து அதிகமானால் இப்படி அடைப்பு நேரிடும். ஆனால், மிச்சலின் இரு நாடிகளிலும் அடைப்பு ஏற்பட்டிருந்தும் ஆள் எப்படி உயிர் தப்பினார்?

மயக்கம் வருவதேன்?

அவரது கழுத்துக்கு இரு புறமும் உள்ள இரு பெரிய இரத்த நாடிகளிலும் அடைப்பு படிப்படியாகவே ஏற்பட்டது. எனவே, மூளை சுதாரித்துக் கொள்ள அவகாசம் கிடைத்தது. அவரது கழுத்துக்குப் பின்புறமுள்ள முதுகுத் தண்டை ஒட்டிய இரு சிறிய இரத்த நாடிகள் வழியாக மூளைக்கு இரத்தம் கிடைத்து வந்தது. அவர் தலையைப் பக்க வாட்டிலோ பின்புறமாகவோ திருப்புகையில், இந்த இரு நாடிகளும் முதுகெலும்போடு சேர்ந்து அழுத்தப்படுவதால் அடைப்பு ஏற்பட்டு மூளைக்கு இரத்தம் போகாமல் நின்றுவிட்டது. கண் இருண்டு மயக்கம் வந்தது. அவரது மூளைக்கு ஆக்ஸிஜன், ஊட்டச் சத்துக்கள் ஆகியன போதிய அளவில் கிடைக்கவில்லை. இந்த நிலைமையில் எவ்வளவு நாட்கள் தள்ள முடியும்?



மிச்சல் தப்பிப் பிழைக்க ஒரே ஒரு வழி தான் உண்டு. அவரது மூளைக்கு இரத்தம் போக ஒரு புதிய வழி ஏற்படுத்த வேண்டும்.

இது மிக நுட்பமான அறுவை மருத்துவம். மூளைக்குள் மிகச் சிறிய இரத்த நாடிகளை ஒன்றுசேர்த்துத் தைப்பதற்கு 'மைக்ராஸ்கோப்' கருவியின் துணை தேவை.

சிக்காகோ மருத்துவ மனையில் இத்தகைய அறுவை மருத்துவம் செய்வதென்பது இதுவே முதல் தடவை. 'மைக்ரோ-சர்ஜரி' ஆசிரியர் டாக்டர் ஜோஸ் எல். ஸைஜர் மருத்துவம் செய்யப் போகிறார்.

'மைக்ரோ - ஸர்ஜரி'

சாதாரணமாக, அறுவை மருத்துவம் செய்யும் டாக்டர்கள் தம் கைகளைப் பார்க்க முடியும். ஆனால் 'மைக்ராஸ்கோப்' கருவிக்குக் கீழே கைகளைப் பார்க்கையில் அவை மிகப் பெரிதாகத் தெரிகின்றன. வேறு யாரோ ஒருவருடைய கைகள் போலத் தோன்றும்! எனவே, கைகளையும் விரல்களையும் இயக்க மிகுந்த பயிற்சி தேவை. மூளையில் 'நுண் பெருக்காடி அறுவை மருத்துவம்' நடைபெறுவதைப் பார்ப்போம்.

மிச்சல் போகாஸ் அறுவை மருத்துவ மேடைக்கு வருகிறார். அவர் தலை முடியை மழித்து நீக்குகிறார்கள். மயக்க மருந்து கொடுக்கிறார்கள். முகத்தை ஒரு பக்கமாகச் சாய்த்து வைக்கிறார்கள். சுற்றிலும் டாக்டர்களும் மருத்துவ ஊழியர்களும் ஆயத்தமாக இருக்கிறார்கள். மேலே ஒளி விளக்குகள் ஒளி உமிழ்கின்றன. டாக்டர் ஸலாஜர் முன்னால் வந்து, மிச்சலின் இடது காதுக்கு மேல் மண்டைத் தோலில் கிட்டத்தட்ட நாலு அங்குல அளவுக்கு அரை வட்டமான துளை போடுகிறார். ஜாக்கிரதையாகத் தோல் பகுதியை மடித்து வைத்துக் கொள்கிறார். மேல் பரப்பை ஒட்டியுள்ள நெற்றிப் பகுதி இரத்த நாடியைக் கண்டுபிடிக்கிறார். இதுதான் புதிய இரத்த நாடியாகப் பயன்படப் போகிறது. இதை மண்டை ஓட்டுக்குள் செலுத்தி மூளையிலுள்ள இரத்த நாடியுடன் இணைக்கப் போகிறார்.

தலையில் துளையிடுதல்

பின்பு, மண்டை ஓட்டை மூடியுள்ள தசை உறையை அறுத்து அகற்றுகிறார். எலும்பு மூடாக்கு தெரிகிறது. மூளையில் அடிபடாமல் காக்கும் கவசம் இதுதான். எலும்பில் துளை போட மின் சுலத்தால் இயங்கும் ஒரு துணைக் கருவியைப் பயன்படுத்துகிறார். ஒரு விநாடிகூட வீணாவதில்லை. மிச்சலின் தலையைச் சற்றுக் கீழ் நோக்கியவாறு திருப்புகிறார்கள். ஓர் அங்குல இடைவெளியில் இரு சிறு துளைகள் போடுகிறார்.

மின்விசையால் இயங்கும் ரம்பம் ஒன்றைத் துளைக்குள் செலுத்துகிறார்கள். இரண்டு அங்குலத்துக்குச் சற்றுக் குறைவான விட்டமுள்ள மண்டையோடு அறுத்தெடுக்கப்படுகிறது. ரம்பம் மூளையில் பட்டுவிடாமல் தடுப்பு ஏற்பாடு இருக்கிறது. மண்டை ஓட்டுக்குக் கீழே 'வெள்ளை வெளேர்' என்று நார்ச் சவ்வுப் படலம் தெரிகிறது. இதுவும் மூளையைப் பாதுகாக்கும் மற்றொரு கவசம். ஜாக்கிரதையாக இதில் ஒரு துளை இடுகிறார்கள். மெல்லிய, ஒளி ஊடுருவும் சவ்வு தெரிகிறது. இதுதான் கடைசிக் கவசம்.

அறையிலுள்ள அனைவரும் பெருமூச்சு விடுகிறார்கள். சவ்வின் ஊடாக மூளை தெரிகிறது! மனிதனை மனிதனுக்குவதே மூளைதான், அல்லவா? சாம்பல் நிறம், மடிப்பு மடிப்பான தோற்றம். இரத்தம் உள்ளே பாயும்போது மூளை மெதுவாகத் துடிக்கிறது. முதுகுத் தண்டிலிருந்து வரும் ஒரு திரவத்தில் மூளை எப்போதும் ஊறிக் கொண்டே இருப்பதால் ஈரமாக இருக்கிறது. திரவத்தில் மூளை மிதக்கிறது என்றே சொல்லலாம். அதிர்ச்சி மூளையைத் தாக்காமல் தடுக்கும் ஒரு பாதுகாப்பு இந்தத் திரவம். தலை அங்குமிங்கும் திரும்பும்போது, மூளை மண்டையோட்டில் இடிபடாமல் காப்பதும் இந்தத் திரவமே. அறுவை மருத்துவம் நடைபெற்று முடியும் வரையில் மூளைமீது உப்புக் கரைசல் ஒன்றை ஊற்றிக் கொண்டே இருக்கிறார்கள். 'செல்கள்' உலர்ந்து போய், மடிந்துவிடாமல் காப்பதற்காகவே இவ்வாறு செய்கிறார்கள்.

டாக்டர் ஸலாஜர் தேடும் இரத்த நாடி மூளையின் மேல்பரப்பில் தெளிவாகவும் தனியாகவும் தெரிகிறது. சிவப்பாகத் தெரியும் நாடி, மூளையின் தலைமை இரத்த நாடியாகும். இது போன்று மேலும் இரு பெரிய நாடிகளும் உண்டு. இவை மூன்றும்தான் மூளையின் ஆழமான உட்பகுதிகள் உள்பட எல்லாப் பகுதிகளுக்கும் குருதி கொண்டு செல்கின்றன.

நுட்பமான மூளை

டாக்டர் மூளையைத் தொடவே இல்லை. மூளையிலுள்ள 'செல்'களுக்கு அவர்கள் மிகுந்த மதிப்புக் கொடுக்கிறார்கள். சிறிது சேதமேற்பட்டால்கூட, நினைவாற்றல் போய்விடலாம். உடல் இயக்கங்கள் ஊறுபடலாம்; கைகால் விளங்காமல் போகலாம். பார்வை கூடப் போய்விடலாம். எனவே, டாக்டர்கள் சர்வ ஜாக்கிரதையாக இருப்பார்கள்.

மூளை நாடியில் அரை அங்குல இடைவெளியில் இரு சிறிய 'கிளாம்ப்புகள்' பொருத்துகிறார், டாக்டர். இரு தடுப்புகளுக்கும் இடையிலுள்ள பகுதியில் நாடியில் ஒரு துளையிடுகிறார். மண்டைத் தோல் இரத்த நாடியைக் கொண்டு வந்து, துளையிட்ட பகுதியில் தைத்து இணைக்கிறார் — 'பைப் கனெக்ஷன்' போல.

மிகச் சிறிய சாமணங்களின் உதவியுடன் அவர் தமது அறுவை மருத்துவத்தைத் திறமையாகவும் விரைவாகவும் செய்து முடிக்கிறார். 'மைக்ராஸ்கோப்' கருவியின் துணையில்லாமல் இதையெல்லாம் அவர் செய்ய முடியாது. 16 மடங்குகள் பெரிதாகக் காட்டும் சிறப்புக் கருவி இது. நாடிகள் விரல் அளவு பருமனாகத் தெரிகின்றன.

எல்லாம் சரியாக இயங்குகின்றனவா என்று நன்கு சோதித்துப் பார்த்த பின்பு கிளாம்புகள் அகற்றப்படுகின்றன. புதிய தொடர்புக்குள் இரத்தம் பாய்ந்தோடுகிறது. சிறு கசிவு. டாக்டர் ஸலாஜர் தையல் போட்டுச் சீர் செய்கிறார். அறுவை மருத்துவம் முடிந்து விட்டது. மீண்டும் அனைவரும் பெருமூச்சு விடுகின்றனர். ஸலாஜர் முகத்தில் புன்முறுவல் பூக்கிறது.

தழும்புகூட இருக்காது!

ஒரு சிறு துண்டு மண்டையோடு வெட்டி எடுக்கப்பட்டதல்லவா? அதை மீண்டும் பொருத்தவில்லை. ஏனெனில் அது புதிய நாடி இணைப்பை வெட்டிவிடக் கூடும். மடக்கியிருந்த மண்டைத் தோலை விரித்துத் துளையை மூடித் தைத்து விடுகிறார் டாக்டர். இதுவே போதுமான பாதுகாப்பு ஆகும். மீண்டும் மயிர் வளர்ந்துவிடும். தழும்புகூட இருக்காது.

அறுவை மருத்துவத்துக்கு மறுநாளே மிச்சல் எழுந்து நடக்கத் தொடங்கிவிட்டார். பழைய தலை வலி கிடையாது. மயக்கம் வருவதில்லை. முன்னைவிடத் தெளிவாக அவரால் சிந்திக்கவும் முடிகிறது. இனி பயமின்றி மிச்சல் நெடுநாட்கள் வாழ முடியும்.

மூளை மருத்துவத்துக்கு மட்டுமல்லாமல் மற்றும் பல சிகிச்சைகளுக்கும் 'மைக்ரோ-ஸர்ஜரி' பயன்படுகிறது.

(சிக்காகோ டிரிப்யூன்)

உங்கள் குழந்தைக்கு 3 மாதங்களாகிவிட்டதா?

டாக்டர்கள் கூறுகிறார்கள்,
3 மாதங்கள் ஆனவுடன், உங்கள்
குழந்தைக்குப் பால் மட்டும் போதாது.
உங்கள் குழந்தைக்கு, ஆரோக்கியமான
இரத்தத்திற்குத் தேவையான போதிய
இரும்புச்சத்து நிறைந்த
திட உணவு தேவை.





போதிய இரும்புச்சத்து நிறைந்த ஒரே திட உணவு—பாரெக்ஸ், கொடுங்கள் அவனுக்கு.

அதோடு, அவனுடைய தேவைக்கேற்ப, உங்கள் குழந்தையின் உணவில் தானிய உணவின் அளவை அதிகரிக்க உதவுவது பாரெக்ஸ் ஒன்றுதான்.

இதோ வளரும் உங்கள் குழந்தைக்கு பாரெக்ஸ் வழங்கும் நன்மைகள்:

வளர்ந்து வரும் உங்கள் குழந்தைக்குத் தேவையான பாரெக்ஸ் அளவு:

உங்கள் குழந்தையின் வயது	பாரெக்ஸ் அளவு
3-6 மாதங்கள்	1-2 தேக்கரண்டி, தினசரி இரு முறை
6-9 மாதங்கள்	3-4 தேக்கரண்டி, தினசரி மும்முறை
9 மாதங்கள்-3 வயது	4-6 தேக்கரண்டி, தினசரி நான்கு முறை



பாரெக்ஸ்

க்ளாக்ஸோ

46-172 TM

வறட்டுக் கௌரவம் வேண்டாம்!

காந்தி சொன்னார்.

பின்னர் ராஜாஜி சொன்னார்.

இப்போது ஜெர்மானிய அறிஞர் ஒருவர் கூறுகிறார்:

''டம்பாச்சாரித் திட்டங்களுக்கு ஆசைப்படாதீர்கள். ராட்சத எஃகு ஆலைகள் போன்றவற்றை நிறுவுவதை ஒரு கௌரவப் பிரச்னையாகக் கொண்டு, கோடி கோடியாகப் பணத்தை அவற்றில் முடக்காதீர்கள். அவற்றுக்குப் பதில் குறைந்த செலவில் நிறுவக்கூடிய, எளிய நுணுக்கங்களைக் கையாண்டு உற்பத்தியைப் பெருக்கக் கூடிய ஏராளமான தொழிலகங்களை நாடு முழுவதும் பரவலாக ஏற்படுத்துங்கள். இதுவே உற்பத்தி அபரிமிதமாய்ப் பெருகவும் வேலையில்லாத் திண்டாட்டம் தீரவும் துரிதப் பொருளாதார முன்னேற்றத்துக்கும் வழி.''

டாக்டர் எடுவர்ட் பெஸ்டல் ''இந்தியா என்ன செய்ய வேண்டும் என்று கூற எனக்கு அதிகாரமோ யோக்கியதையோ கிடையாது. அந்தத் தேசத்துக்கும் புதிதாய் அபிவிருத்தி அடைந்து வரும் வேறு பல நாடுகளுக்கும் என் யோசனைகளை ஆய்வுக்கெனச் சமர்ப்பிக்கிறேன்; அவ்வளவே'' என அடக்கமாகச் சொல்கிறார். ஆனால் இந்த அடக்கத்துக்குப் பின்னால் அறிவு ஒளிர்கிறது; யதார்த்தப் போக்கு பிரகாசிக்கிறது. அவர் கூறுகிறார்:

''புதிதாய் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் நகர்ப்புறத் தொழில் முன்னேற்றம் சுருசுருப்பாயிருக்கிறது. மக்களில் 10—20 சத விகிதத்தினர் நவீன வாழ்க்கைமுறையை மேற்கொள்கின்றனர். இந்த வாழ்க்கை நடத்தச் செலவு மிகுதி என்பதோடு சீக்கிரம் களைப்படையச் செய்வதுமாகும். இதே நேரத்தில் கிராமப்புறங்களில் 80—90 சதவிகிதம் மக்கள் இன்னமும் கொடிய வறுமையின் ஆதிக்கத்துக்கு அடிக்கடி ஆளாவதைப் பார்க்கிறோம். பொருளாதார உதவிகள் எல்லாம் பெரும்பாலும் நகர்ப்புறங்களிலேயே பயனாகின்றன. திட்டங்களையும் அவற்றுக்குரிய பொருளாதார உதவிகளையும் கிராமப்புறங்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டும். இங்கே மிக நவீனமான தொழில் நுணுக்கங்கள் பயனாகா. பழங்கால முறைகளும் பிரயோஜனமில்லை. இரண்டுக்கும் இடைப்பட்ட ஒரு தொழில் நுணுக்கத்தை வளர்க்க வேண்டும். இப்படி வந்து சேர்கிற தொழில் நுணுக்கம் கிராமப்புறங்களிலேயே கிடைக்கும் மூலப் பொருள்களைக் கொண்டு அங்குள்ளவர்களின் திறமைக்கும் தேவைக்கும் ஏற்பப் புதிய தொழிலகங்களை ஆரம்பிக்க உதவட்டும். உதாரணமாக நவீன உத்திகளைக் கையாளும் கொல்லன் பட்டறைகள், செங்கல் சூளைகள் போன்ற பலதரப்பட்ட தொழில்களைப் பரவலாக ஏற்படுத்தலாம். இதற்கென வந்து சேரும் இயந்திரங்களைப் பழுது பார்க்கவோ அல்லது புதிதாய்ப் பெறவோ பட்டணத்துக்கு ஓடாமல், கிராமப்புறங்களிலேயே வசதிகள் பெருகட்டும். இவ்வித 'இடைநிலைத் தொழில் நுணுக்க'த்தைக் கையாள்வதால் புதிதாய் ஒருவருக்கு வேலை கொடுக்க ஆகும் செலவு சராசரியில் கணிசமாகக் குறையும்.''

இந்தியாவையே உதாரணம் காட்டித் தொடர்கிறார் பெஸ்டல்: ''இந்தியாவில் ஐந்து கோடி மக்களுக்கு வேலை வாய்ப்பு தேவை. இந்தியாவின் மொத்த தேசிய உற்பத்தியையும், இத்தொகையிலிருந்து புதிய தொழிலகங்களில் முதலீட்டுக்குக் கிடைக்கக்கூடிய பங்கையும் கவனிக்குமிடத்து இந்த ஐந்து கோடி வேலைகளை 'இடைநிலைத் தொழில் நுணுக்க முறை'யைக் கையாண்டு பத்து ஆண்டுகளில் தரமுடியும். ஆனால் மிக நவீனமான பெரிய தொழிலகங்களை நிறுவி இவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்துவது என்றால் நிதி வசதி காணவே காணாது. ஐந்து கோடியல்ல; ஐம்பது லட்சம் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தத் தேவைப்படும் நிதியத்தில் ஐந்து சதவீதம்கூடக் கிடைக்காது!''

டாக்டர் பெஸ்டல் அழுத்தம் திருத்தமாய்க் கூறியுள்ளார். 'யார் சொல்லி யார் கேட்பது?' என்று நாம் எண்ணக்கூடாது.

கல்கி
மலர் 35
இதழ் 44

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற – எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா – பாரதியார்

தோரோவின் தத்துவம்

சுதந்திரம் பெறுவதற்கு ஆயுதமேந்திப் புரட்சி செய்வதைத் தவிர வேறு வழி கிடையாது என்றே நான் அரசியல் வாழ்க்கையில் புகுந்தபொழுது எண்ணினேன். என்னைப் போலவேதான் அந்தக்காலத்திலிருந்த அறிஞர்கள் எல்லோரும் எண்ணினர்கள். ஆனால் போர்முறை அதிகமாக முன்னேற்றம் அடைந்துவிட்டபடியால் அதைக் கையாள்வது என்பது அசாத்தியமான காரியம் என்பதையும் நாங்கள் உணர்ந்திருந்தோம். போர் தொடுத்துச் சுதந்திரம் பெற முடியாது என்பதை உணரவே நாங்கள் என்ன செய்வது என்பது தெரியாமல் திகைத்து நின்றோம்.

ஒரு நாள் நண்பர் ஒருவர் வீட்டில் கழிவுக் காகிதங்கள் போடும் கூடையில் ஒரு சிறு புத்தகத்தைக் கண்டேன். அது தோரோ என்னும் அமெரிக்கர் எழுதிய சாத்விகச் சட்ட மறுப்பு என்னும் நூல். அதைப் படித்தேன்; வெகு சுவையுடையதாய் இருந்தது. எனக்கு ஒரு புது விழிப்பு ஏற்பட்டது. அதே சமயத்தில் மகாத்மா காந்தி அடிகள் தென் ஆப்பிரிக்காவில் செய்து வந்த காரியங்கள் பத்திரிகைகளில் வெளியாயின. அவர் தோரோவின் தத்துவங்களையும் டால்ஸ்டாயின் தத்துவங்களையும் இந்திய அரசியலில் எப்படிக் கையாளலாம் என்னும் முறையைக் கண்டுபிடித்துவிட்டார். நாம் சம்மதிக்காவிட்டால் அந்நியர் நம்மை ஆளமுடியாது என்னும் உண்மையை அவர் கண்டுபிடித்து விட்டார். நாம் சம்மதிக்க மாட்டோம் என்று சொல்லிவிட்டால் அந்தக் கணமே அரசாங்கம் முறிந்துபோக வேண்டியதே யாகும். தென் ஆப்பிரிக்காவில் அவர் நடத்திய போராட்டத்தைப் பற்றி வாசித்ததும் அதே ஆயுதத்தை ஏந்தினுல் இந்தியாவும் வெற்றி பெற்றுவிடலாம் என்பதை உணர்ந்தோம்.

— ''அக்டோபர் 2ந் தேதி'' என்ற கட்டுரை

"கல்கி"யின் சகோதரர்

பள்ளிப் பாட நூல்களுக்கு நோட்ஸ்களும் கைடுகளும் கூடாது அவை மாணவனின் சிந்திக்கும் ஆற்றலையே குறைத்து விடுகின்றன என்று வாதம் புரிவோர் உண்டு. அமரர் கல்கி அவர்களும் இந்த வாதத்தை ஏற்றவர்; எழுதியவர்.





ஆனால் அவருடைய சகோதரர் (சித்தப்பா மகன்) திரு வி. சுப்பிரமணியம் இதனை ஒப்புக் கொண்டவர் அல்ல. மாணவர்கள் நல்ல மார்க் வாங்கக் கைடுகள் உதவுகின்றன இதிலென்ன தவறு என்று மல்லுக்கு நிற்பார். அதுமட்டுமல்ல; பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் ஏராளமான பாட நூல்களையும் அவற்றுக்குக் கைடுகளையும் தாமே பிரகரித்தார். அகஸ்தியர் கைடுகள் மாணவ உலகில் மிகவும் பிரசித்தி அடைந்தன.

இதன் மூலம் ஈட்டிய செல்வத்தால் தமது தொழிலை மேலும் விஸ்தரித்ததுடன் ஏராளமான பேர்களுக்கும் நற்பணிகளுக்கும் ஓசைப்படாமல் உதவும் பரந்த மனப்பான்மையும் கொண்டிருந்தார் திரு சுப்பிரமணியம்.

அவர் தமது தொழிலுக்கு இடையூறான 'கல்கி'யின் ஒரு வாதத்தை ஏற்கவில்லையே தவிர தலைமையுரிடம் அளப்பரிய பக்தி விசுவாசம் கொண்டிருந்தார். அகஸ்தியர் என்ற பெயரே கல்கியின் ஒரு புனைபெயர் என்ற எண்ணத்தால் அவர் ஏற்றதுதான். அண்மையில் சுப்பிரமணியம் அமரர் உலகில் தமது தலைவரைக் காணச் சென்றுவிட்டார்.


மிக சாமானியமான நிலையிலிருந்து படிப்படியாக உயர்ந்து நல்ல நிலையை அடைந்த திரு சுப்பிரமணியம் -சலியா உழைப்பின் வெற்றிக்கு ஓர் எடுத்துக்காட்டு.


அரே, நிம்பளி 100 ரூபா மேலே நம்பள்
8-69 ரூபிள் நான் தர்றேன்! ....
நிம்பள் ரூபா மட்டம்! நம்பள் ரூபிள் ஒஸ்தி!
பாரதம்
ரஷ்யா
கிராக்கிப் படி
தொழிலாளி
அரசு டாக்டர்கள் தனியாகத் தொழில் நடத்துவதைத்
தடை செய்ய தமிழக அரசு யோசித்து வருகிறது!
சொந்த மருத்துவமனை
அரசு டாக்டர்
அரசு மருத்துவமனை



ஜீவகாருண்யம் ⑤

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்



இப்போதெல்லாம் ரொம்பப் பேருக்கு ஒரு தப்பு அபிப்பிராயம் இருக்கிறது. அதாவது 'புத்தர், ஜீஸஸ், நபி எல்லோரும் அஹிம்ஸை, அன்பு, சகோதரத்வம் ஆகியவற்றைச் சொன்ன மாதிரி வைதிக மதத்தில் சொல்லவில்லை: வைதிக மதத்தில் எப்போது பார்த்தாலும் கர்மாநுஷ்டானம் என்று ஏதாவது யாகம், யக்ஞம், ஹோமம், தர்ப்பணம் இந்த மாதிரியும், பெரிய பெரிய பூஜை உத்ஸவாதிகளும், யோகம், ஞான விசாரம் இதுகளும்தான் சொல்லியிருக்கின்றதே தவிர, ஜீவகாருண்யத்தைப் பற்றி ஒன்றுமே இல்லை' என்று ஓர் அபிப்பிராயம் இருக்கிறது. நல்ல வைதிகமாக, ஆசாரமாக இருக்கிறவர்களைப் பார்த்தாலும் என்னமோ வறட்டு வறட்டு என்று ஏதாவது சடங்குகளைப் பண்ணிக் கொண்டு, 'மடி' கொண்டாடிக் கொண்டு ஒதுங்கி ஒதுங்கித்தான் இருக்கிறார்களே தவிர, ஒரு மிஷனரி ஆர்வம் மாதிரி பரோபகாரப் பணிகளில் ஈடுபடுபவர்களாக இல்லையே என்று நினைக்கிறார்கள்.

வாஸ்தவத்தில் நம் சாஸ்திரங்களில் ஸகலருக்கும் அவரவருக்கான அநுஷ்டானங்களை, சம்ஸ்காரங்களைச் சொல்வதற்கு முன் ஒவ்வொரு ஜீவனுக்கும் இருக்க வேண்டிய சில ஆத்ம குணங்களைச் சொல்லியிருக்கிறது; சாமான்ய தர்மங்கள் என்ற பெயரில் சில ஒழுக்க நெறிகளைச் சொல்லியிருக்கிறது. சாமான்ய தர்மங்களில் முதலாவதே அஹிம்ஸைதான். சத்தியம் கூட இதற்கு அப்புறம் தான் வருகிறது. அந்த சத்தியத்துக்கும் Definition (லக்ஷணம்) கொடுக்கிறபோது

ஸத்யம் பூதஹிதம் ப்ரியம்

அதாவது சத்தியம் என்பது வெறுமனே நடந்ததை நடந்தபடி வாயால் சொல்கிறது மட்டுமில்லை, எது ஜீவராசிகளுக்கு ஹிதமானதாக, பிரியமானதாக இருக்கிறதோ அதுவே சத்தியம் என்றுதான் சொல்லியிருக்கிறது.

இப்படியே நாற்பது ஸம்ஸ்காரங்களுக்கு முந்திச் சொல்லியிருக்கிற அஷ்ட குணங்களில் முதலாவதாக

தயா ஸர்வ பூதேஷு

''எல்லா ஜீவராசிகளிடமும் அருள் இருக்க வேண்டும்'' என்று அன்புக்கே முக்கியத்வம் தந்திருக்கிறது.

அன்புடைமை, அருளுடைமை இத்யாதிகளை ஒருத்தன் தான் அப்பியாசம் பண்ணாமல் பகவான் மட்டும் தனக்கு அருள் பண்ண வேண்டும் என்று நினைத்து எத்தனை பூஜை, யாகம் இதுகள் செய்தும் பிரயோஜனமில்லைதான். இவனுக்குத் தன் மாதிரி இருக்கப்பட்ட மற்றவர்களிடம் ஒரு தயை, தாட்சண்யம், ஈவு, இரக்கம் இவை இல்லாவிட்டால், தன்னிடம் மட்டும் பகவான் தயை காட்ட வேண்டும் என்று கேட்க வாய் ஏது? முன்னேயே நான் சொன்ன மாதிரி பரோபகாரம், ஆத்மாபிவிருத்திக்கான ஸம்ஸ்காரங்கள், பூஜை முதலான சாதனங்கள் எல்லாம் கலந்து கலந்து, ஒன்றையொன்று இட்டு நிரப்பிக் கொண்டு (Complementary) பரஸ்பரம் ஒன்றால் ஒன்று பரிசுத்தமாக்கப்பட்டுத்தான் அநுஷ்டிக்கப்பட வேண்டும்.

நடுவாந்தரத்தில் ஈஸ்ட் இண்டியா கம்பெனி வந்து, கொஞ்சம் கொஞ்சமாக வெள்ளைக்கார ராஜ்யம் ஏற்பட்டு இங்கே இங்கிலீஷ்காரர்களின் வழக்கங்கள் புகுந்த பின்தான் நல்ல வைதிக ஆசாரத்துடன் இருப்பவர்களுக்கும், பொது சமூக சேவைக்கும் ஒரு பிரிவினை மாதிரி ஏற்பட்டிருக்கிறதே தவிர, அதற்கு முந்தியெல்லாம் பரம சிஷ்டர்களும் கூட சகல சமூகத்தின் அன்பையும் மதிப்பையும் பெற்று அவர்களுக்கு உபகாரம் செய்துதான் வந்திருக்கிறார்கள். அப்பைய தீக்ஷிதர், கோவிந்த தீக்ஷிதர், திருவிசநல்லூர் அய்யாவாள் மாதிரியான பெரியவர்களின் வாழ்க்கையைப் பார்த்தால்கூட அவர்கள் சேரி ஜனங்கள் உள்பட எல்லாருக்கும் உபகாரம் பண்ணிக் கொண்டிருந்தார்கள் என்று தெரிகிறது. லோக க்ஷேமார்த்தம் தொழில்களைப் பாரம்பரியமாகப் பங்கீடு பண்ணிக் கொண்டு, அந்தந்தத் தொழிலைப் பொறுத்து அநுஷ்டானங்களும் ஆசாரங்களும் ஏற்படுவதால் இவற்றில் குழறுபடி உண்டாகி லோக க்ஷேமம் கெட்டுப் போகக் கூடாது என்பதற்காகவே பிரிந்து வாழ்ந்தாலும்கூட, பரோபகாரத்துக்கு அப்போது குறைச்சலே இருக்கவில்லை. இப்போது ''ஸோஷல் ஸர்வீஸ்'' என்று பேச்சில் ரொம்ப

[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது]

காற்றின் சுகம் கோடையிலே!




நிழலின் அருமை வெய்யிலிலே என்பார்கள். கடற் காற்றின் சுகமும் கடுங் கோடையில்தான் தெரியும். மாலை நேரம். மொட்டை மாடி. தென்னை ஓலைகளைச் சலசலக்கச் செய்யும் காற்று அடிப்படியில் வெந்த உடலை அணைக்கும் போது ஏற்படும் சுகானுபவம்....அடடா அனுபவித்தால்தான் தெரியும்!

மேலட்டை வண்ணப்படம்: **உதயகுமார்**

வும் அடிபட்டு, நியூஸ் பேப்பரில் போட்டோக்கள் போடுவது போல் அப்போது செய்யாவிட்டாலும், வாஸ்தவமான சமூக சேவை அப்போது ஸ்வபாவமாகவே செய்யப்பட்டு வந்தது.

வெள்ளைக்காரர்களோடு Town life (நகர வாழ்க்கை) என்று ஒன்று வந்து நம் ஆசாரங்களுக்கெல்லாமே ஹானியாக எல்லாரையும் போட்டுப் பலபட்டடையாகக் குழப்புகிற நிலைமை ஏற்பட்டபின், ரொம்பவும் ஆசாரசீலர்கள் இந்தப் படையெடுப்புக்குப் பயந்து சமூகத்திலிருந்தே ஒதுங்கிப் போன மாதிரி விலக வேண்டி வந்திருக்கிறது.

ரொம்பவும் கலந்து போகவும் கூடாது, ஒரேயடியாகப் பிரிந்தும் இருக்கக் கூடாது; அவரவரின் ஸ்வதர்மப்படியான காரியத்தில் பிரிந்திருக்க வேண்டும். ஆனால் மனஸிலே ஒன்றுசேர்ந்து அனைவரும் 'அரன் குடிமக்களாக' ஐக்கியப்பட்டு இருக்க வேண்டும் என்ற உத்கிருஷ்டமான ஏற்பாடு இதற்கப்புறம் விணுப் போக ஆரம்பித்துவிட்டது. ஒரு பக்கம் சீர்திருத்தக்காரர்கள் ஆசார அநுஷ்டானங்களையே கண்டனம் செய்தார்கள் என்றால், இன்னொரு பக்கம் ஆசார சிஷ்டர்களும் பொதுவான சமூக உணர்ச்சியே குன்றந்து விலகி விலகிப் போக ஆரம்பித்திருக்கிறார்கள். இப்படி ரொம்பவும் விலகிப் போகிறபோது மனசில் அன்பு, ஐக்கிய பாவம் எல்லாம் குறையத்தான் செய்யும். இதனால்தான் ஒரு வேளை இப்போது ஆசாரக்காரர்கள் என்றாலே மநுஷாபிமானம் இல்லாமல் வறண்டு போனவர்கள் என்று மற்றவர்கள் நினைக்கிற மாதிரி ஆகியிருக்கலாம். ஆனால் நம் சநாதன தர்மத்தை உள்ளபடி பின்பற்றுவதானால் அதற்கு ஸம்ஸ்காரங்கள் எத்தனை அவசியமோ அத்தனை அவசியம் ஆத்ம குண அபிவிருத்தியும். அப்படிப்பட்ட குணங்களில் முதலில் அருளுடைமையைத்தான் சொல்லியிருக்கிறது. யாக யக்ஞாதிகள் யதேஷ்டமாகச் செய்த ரந்திதேவனைவிட இதற்கு வேறு உதாரணம் வேண்டாம். அவன் கதை கொஞ்சம் சொல்கிறேன். (தொடரும்)



இன்று, பதில் சொல்லப் பலர் தயாராக இருக்கின்றனர். 'கேள்வி-பதில்' எல்லாப் பத்திரிகைகளிலும் இடம் பெற்று விட்டன. ஒரே கேள்வியை எல்லாப் பத்திரிகைகளுக்கும் அனுப்பினால் என்னென்ன பதில்கள் கிடைக்கும்?

கேள்வி: உண்மை என்பது என்ன? பொய்ம்மை என்பது என்ன?

கரிகாலன்: காலமெல்லாம் கன்னித் தமிழுக்காகப் பணி புரிந்தவர் அண்ணா என்பது உண்மை. அவருடன் அப் பணிகள் நின்று விட்டன என்று கூறப்படுவது பொய்ம்மை.

சோ: உங்களைப் பார்த்தால் எனக்குப் பரிதாபமாக இருக்கிறது. உண்மை என்ன என்று தெரியாமலேயே இந்தச் சமூகத்தில் வளர்ந்து விட்டீர்கள்.

சாவி: இரண்டும் 'மை'கள்தான். இந்த மைகளைப் பே'நா'வில் போட முடியாது. நம் நாவில் வருபவை இவை!

அரசு: உண்மை வெண்மை என்றால் பொய்ம்மை கருமை. உண்மை அருள் என்றால் பொய்ம்மை மருள். உண்மை வாழ்வு என்றால் பொய்ம்மை தாழ்வு. உண்மை முழுமை என்றால் பொய்ம்மை வெறுமை.

தமிழ்வாணன்: 'துப்பாக்கி வெடித்தது' என்ற எனது அடுத்த நாவலில் துப்பறிய வருபவர் சங்கர்லால் என்பது உண்மை. விமான விபத்தில் சங்கர்லால் ஜப்பானில் இறந்துவிட்டார் என்பது பொய்.

மூஷிகர்: பொய் சொல்வது வழக்கம் என்று ஒருவன் சொன்னால் அது உண்மை. உண்மை மட்டும் கூறுவது வழக்கம் என்றால் அது பொய்.

— 'நந்தி'



பகவத் வசனாம்ருதம்

'வேதாந்தம் என்றால் தூக்கம் வரும்' என்பார்கள். வேதாந்தம் ஒரு வறட்டு விஷயம் என்பதால் அல்ல; வேதாந்தத்துக்கு விளக்கம் காட்டவேண்டி வந்தால் தூக்கத்தைத் திருஷ்டாந்தமாகக் காட்ட வேண்டி வரும் என்பதற்காக.

ஆனந்த நிலை என்பது என்னவென்று கேட்டால், மனிதன் உறக்கத்தில் எவ்வித சுக-துக்கங்களுக்கும் இலக்காகாமல், தன் நிலை மறந்து, உலக நிலை மறந்து ஆன்ம-பரமான்ம ஐக்கியம் என்றால் என்ன என்றுகூடத் தெரியாமல் இருக்கிறானே, அதையே உதாரணம் காட்டி விளங்க வைப்பார்கள்.

பகவான் ரமணரும், **பகவத் வசனாம்ருதம்** என்னும் **திருவருள்** மொழியில், தூக்கத்தையே உதாரணம் காட்டிப் பல தத்துவார்த்தமான கேள்விகளுக்கும் விளக்கம் தருகிறார்.





பகவான் ரமணர்

அருணையில் வாழ்ந்த முனிவரான பகவான் ரமணர், சிதம்பர தரிசனத்தாலும் திருவாரூரில் பிறத்தலாலும், காசியில் மரித்தலாலும் அருணையை நினைத்தலாலும் கிடைக்கும் முக்திக்கு அருமையான விளக்கம் தந்து, தரிசனம், பிறத்தல், இறத்தல், நினைவு கூர்தல் என்னும் இந்த நான்கும் ஒன்றே என்பதைத் தெளிவாக்குகிறார்.

ஆன்மீக விஷயங்களை விளக்குவதற்கு வடமொழியும் – தென்மொழியும் கலந்த உரைநடை கைகோத்து நடக்கிறாற்போல் உதவுகின்றன.

பதிப்புரையில் இந்நூல் ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதென்று கூறுகிறவர்கள், 'பற்பல நிலைகளினின்று கேட்கப்படும் பல்வேறு கேள்விகளுக்குப் பெரும்பாலும் தமிழ் மொழியிலேயே பகவான் அருளிய விடைகளின் தொகுப்பாகும் இந்த நூல். பெரும்பாலும் உடனிருந்து கேட்ட ஒருவராலேயே தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பது இந்நூலின் சிறப்பாகும்' என்கிறார்கள். ஆக, வேதாந்த விசாரம்போலவே



இந்நூலின் மொழிபெயர்ப்பு ரகசியமும் இலகுவில் விளங்குவதாயில்லை. **– ரா.வீ.**

பிரசுரம்: ஸ்ரீ ரமணாச்ரமம், திருவண்ணாமலை; விலை: ரூ. 6.00.

திருச்சிற்றம்பலம்

அநபாயன் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் சமாதான தேவதை கம்பீரத்துடன் கொலு வீற்றிருந்தது. அரசன் அநபாயன் இறைத் தொண்டில் இறங்கினான். சோழ குல மன்னனைப் பழி வாங்கும் நோக்கத்துடன் இரு சகோதரர்கள் சமய வெறியைக் கிளப்பி நாட்டில் குழப்பத்துக்கு வித்திடுகிறார்கள். அந்தச் சகோதரர்கள் யார்? அதை மர்மமாக வைத்திருப்பது நாவலைப் படிக்கத் தூண்டும் மர்ம முடிச்சு.

திருச்சிற்றம்பலம் நாவலில் மூன்று கதாநாயகிகள். ஏழிசை வல்லபி, பரிவாதினி, முக்கோக்கிழானடி – ஏழிசை வல்லபியும், முக்கோக்கிழானடியும் மன்னர் அனபாய

னிடம் மனத்தைப் பறி கொடுத்தவர்கள். பரிவாதினி காளத்தி தேவனிடம் மனத்தைப் பறிகொடுத்து அவனது கொடுங்கோன்மை யைப் புரிந்து கொண்ட பின் உயிர் விடுகிறாள்.

இளவரசி மூக்கோக்கிழானடி தன் இணை யற்ற சாகசங்களால் விரோதிகளின் சதித் திட்டங்கள் அநபாயனைப் பாதிக்காமல் காக் கிறாள். ஏழிசை வல்லபி இவ்வுலகைவிட்டு மறைந்து அநபாய சோழனின் இன்ப வாழ் வுக்கு வகை செய்கிறாள்.

அநபாய சோழ மன்னரின் அமைச்சர் அருள்மொழித் தேவர் தில்லைத் திருச்சிற்றம் பலத்தின் திருமுன்றில் சேக்கிழாராகத் திருவடியார்களின் திருச்சரிதத்தைத் தெய்வத் தமிழில் பாடத் தொடங்குவதோடு நாவல் முற்றுப் பெறுகிறது. இனிய தமிழ் மணம் நாவல் நெடுக கமழ்கிறது. —பி.எஸ்.எம்.

ஆசிரியர்: ஜெகசிற்பியன், பிரசுரம்: வானதி பதிப்பகம், தியாகராய நகர், சென்னை — 17; ரு. 15.00.

கடைசிப் பக்கம்

எண்ணங்களைத் தொகுத்துப் புள்ளி புள்ளி யாக வைத்து வண்ணக் கோலங்களாக்கும்

கண்ணதாசன்



வித்தையைக் காட்டுகிறது இந்நூல். சரம் சரமாக வளர்கிறது ஒருபுறம்; இழை இழை யாக இழுபட்டுத் தேராகவும், மாளிகையாக வும், பூத்துக் குலுங்கும் நந்தவனமாகவும் கோலங்கள் உருவாகின்றன — ஆம், யாவும் தத்துவக் கோலங்கள். வேதாந்த, சித்தாந்த விஸ்தாரக் கோலங்கள்.

வாழ்க்கையின் பல புதிர்களுக்கு இந்நூலில் விடை காணலாம். தத்துவம் என்றதும் விளங்கிக் கொள்ள முடியாத விஷயங்கள் என்று கருதிவிடக் கண்ணதாசன் இடம் அளிப்பதில்லை. அறிவுரைகளாகத் தொகுத்து அறுவையாக்கும் காரியமும் அவரிடம் கிடை யாது. நட்புறவோடு அநுபவ ஞானத்தின் விளைவாக எழுந்த கருத்துக்களை வெளியிடு கிறார். அவை நம்மைச் சிந்திக்க வைக்கின்றன.

கவியரசு கண்ணதாசன் ''கல்கி'' பத்திரி கையில் கடைசிப் பக்கமாக இக்கட்டுரைகளை எழுதி வந்தபோது வாசகர்கள் முதல் பக்க மாகக் கொண்டு படித்து மகிழ்ந்தனர்.

சிந்திக்க வைக்கிற அதே நேரத்தில் கதைப் புத்தகம் மாதிரியோ, நாவல் புத்தகம் மாதி ரியோ ஒரே மூச்சில் படித்து முடித்துவிடும் ஆர்வத்தையும் ஊட்டுவதுதான் இந்த நூலின் தனிச் சிறப்பும் வெற்றியும்.

பிரசுரம்: விஜயா பப்ளிஷர்ஸ், சென்னை-17 விலை ரு. 6.00. — ஸோமாஸ்

ஞாபகம்

''1975ம் ஆண்டின் பன்னிரண்டு சிறந்த சிறுகதைகள்'' என்று இந்தப் புத்த கத்தின் தலைப்பிலேயே போட்டிருக்கிறார்கள். இலக்கிய சிந்தனை அமைப்பாளர்கள் பல்வேறு பத்திரிகைகளிலிருந்து மாதமொரு சிறுகதை யைச் சிறந்ததென விமர்சகர்களை விட்டுத் தேர்ந்தெடுக்கச் சொன்ன தொகுப்பு இது.

இக்கதைகளைத் தேர்ந்தெடுத்த பெரும் பான்மையான விமர்சகர்கள் ஒரு சிறு நிகழ்ச்சி அல்லது ஓர் அற்ப உணர்வை மையமாகக் கொண்டு எழுதப்பட்டிருக்கும் சிறுகதை களையே சிறந்ததெனப் பொறுக்கியுள்ளனர். அதனால் பல்வேறு எழுத்தாளர்களின் சிறு கதைத் தொகுப்பில் நியாயமாக நாம் எதிர் பார்க்கக்கூடிய பல்வேறு வண்ணங்களை (Variety) காண முடியவில்லை.

இந்தப் பன்னிரண்டு கதைகளிலும் '75ம் ஆண்டின் சிறந்த சிறுகதையாக ஸ்ரீமதி ராஜம் கிருஷ்ணன் தேர்ந்தெடுத்துள்ள ''ஞாபகம்'' என்ற வண்ணதாசனின் கதை தீபத்தில் வெளிவந்தது. மேலே விவரித்த ரொம சாத்தியமான சிறுகதை உத்தியில் கணிசமான வெற்றி பெற்றுள்ளது. சென்ற ஆண்டும் வண்ணதாசனின் கதையே சிறந்ததென மதிக்கப்பட்டதையும் குறிப்பிடலாம்.

மற்றொரு சிறந்த கதை ''கலைமகள்''ளில் வெளியான அரவிந்தனின் ''வேஷங்கள்''. இது சினிமா உலகத்தையும் அதன் பகட்டில் மயங்கிச் சீரழியும் இன்றைய இளவட்டத் தையும், பழைய பண்பாட்டில் ஊறியவர் களின் உன்னத மனிதப் பண்பையும் ஒருங்கே தத்ரூபமாகச் சித்திரித்துக் காட்டுகிறது. கதை யம்சமுள்ள நல்ல இலக்கியப் படைப்பு.


மற்றொரு கதை ''கல்கி''யில் வெளியான சுஜாதாவின் ''தாஜ்மஹால்''. ஒரு தனி மனிதனின் ''சொத்து'' என்ற உயிரற்ற ஜடப் பொருளுக்கப்பால் அவனுடைய கன வுகள், ஆசைகள், துயரங்கள், உழைப்புக்கள் எல்லாம் அதில் நிழலாடுவதைச் சித்திரிப்பதில் சுஜாதா புது உத்தியைக் கையாண்டிருக்கிறார். — எஸ். வி. எஸ்.

பிரசுரம்: வானதி பதிப் பகம், தியாகராய நகர், சென்னை — 17. விலை: ரு. 5.00.



வண்ணதாசன்

பழனி கோயிலுக்கு உங்கள் பணக் காணிக்கைகளை இந்தியன் பாங்க் இலவசமாக ஏற்றுக் கொள்கிறது.



பழனி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்குப் பணக் காணிக்கைகளை இந்தியன் பாங்க் ஏற்றுக் கொள்கிறது.

உங்கள் காணிக்கைகள் அனைத்தும் அதே மதிப்பில் தேவஸ்தானத்துக்கு மாற்றப்படும்.

இந்தியாவில் உள்ள எமது கிளைகள் அனைத்திலும் நீங்கள் இக் காணிக்கைகளைச் செலுத்தலாம்.

இந்தியன் பாங்க்

இந்திய அரசுக்கு
முற்றிலும் உடைமையானது
தலைமை அலுவலகம்:
17, வடக்கு கடற்கரைச் சாலை,
சென்னை 600001

ஆகஸ்ட் 15, 1907 முதல்
நாட்டுக்குப் பணியாற்றும் பாங்க்



ஆசிரியர்: முழுத் தேங்காயையே பார்த்ததில்லை என்கிறாயே, ஆச்சரியமாயிருக்கே!

மாணவன்: ஆமாம் சார்! எங்கப்பா கச்சேரிக்குப் போய்விட்டு வரும் போதெல்லாம் தேங்காய் மூடியைத்தான் கொண்டு வருவார்.

— திருச்சி ராஜகோபாலன்


தங்க விழா கண்ட தலைநகரத் தமிழ்ப் பள்ளி

பிரதமர் இந்திரா காந்தி தலைமையில் சிறப்பாகப் பொன் விழாக் கொண்டாடிய தில்லி தமிழ்க் கல்விச் சங்கத்துப் பள்ளிக்கூடங்களில் ஏதாவது தனித்தன்மை உண்டா?

'ஒன்று இரண்டா எத்தனையோ!' என்கிறார் பிரின்சிபால் திரு என். எம். ராஜாராம்.

தில்லியில் நானூற்று நாற்பது பள்ளிக்கூடங்கள் உள்ளன. ''இதிலே நம்ம பசங்கள் இருபது வருஷங்களாக அடிக்கடி முதல் நிலையைப் பிடித்தபடி இருக்கிறார்கள். தலைநகரத்துத் தமிழர்களின் குழந்தைகளுக்கு நல்ல கல்வி அளிக்கும் பொறுப்பை நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். தமிழும் ஆங்கிலமும் ஹிந்தியும் சம்ஸ்கிருதமும் படிக்கும் இந்தக் குழந்தைகளின் பொதுஅறிவு பரவலாக இருக்கிறது. வடக்கத்தியக் குழந்தையை விட மொழி அறிவு அதிகம் பெறுகிறார்கள். தமிழகத்தில் படிக்கும் குழந்தைகளைவிட விஷய அறிவு அதிகம் பெறுகிறார்கள்.''

பாரதப்பில் வளர்ந்து வரும் தலைநகரத்திலே ஏழு வெவ்வேறு பேட்டைகளில் இன்று அமைந்துள்ள இந்தப் பள்ளிக்கூடத் தொடரின் வித்து ஐம்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு விஜயதசமி திருநாளில் சிம்லாவில் ஊன்றப்பட்டதாம். ஒரே ஒரு ஆசிரியருடன் (பி. எச். எஸ். அய்யர்) ஒரே ஒரு மாணவியுடன் தொடங்கிய மதராஸி எஜுகேஷன் அசோஷியேஷன் இன்று சுமார் 7000 மாணவ — மாணவியருக்குக் கல்வி வழங்குகிறது. இங்குள்ள 350 ஆசிரியர்களில் முக்கால்வாசிப் பேர் ஆசிரியைகளே.




இதில் தமிழர் அல்லாத பிற மாநிலத்தவரும் உள்ளனர்.

''தமிழ்க் குழந்தைகள் ஹிந்தியில் நன்கு மார்க் வாங்கினால், ஹிந்தி ஆசிரியரான காந்தகுமார் ஆர்யா என்னும் குஜராத்தியரின் மகன் தமிழிலே முதல் மார்க் வாங்குவதும் இங்கே ஒரு சிறப்பு!'' என்கிறார் திரு ராஜாராம்.

இவர் சென்ற ஆண்டு தேசிய விருது பெற்ற ஆசிரியர். ஆங்கில இலக்கியத்தில் பட்டம் பெற்று, சில காலம் பார்பாய்த் தினசரிகளில் வேலை பார்த்த இந்தப் பிரின்சிபாலின் முதல் ஆர்வம் ரசாயனமே. ''நாடு முழுவதும் 350 பேருக்கு சயன்ஸ் டேலண்ட் பரிசு கிடைக்கிறது. இதில் சுமார் நூறு பரிசு தில்லி மாணவருக்கு வந்துவிடும். இங்கே விஞ்ஞான ஆர்வமும் அறிவும் நிறைந்த மாணவர் அதிகம். இந்தப் போட்டியில் நம்ம பசங்கள் முப்பது பேராவது வருஷா வரும் பரிசு தட்டிக்கொண்டு போவார்கள்'' என்கிறார்.

பலத்த போட்டியில் கிடைக்கும் பாண்டிச்சேரி 'ஜிப்மர்' மருத்துவக் கல்லூரி அட்மிஷனையும், ஐ.ஐ.டி. அட்மிஷனையும் இந்த மாணவர்களில் பலர் எளிதில் தட்டிக்கொண்டு போகிறார்கள் என்பதை அறியும் போது இங்கே கிடைக்கும் கல்வியின் தரம் புரிகிறது.

பிரின்சிபால் ராஜாராமின் சரளமான பேச்சும், சிரிப்பும், இலேசான கண்டிப்பும் தில்லி வாழ் தமிழருக்குப் பழகியவை; ஆயிரக்கணக்கான மாணவருக்குப் பிடித்தவை. —அ. ஆ.



▶ தமது மகள் அன்னபூர்ணாவுக்கும் பள்ளியின் தலைசிறந்த மாணவர்கள் பட்டியலைச் சுட்டிக் காட்டுகிறார் முதல்வர் ராஜாராம். —படம்: டில்லி ராஜு

உயர்தரமான சுவைக்கும் உண்மையான சிக்கனத்திற்கும்

ரிக்கரி
இன்ஸ்டண்ட்



அரை டீஸ்பூன் அளவே போதும்

(தேவைக்கேற்ப குறைத்தோ அதிகமாகவோ உபயோகிக்கவும்)



50 கிராம் சீசாவில் 37 கோப்பைகள்

மற்றெந்த 50 கிராம் சீசாவை காட்டிலும் 7 கோப்பைகள் அதிகமாக ரிக்கரி அளிக்கிறது. ஏனெனில ரிக்கரி ஸ்டிராங்கானது. இது சிக்கனத்திற்கு ஒரு சிறந்தவழி.



அதிக ஸ்டிராங்கானது, அதிக மணமுள்ளதுங்கூட: ருசியும், மணமும் மிகுந்த ஸ்டிராங்கான தயாரிப்பு. ஆகவே, ஒரு கோப்பை மணமும் ருசியும் மிக்க நல்ல காப்பிக்கு குறைந்த அளவு ரிக்கரியே போதும்.



இப்போது ரிக்கரியின் விலை கணிசமாகக் குறைவு!

50 கிராம் சீசாவுக்கு 50 பைசே விலை குறைக்கப்பட்டுள்ளது.

ரிக்கரி
இன்ஸ்டண்ட்

வறுத்து அரைத்த காப்பியின் சுவையை ஏறக்குறைய அதே விலையில் உங்களுக்கு அளிக்கிறது

NRCM-27-75TAM

அமரர் கல்கி



அத்தியாயம் 13

மலைப் பாதை

ராமப்பட்டணத்திலிருந்து ஏல மலையின் உச்சி இருபது மைல் தூரம்தான். மொத்தம் மூவாயிரத்து ஐந்நூறு அடி உயரம்தான். ஹோம்ரூல் கோபாலகிருஷ்ண முதலியாரின் ஹிமகிரி காப்பி எஸ்டேட் இன்னும் கிட்டத்திலேயே மூவாயிரத்து இருநூறு அடி உயரத்தில் அமைந்திருந்தது. அந்த எஸ்டேட்டை நோக்கிக் கல்யாணம் உற்சாகமாகக் காரோட்டிப் போய்க் கொண்டிருந்தான்.

சாலையின் இருபுறமும் காப்பிச் செடிகளில் வேணி தொடுத்தாற்போல் வெண்மை நிறத்தில் காப்பிப் பூக்கள் மலர்ந்திருந்தன. காலைச் சூரியனின் ஒளியில் வெள்ளித் தகடுகளாக ஸில்வர் ஓக் மரங்களின் இலைகள் தகதகத்து மலையமாருதத்தில் சலசலத்தன. அவை காப்பிச் செடிகளுக்கு நிழல் கொடுத்தன. ஆனால் குடை விரித்தாற்போன்று சூரிய ஒளியை மறைத்து விடாமல் தேவையான அளவில் வடிகட்டிக் கொடுத்தன. இப்படி ஒரு தாயின் பரிவுடன் காப்பிச் செடிகளைக் கவனித்துக் கொள்ளும் பணியைக் காப்பித் தோட்டங்களின் இதர சில பகுதிகளில் ஆரஞ்சு, பேரி, கொய்யா போன்ற வேறு சில மரங்கள் செய்து பழங்களும் ஈந்து கொண்டிருந்தன. உயரமான மரங்களில் உருவாகியிருந்த தேன் கூடுகளின் மணமும் பல்வேறு மலர்களின் நறுமணங்களும் பட்சி ஜாலங்களின் இனிய கானங்களும் காற்றில் கலந்து வந்து மலை வாசஸ்தலம் உடலுக்குத் தந்த குளுகுளுப்புடன் மனத்துக்குக் கிளுகிளுப்பையும் ஊட்டின.

கல்யாணம் அடிக்கடி பார்த்துப் பழகிய காட்சிகள்தாம் இவை என்றாலும் ஒவ்வொரு முறை பார்க்கும்போதும் புதுப் புது குதூகல உணர்வுகளை அவன் அடைவது வழக்கம். இன்றோ இந்த எழிலையெல்லாம் தன்னுடன் சேர்ந்து பவானியும் அனுபவிக்கிறாள் என்ற எண்ணமானது அவனை எங்கோ சொர்க்க வானில் உயரே உயரே கொண்டு சென்றது! அந்த அளப்பரிய ஆனந்தத்தைக் காரின் பின் ஸீட்டில் பவானியின் மாமா குணசேகரன் உட்கார்ந்திருக்கிறார் என்ற நினைப்பு கூடக் குறைத்துவிடவில்லை.

குணசேகரன், "பவானி! இத்தனை வருஷமா நான் ராமப் பட்டணத்தில்தானே இருக்கேன், இவ்வளவு அழகான மலைகளும் நந்தவனங்களும் இங்கே இருப்பதை அறியாமலேயே காலத்தை ஓட்டியிருக்கிறேன்! கல்கத்தாவிலிருந்து நீ வந்து அழைத்துப் போய்க் காட்டுகிறாய்! நல்ல வேடிக்கை" என்றார்.

"ஆமாம், சென்னையிலேயே இருப்பவர்கள் மகாபலிபுரம் போயிருக்க மாட்டார்கள்; ஏன், லைட் ஹவுஸ்கூட ஏறியிருக்கமாட்டார்கள்" என்றான் கல்யாணம்.

"நான் அப்படியில்லை; எல்லா இடங்களையும் பார்க்க ஆசைப்படுவேன். சந்தர்ப்பம் கிடைக்காவிட்டால் ஏற்படுத்திக் கொள்ளவாவது செய்வேன்" என்றாள் பவானி.

இந்தப் பயணத்தைக்கூட மேற்கொள்ள அவள் தானாகவேதான் முயற்சி எடுத்துக் கொண்டாள். மாஜிஸ்திரேட் கோவர்த்தனன், 'ஹோம்ரூல் கோபாலகிருஷ்ணனுக்கு ஏலமலையில் எஸ்டேட் உண்டு. அங்கிருந்து சில குண்டர்களை அனுப்பி என்னைத் தாக்கப் போவதாகக் கல்யாணம் மிரட்டினான்' என்று சொன்னதிலிருந்து இங்கே மலை ஏறிப் பார்த்துவிட அவள் ஆவலாயிருந்தாள். அத்தோடு மாஜிஸ்திரேட்டின் குற்றச்சாட்டைச் சற்று ஆராய்ந்து பார்த்து வரும் எண்ணமும் ஏற்பட்டிருந்தது.

எனவே இரண்டு நாட்களுக்குப் பிறகு ஒரு சமயம் கல்யாணம் வழக்கம்போல் அவளுக்குத் தன் காரில் லிஃப்ட் தருவதாகக் கூறிய போது, அவள் இனியும் ஆவலை அடக்க முடியாதவளாக, "நான் உங்கள் காரில் இன்று முதல் ஏறப் போவதில்லை; உங்கள் மேல் எனக்குக் கோபம்" என்று பேச்சை ஆரம்பித்தாள்.

"அடடா! நான் என்ன தப்பு பண்ணி விட்டேன்?" என்றான் கல்யாணம்.

"உங்களுக்கு இங்கே ஏலமலையில் எஸ்டேட் இருப்பதாக என்னிடம் சொல்லவே இல்லையே?" என்றாள் பவானி.

"சொல்லிக் கொண்டிருப்பார்களா? அழைத்துப் போக வேண்டும். கோடை



விடுமுறையில் ஒரு மாதம், இரண்டு மாதம் என்று எங்கள் குடும்பம் அங்கே போய்த் தங்குவதுண்டு. ஆனால் இந்தத் தடவை அப்பா, அம்மாவை மட்டும் அனுப்பி விட்டு நான் இங்கேயே இருக்கத் தீர்மானித்துவிட்டேன்.''

'' ஏன் ? நாடக ஒத்திகை, சமூக சேவை எல்லாம் தடைப்படுமே என்று ?''

''அப்படி யொன்றும் இல்லை. ராமப் பட்டணமே மலை வாசஸ்தலம் போல் குளிர்ந்து காணப்படுகிறது எனக்கு, நீங்கள் இங்கு குடியேறிய பிறகு !''

'' அழகுதான், எனக்கு மலைச் சாரல்களை யெல்லாம் பார்க்க ரொம்பப் பிடிக்கும். உங்கள் பெற்றோர் எப்போது புறப்படுகிறார்கள், சொல்லுங்கள். அவர்களுடன் நான் போகிறேன்; நீங்கள் வேணுமானால், இங்கேயே இருந்து சமூகப் பணிகளைச் சிரத்தையாகக் கவனித்துக் கொண்டிருங்கள் !''

''சரி, அப்படியே செய்வோம்! அந்த விஷயத்துக்கு ஒரு முடிவு கட்டியாகி விட்டது. இப்போது காரில் ஏறலாம் அல்லவா ?'' என்றான் கல்யாணம்.


பவானி சிரித்துக் கொண்டே அவன் அருகில் அமர்ந்தாள். '' நானும்

சீக்கிரத்தில் ஒரு கார் வாங்கப் போகிறேன்'' என்றான்.

''போச்சுடா ! உங்களுக்கு அவ்வப்போது ஒரு லிஃப்ட் தருகிற திருப்தியாவது எனக்கு இருந்தது. அதற்கும் ஆபத்து வந்துவிட்டதா ?'' என்றான் கல்யாணம்.

''நீங்கள் தாராள மனமுடையவராக இருப்பதால் அளவுக்கு மீறி உரிமை எடுத்துக் கொள்ளலாமா நான்? கடைசியில் நான் காரில் ஏறுவதே பெரிய தொந்தரவாக நீங்கள் எண்ணும் காலம் வந்துவிடும்.''

'' நீங்கள் புதுக் கார் வாங்கின மறு நாளே இந்தக் கார் ரீப்பேராகிவிடும் பாருங்கள். அப்புறம் நான் உங்களிடம் அடிக்கடி லிஃப்ட் கேட்பேன். அப்போது என்ன பண்ணு



வீர்கள்? இது ஏதடா பெரிய தொந்தரவாப் போச்சு என்று நினைப்பீர்களா?''

பவானி கலகல வென்று சிரித்தாள். ''உங்கள் தகப்பனார் இந்த வட்டாரத்திலேயே பெரிய வழக்கறிஞர் என்று பெயர் வாங்கியதில் அதிசயமில்லை. நீங்களே இந்தப் போடு போடும்போது அவர் எதிர்த்தரப்பு வக்கீல்களை என்ன பாடு படுத்துவார் என்று ஊகிக்க முடிகிறது.''



''அப்பா, இப்போதெல்லாம் கேஸ்களை ரொம்பக் குறைத்துக் கொண்டுவிட்டார். எஸ்டேட் விவகாரம் எல்லாம் கூட என் தலையில் கட்டிவிட்டார். மாசத்தில் இரண்டு மூன்று தடவையாவது மலை ஏறி இறங்க வேண்டியிருக்கிறது. இங்கிருந்து ஒரு மணி நேரத்தில் போய்ச் சேர்ந்து விடலாம். அடுத்த முறை நான் போகும் போது நீங்களும் வரலாமே ?''

''ஆகட்டும், மாமாவைக் கேட்டுவிட்டுச் சொல்கிறேன்'' என்றாள் பவானி.

''அவரையும் அழைத்து வாருங்கள். அவருக்கும் ஒரு மாறுதல் வேண்டாமா ?''

இந்த உரையாடலின் விளைவுதான் இந்த ஞாயிற்றுக்கிழமை நாடக ஒத்திகையை ஒத்திப் போட்டுவிட்டு அவர்கள் கிளம்பியிருந்தார்கள். கல்யாணம் ஒரே குஷியான மனநிலையில் இருந்தான். ஆனால் அவன் காருக்கு அது பிடிக்கவில்லை. அவன் கவனம் முழுவதும் தன்னிடமே திருப்பப்பட வேண்டும் ; பவானிக்கு அதில் பங்கு சேரக் கூடாது என்று கருதியது போல் அது 'மக்கர்' செய்து நின்று விட்டது. காரின் முன்புறமிருந்து குபுகுபு என்று ஆவி அடித்தது.

'' பார்த்தீர்களா ? இதற்குத்தான் நான் புதுக் கார் வாங்குகிறேன் என்றேன். பாதி தூரமாவது வந்திருப்போமா ?''

''முக்கால் திட்டத்துக்கு மேலேயே வந்தாகிவிட்டது. இங்கேயே இருங்கள். ஐந்து நிமிஷத்தில் வந்து விடுகிறேன்'' என்ற கல்யாணம் தொலைவில் தெரிந்த சில பண்ணையாட்களின் குடிசைகளை நோக்கி நடந்தான், தண்ணீர் பெற்று வர.

பவானி காரைவிட்டு இறங்கினாள். காலாற நடந்தாள். அவள் கரத்தில் ஒரு பைனகுலர் தொங்கிக் கொண்டிருந்தது. ஒரு மரத்தின் நிழலில் சாலை ஓரமாக நின்று பைனகுலர் வழியே சுற்று வட்டாரத்தை நோட்டம் விட்டாள்.

''ரொம்ப ஓரமாகப் போகாதே அம்மா! கிடுகிடு பள்ளம் !'' என்று காரினுள்ளேயிருந்து மாமா குணசேகரன் குரல் கொடுத்தார்.

''ஜாக்கிரதையாக இருக்கிறேன், மாமா!'' என்று கூறிய பவானி பைனகுலர் வழியே தொலைவில் பட்சிகள், மிருகங்கள் ஏதும் தெரிகின்றனவா என்று பார்த்தாள்.

அவ்விதம் நோக்கியபோது அவள் திகைப்பும் வியப்பும் அளிப்பதான ஒரு காட்சியைக் கண்டாள்.

கீழே வெகு தூரத்தில் ஒரு மொட்டைப் பாறை மேல் பெண் ஒருத்தி நிற்பது தெரிந்தது. அவள் புடவைத் தலைப்பை நெஞ்சோடு கொணர்ந்து பின்னால் நோங்கவிடாமல் இடக் கரத்தால் ஒரு மூலையை உயரத் தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்தாள். மலைக் காற்றில் அந்தத் தலைப்பு படபடவென்று அடித்துக் கொண்டிருந்தது.

பவானி வைத்த கண் வாங்காமல் அவளைச் சற்று நேரம் பார்த்தாள். அவள் ஆத்மப் பிரதட்சணம் செய்வது போல் மெல்லத் திரும்பி நாலாபுறமும் பார்வையைச் செலுத்துவதைக் கண்டாள்.

ஏதோ கிட்டாத விடுதலைக்காக அவள் ஏங்குவது போலவும் அங்கே வந்து நின்று போனியான ஒரு சுதந்திரத்தைச் சற்று நேரம் அனுபவித்துவிட்டுத் திரும்ப எண்ணுவது போலும் பவானிக்குத் தோன்றியது. அப்படி சுதந்திரப் பறவையாய்த் தன்னைச் சற்று நேரம் பாவித்துக் கொண்டு தாற்காலிக மன ஆறுதலையேனும் அடைய எண்ணும் அந்தப் பெண் யார் ? பைனகுலர் வழியாகப் பார்த்தாலும்கூட இத்தனை தூரத்திலிருந்து இன்

ஞர் என்று இனம் கண்டு கொள்வது கஷ்டம். 'ஆயினும்.... அவள்...... ஒரு வேளை கமலாவாக இருக்கலாமோ?' என்று பவானிக்குத் தோன்றியது.

உடனேயே அப்படி இராது என்றும் நினைத்தாள். 'கமலா தன்னந் தனியாக இப்படிக் கிளம்பி வருவாளா?.... ஏன் வர முடியாது? பஸ் ஏறி மலைப் பாதையில் சற்றுத் தூரம் வந்த பிறகு இறங்கிக் கொண்டிருக்கலாம் இல்லையா ? ஆனால் பார்க்கப் பழக அவள் அத்தனை கட்டுப்பெட்டியாக இருக்கிறாளே....? இருந்தாலென்ன? அப்படிப்பட்டவர்கள்தான் உணர்ச்சிகளை அடக்கிக் கொள்ளுகிற நெஞ்சழுத்தம் உள்ளவர்களாகவும் விளங்குவார்கள். யாரும் எதிர்பார்க்க முடியாத காரியங்களைத் திடும்மென்று செய்து வைப்பார்கள்.... சேச்சே, இது கமலாவாக இருக்க முடியாது....ஆனால் கமலாவாக இருந்தால் வியப்பதற்கும் இல்லை.... ஏன், கீழே திரும்பவும் இறங்கிச் சென்றதும் அவளையே கேட்டுவிட்டால் போகிறது. அவளிடம் பேசி அவள் மனத்தை அறிந்து கொள்ள முயல வேண்டும்.'

பவானி பார்த்துக் கொண்டே இருக்கையில் அந்தப் பெண் நாலு பாறைகளை நாலு எட்டில் தாண்டி மலைப் பாதையை அடைந்தாள். பஸ் வரும் சத்தம் அவள் காதில் விழுந்திருக்க வேண்டும். ஒரு வளைவில் திரும்பி இப்போது கண்ணுக்குப் புலப்பட்ட பஸ்ஸை நிறுத்தி அவள் ஏறிக் கொண்டாள். சற்று நேரத்தில் பஸ் பவானியின் கண் பார்வையிலிருந்து மறைந்து விட்டது.

அத்தியாயம் 14

ஹிமகிரி எஸ்டேட்

ஏலமலையில் கோபாலகிருஷ்ண முதலியாரின் எஸ்டேட் பங்களா மிகவும் வசதியாக இருந்தது. சாப்பாட்டுக் கூடம் தவிர, இரண்டு மூன்று பெரிய அறைகள், பங்களாவைச் சுற்றிப் பெரிய தோட்டம் எல்லாம் இருந்தன.

கையோடு டிபன் காரியரில் கொண்டு வந்திருந்த இட்டிலி தோசைகளையெல்லாம் ஒரு கை பார்த்து விட்டுக் குணசேகரன் கட்டிலில் கட்டையைக் கிடத்திக் குறட்டைவிடத் தொடங்கிவிட்டார். உண்ட மயக்கம்.

கல்யாணம் எஸ்டேட் விவகாரங்களில் மூழ்கி மேஸ்திரிகள் மூன்று நான்கு பேர்களை விசாரிப்பதும் கட்டளைகள் இடுவதும் கணக்குப் பார்ப்பதும் பணத்தை எண்ணுவதுமாக இருந்தான்.

பவானி தோட்டத்தில் மெள்ள வளைய வந்தாள். அதில் ஒரு பக்கமாகக் கல்யாணத்தின் 'டப்பா' கார் நின்றது. 'இது இத்தனை உயரம் ஏறி வந்ததே அதிசயம்தான்' என்று எண்ணினாள் பவானி. 'இவ்வளவு பெரிய எஸ்டேட்டுக்கும் பங்களாவுக்கும் சொந்தம் கொண்டாடுகிற செல்வந்தர்கள் அந்தப் பழைய மாடல் காரை விற்க மனமின்றி வைத்திருப்பது விசித்திரம்தான். உயிரற்ற பொருள்களிடம் கூட நாளடைவில் சில சமயம் பாசம் வளர்ந்து விடும் போலும். ஜடப் பொருள்களிடம் கூட அன்பு செலுத்தும் கல்யாணமா அடியாட்களை அனுப்பிக் கையைக் காலை முறித்துவிடுவதாக மாஜிஸ்டிரேட் கோவர்த்தனனை மிரட்டி விருப்பார்? நம்பவே முடியவில்லையே! என்றாலும் காதல் கீதல் என்று அசட்டுத்தனமாக ஏதாவது எண்ணிக் கொண்டால் சில அபத்தக் காரியங்களையும் அதன் விளைவாகச் செய்யலாம் தான்.' யோசித்தபடியே நடந்து தோட்டத்தைக் கடந்து பிரதான சாலைக்கு வந்துவிட்ட பவானி திரும்பிப் பங்களாவை நோக்கினாள். கல்யாணம் காரியங்களை முடித்துக் கொண்டு படி இறங்கித் தன்னை இங்குமங்கும் திரும்பித் தேடுவதைக் கண்டாள். அவன் பார்வையில் படுமாறு நின்று கரம் அசைத்தாள். பங்களா வாசலில் நின்ற காரைத் தட்டிக் கொடுத்துவிட்டு அவன் இவளை நோக்கி நடந்தான். எப்படியோ இரண்டு மூன்று தடவை குளிர்ந்த நீரைக் கேட்டு வாங்கிக் குடித்துவிட்டு அவர்களை இங்கே கொண்டு வந்து சேர்த்துவிட்ட அது, கடமை முடிந்த திருப்தியுடன் நிற்பதாகத் தோன்றியது.

''என்ன யோசனை? இங்கு வந்து நிற்கிறீர்கள்?'' என்றான் கல்யாணம் நெருங்கி வந்து.

''உங்களைக் கணவனாக அடையப் போகிறவள் பாக்கியசாலி என்று நினைத்துக் கொண்டிருந்தேன். இந்தப் பழைய காரிடம் இத்தனை அன்பு செலுத்துகிறவர் மனைவியை எவ்வளவு பிரியமாக நடத்துவீர்கள்?''

''மனைவி பழகிப் பழசான பிறகு அவளிடம் எனக்கு அன்பு பெருக்கெடுக்கும் என்கிறீர்களா? அல்லது ஒரு கிழவியைப் பார்த்துக் கல்யாணம் செய்துகொள் என்கிறீர்களா?''

''இரண்டுமில்லை. இத்தனை பெரிய எஸ்டேட்டை நன்றாகக் கட்டி ஆளக் கூடிய திறன் படைத்தவளாகத் தேடிப் பார்த்துத் திருமணம் செய்து கொள்ளுங்கள்'' என்கிறேன்.

''எஸ்டேட்டுக்கு எஜமானியாவதா முக்கியம்? கணவனின் மனத்தை அன்பினால் ஆளும் சாமர்த்தியமுள்ளவளாக இருப்பதல்லவா விசேஷம்?''

''ஆளுநரையே ஆள்வதற்கு அபாரத் திறமை வேண்டும். நீங்கள் கலகலப்பாகப் பேசும்போதே காரியவாதியாகவும் இருக்கிறீர்கள். இங்கே வந்ததும் வராததுமாக எஸ்டேட் விவகாரங்களில் இறங்கிவிட்டீர்களே!''

''இல்லாதபோனால் இங்கே சில ஆசாமிகள் நம்மையே விழுங்கி ஏப்பம் விட்டுவிடுவார்கள். எஸ்டேட்டில் வேலை செய்பவர்களில் நல்ல மாதிரியானவர்களும் உண்டு, பொல்லாதவர்களும் உண்டு.''

'' பொல்லாதவர்களை ஏன் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் வேலைக்கு?''

''அப்படிப்பட்ட சிலரும் நிர்வாகத்துக்குத் தேவைதான். மற்றவர்களுக்கும் பயம் இருக்கும். ஒழுங்காக வேலை செய்வார்கள். ஆனால் அந்தக் குண்டர்களிடம் நாம் ஏமாந்து

ஆரோக்கியமான உங்கள் கேசத்தின் சுகம்...அதுவே அவளது விருப்பம்!

உங்கள் தலையிலுள்ள கேசம் வளமாக இருப்பதுடன் அழகுறவும் ஆரோக்கியமானதாகவும் இருக்க வேண்டும். துடிப்பூட்டுவதாகவும் வசீகரமானதாகவும் இருக்க வேண்டும். தலையை வாரும்போது உங்கள் விருப்பத்திற்கேற்றவாறு படியவேண்டும்.

அதற்குத் தேவை புரதம் செறிந்த பிரில்க்ரீம். அது கேசத்திற்கு ஆரோக்கிய மூட்டுவதோடு, அதை நன்கு படியவும் வைக்கிறது.



பிரில்க்ரீம் 'பிசுபிசு'வென்று ஒட்டுவதில்லை. எண்ணெய் பிசுக்கற்றது. அது கேசத்தை அழகுறப் படிய வைக்கிறது. விளைவு. அவளது விரல்கள் உங்கள் அழகான கேசத்தை அன்போடு வருடத்துடிக்கின்றன.

கேசத்தின் வேர்களுக்கு வலிவூட்டுவதற்கும் ஊட்டமளிக்கவும் பிரில்க்ரீமில் புரதம் சேர்க்கப் பட்டுள்ளது. கேசம் ஆரோக்கியத்துடன் இருந்தாலே அதை அழகுற வாரிப் படிய வைக்க முடியும்.

மிடுக்காகத் தோற்றமளியுங்கள்.

புரதம் செறிந்த பிரில்க்ரீம் உபயோகியுங்கள்.



புரதம் செறிந்த

பிரில்க்ரீம்

அழகான முடிக்கு ஆரோக்கியமான வழி.

BRL-9811



சென்னை, ஜாயிண்ட் கமர்ஷியல் டாக்கீஸ் அதிபர் ஸ்ரீ K. மணி அவர்கள் குமாரர் சிரஞ்சீவி M. ஹரிஹரனுக்கும், மதுரை ஸ்ரீ R. சூரியநாராயணன் அவர்கள் குமாரத்தி சௌ. விஜிக்கும் மதுரையில் 23-4-76 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள் !

விடக் கூடாது. தலைக்கு மேல் ஏறிவிடுவார்கள்.''

''குண்டர்கள் என்றால்...?''

''ஆயிரம் ரூபாய்க்காக ஆறு தலைகளைச் சீவிவிடக்கூடிய முரடர்களும் இந்தப் பகுதிகளில் இருக்கிறார்கள்!''

''அப்படியானால் மாஜிஸ்டிரேட் சொன்னதில் ஓரளவு உண்மையும் இருக்கலாம் என்று சொல்லுங்கள்!''

''கோவர்த்தனனா? என்ன சொன்னார்?''

'' 'எஸ்டேட்டில் உள்ள ஆட்களை அனுப்பிக் கையைக் காலை முறித்துப் போட்டுவிடுவேன்' என்று அவரை மிரட்டினீர்களாமே?''

''அடப் பாவமே! அப்படியா சொன்னார்? பெரிய கஜப் போக்கிரியாக இருக்கிறாரே? இவனுக்கெல்லாம் மாஜிஸ்டிரேட் உத்தியோகம் வேறு தருகிறார்களே அதைச் சொல்லுங்கள்!''

''மிஸ்டர் கல்யாணம்! நீங்கள் கோவர்த்தனனையோ அவர் வகிக்கிற பதவியையோ இளக்காரமாகப் பேசுவது தவறு. ஏற்கெனவே ஒரு தடவை உங்களை எச்சரித்திருக்கிறேன். அவரும் மனிதர்தாம். சில குறைகள் அவரிடமும் இருக்கலாம். ஆனால் அதனால் அவர் தம் பதவிப் பொறுப்பை ஒழுங்காக நிறைவேற்ற மாட்டார் என்று நினைப்பதற்கில்லை.''

''நான் எதுவும் சொல்லவே வேண்டாம். கூடிய சீக்கிரம் அவர் சாயம் தானாக வெளுத்து விடும். அப்போது நீங்களே புரிந்துகொள்வீர்கள்.''

''நீங்கள் இருவருமே ஏதோ அசட்டுப் பொறாமைக்கு ஆளாகி ஒருவரையொருவர் ஏசிக்கொள்கிறீர்கள் என்று எனக்குத் தோன்றுகிறது.''

''அவருக்கு என்மீது பொறாமையோ என்னமோ எனக்குத் தெரியாது. அதனால்தான் ஒருவேளை என்மீது வீண்பழிகள் சுமத்துகிறார் போலிருக்கிறது. இருக்கலாம். ஆனால் அவரைப் பற்றி நான் ஏற்கனவே உங்களிடம் கூறியது — அதாவது கத்தியைக் காட்டி மிரட்டினார் என்பது நூற்றுக்கு நூறு உண்மை. அதோடு வேறு ஒரு விஷயமும் எனக்கு இப்போது தெரிய வந்திருக்கிறது.''

''ஆரம்பித்து விட்டீர்களா? புதிதாக ஒரு கதையை?''

''நீங்கள் நம்ப மாட்டீர்கள்; வேண்டுமென்றே நான் மீண்டும் வீண் பழி சுமத்துவதாகக் கருதுவீர்கள். அதனால் உங்களிடம் அது பற்றிப் பேசவே வேண்டாம் என்றுதான் சற்று முன்வரை கூட எண்ணினேன். ஆனால் இப்போது 'என்னிடம் உங்களுக்கு மதிப்புக் குறைந்து போனாலும் பாதகமில்லை; உங்களை அவரிடமிருந்து காப்பாற்றி எச்சரிக்க வேண்டியது என் கடமை' என்று தோன்றுகிறது. நான் ரேடியேட்டருக்குத் தண்ணீர் தேடி வழியில் தென்பட்ட ஒரு கிராமத்துக்குள் நுழைந்தேன் அல்லவா? அப்போது...''

''அப்போது?....'' பவானியால் ஆவலை அடக்கிக் கொள்ள முடியவில்லை.

''அங்கே இரண்டு ஸி. ஐ. டி.க்கள் கிராம மக்களிடம் ஒரு ஃபோட்டோவைக் காட்டி விசாரித்துக் கொண்டிருந்தார்கள். சிறையிலிருந்து தப்பியோடிய கைதியாம். இந்தப் பக்கம் வந்து தலைமறைவாய் இருக்கலாம் என்று சந்தேகிக்கிறார்களாம்.''

''அந்த ஃபோட்டோவை நீங்களும் பார்த்தீர்களா?''

''பார்த்தேன். அந்தப் படத்தில் இருந்தவன் ஏறத்தாழ நம் மாஜிஸ்டிரேட் போலவேதான் இருந்தான். கோவர்த்தனன் மூக்குக் கண்ணாடி போட்டுக் கொண்டும் வேறு சில ஜாடை மாற்றங்களைச் செய்துகொண்டுமிருக்கிறார். ஆனால் நான் ஏமாறவில்லை. அந்தப் படத்தில் இருந்தது அவரேதான்!''

''அதை ஸி.ஐ.டிக்களிடம் சொல்லிவிட்டீர்களா?'

''இல்லை. இவ்வளவு நெருக்கத்தில் வந்து விட்டார்கள்; அவர்களாகவே தெரிந்து கொண்டு விடுவார்கள் என்று எண்ணினேன். இன்னொரு காரணமும் உண்டு.''

''என்ன?''

''மாஜிஸ்திரேட் உங்கள் நண்பர். உங்கள் மதிப்பில் இன்னமும் விழுந்து விடாமல் நிமிர்ந்து நிற்பவர். எனவே உங்களையும் கலந்தாலோசித்துக் கொண்டு...''

''மிஸ்டர் கல்யாணம்! எனக்கு நீங்கள் பெரிய உபகாரம் செய்ய வேண்டும்'' என்றாள் பவானி பரபரப்புடன்.

''சொல்லுங்கள், காத்திருக்கிறேன்'' என்றான் கல்யாணம்.

''இந்த விஷயத்தை ஒரு ஜீவனிடமும் நீங்கள் பிரஸ்தாபிக்கக் கூடாது. கையடித்துச் சத்தியம் செய்வீர்களா?''

''உங்களுக்கு மகிழ்ச்சி தரும் என்றால், இதோ இப்போதே செய்கிறேன்'' என்று கல்யாணம் அவள் வலக் கரத்தைத் தன் இடக் கையால் பற்றிப் பின்னர் தன் வலக் கரத்தையும் அவள் உள்ளங்கையோடு இணைத்தான். இணைத்த கரத்தை எடுக்க அவனுக்கு மனம் வரவில்லை. பவானிக்குத் தன்னை விடுவித்துக் கொள்ளச் சக்தி இல்லை. ''தாங்க்யூ மிஸ்டர் கல்யாணம், தாங்க்யூ'' என்றபோது அவள் குரல் கரகரத்தது; உடல் துவண்டது.

(தொடரும்)



அத்தியாயம் 8

திருமகள் தரிசனம்

ஞானப் பக்குவத்தின் இடையிலும் ஊசலாடிக் கொண்டிருந்த குலசேகர ஆழ்வாருக்கு ஏதோ ஒரு சக்தியின் ஆதர்சம் தம்முள் விளைவது போல் தோன்றிற்று.

மெது மெதுவாக அவர் கண்களில் அழகிய மகாலட்சுமியின் உருவம் ஒன்று தோன்றத் தொடங்கிற்று.

அவர் சூழ்நிலைகளை மறந்தார்.

மீண்டும் ஒரு புதிய உலகத்தில் இருப்பது போன்ற பிரமையை அடைந்தார்.

''அம்மா! நான் கனவு கண்டவளும் கண்ணில் காணாதவளுமாகிய மகாலட்சுமியைப் போல் தோற்றம் அளிக்கும் நீ யார்? செல்லுமிடமெங்கும் பல்வேறு வடிவங்களில் எனக்குக் காட்சி தருவது நீதானா?'' என்று கேட்டார்.

''மகனே! நானே மகாலட்சுமி! நானே சீதா! நானே நளாயினி. நானே அனுசூயை. நானே கண்ணகி. பிரதிபிம்பங்களில் தோற்றம் அளிக்கும் எனது ஆன்ம வடிவத்தையே நீ தரிசிக்கிறாய்.

' கம்பமத யானைக் கழுத்தகத்தின்
மேலிருந்து
இன்பமரும் செல்வமும் இவ்வரசும்
யான் வேண்டேன்

என்று மைந்தனுக்கு முடிசூட்டிவிட்டு,

' எம்பெருமான் ஈசன் எழில்வேங்
கடமலைமேல்
தம்பமதமாய் நிற்கும் தவமுடை
யேன் ஆவேன்

என்று அரசு துறந்து வந்தாயே, அன்று முதல் உன்னை நான் தொடர்ந்து வருகிறேன். மாசி மாதம் புனர்பூச நட்சத்திரத்தில் நீ பிறந்தபோது உனக்கு மங்கலமாக ஆரத்தி எடுத்தது உன் அன்னை அல்ல, நானே! உன்னை மடியில் வைத்துக் கொஞ்சியதும் நானே! தாய்ப் பாலோடு உனக்குத் தமிழ்ப் பால் ஊட்டியதும் நானே! குடத்து நாகத்தில் கைவிட்டு ஆட வைத்த குலசேகரா! உனக்கு நான் காட்சி தர வேண்டும் என்பது, என் நாயகன் திருமாலின் ஆணை. வைகுந்த வாசல் உனக்காகத் திறக்கு முன்பு, நீ வாழ்கின்ற வாசலிலேயே உன்னைச் சந்திக்க வேண்டும் என்பது என் விருப்பம்.



''மனிதர்கள் தாங்களே பின்னிக் கொண்ட சிலந்தி வலையில் தாங்களே சிக்கிக் கொண்டு தவிப்பதற்குக் காரணம், என் கைகள் வழங்கும் செல்வத்தின் மீது வைக்கும் ஆசைதான்! கருவிலேயே திருவைப் பெற்ற நீயோ ஒரு கணத்திலே அதை உதறும் சக்தி பெற்றாய். எனினும், இக வாழ்வின் துயரங்கள் உன்னையும் விடவில்லை. அகம் புனிதமாய் இருப்பினும் புறம் தூசி படிந்து கிடந்தால் இகம் வெறுத்துப் போகும். உன்னைச் சுற்றிலும் முட்களே முளைத்திருந்தன. மன்னர் குலசேகரன் மாஞானி ஆனதற்குப் பின்னரும், அவனைப் பெரும் துயரம் சூழ்ந்ததென்றால் என்ன பாவமோ? எக்காலம் செய்ததுவோ?

''கண்ணபுரத்தானை, காகுத்தனைத் தாலாட்டி, வண்ணமிகும் தமிழ்ப் பாடல் வழங்கிய உன் மன ஞானம், எண்ணமெனும் மத யானையால் ஏறி மிதிக்கப்படுகிறது. எனினும், லோக நாயகன் உன்னை அறிவான்.

''திருவஞ்சிக் களத்தில் சீராட்டப் பெற்ற குழந்தை திருக்கண்ணபுரத்தில் இறுதி யாத்திரை செய்ய வேண்டும் என்பது மாலவன் இட்ட ஆணை. நடந்து வந்த காலடிச் சுவடுகளுக்காக நீ ஏங்காதே! சுவடு தெரியாமல் நடந்து போகப் போகும் வைகுந்த வாசலை நினைத்துக்கொள்.

''உனது பரம்பரைக்கு நேர்ந்த இன்னல், உனது தலைமுறையிலேயே தீரக் கூடியதல்ல. உனது பெரும் பயணத்தின் முடிவில் அது தீரக் கூடும். உனது கலக்கத்தைத் தவிர்ப்பதற்காகவேதான் நான் இங்கு அனுப்பி வைக்கப்பட்டேன். உன்னால் மணம் முடிக்கப்பட்டவளும், ஒரு மைந்தனை ஈன்றபின் மடிந்தவளுமாகிய பாண்டிய ராஜகுமாரி வைகுந்தத்தின் தலைவாசலில் உனக்காகக் காத்திருக்கிறாள். நாட்கள் எண்ணப்படுகின்றன. நாழிகைகளை அளந்து நடத்து. நீ அணிந்திருந்த திரு ஆபரணங்களைத் திருமாலுக்குச் சாத்தி மகிழ்வித்தாய். இனி உன்னையே மாலையாக்கி அவன் திரு மார்பில் ஊசலாடவிடு.'' — அந்தச் சிவப்பு மூக்குத்தி செம்பொன் மேனியாள், ஒரே மூச்சில் பேசி முடித்தாள்.

'பச்சை மாமலை போல் மேனியும், பவள வாயும், கமலச் செங்கண்ணும் படைத்த அச்சுதன் நாயகி அவளே' என்பதைக் குலசேகர ஆழ்வார் அகத்தே உணர்ந்தார்.

திருவைத் துறந்த ஞானியைத் திருமகள் காப்பாற்றுகிறாள் என்று அவருக்குத் தோன்றிற்று.

பாதாதி கேச பரியந்தம் அவர் அவளை உற்று நோக்கினார்.

வேதங்களால் அளக்க முடியாதவளும், விவேகத்தைக் கடந்த விவேகியுமான அரங்கனின் நாயகியை, அவர் தம்மை மறந்து வணங்கினார்.

அவளை எல்லோரும் காண வேண்டும் போல் அவருக்குத் தோன்றிற்று.

வாய்விட்டுச் சீடர்களை அழைத்தார்.

ஆனால், வார்த்தைகள் வெளி வரவில்லை.

''தாயே! என் குரல் ஏன் அடைபட்டுவிட்டது?'' என்று கேட்டார்.

''மகனே! எனது திருக் காட்சி உனக்கு மட்டுமே. இது உன் பாடல்



களில் இடம் பெற முடியாது. உன் சீடர்கள் கண்ணுக்கு நான் தெரியமாட்டேன். பல கோடியில் ஒருவராகப் பிறக்கும் வைணவ ஞானிகளின் மகா மந்திரத்தில் நான் இரண்டு எழுத்துக்களாக நிற்கிறேன். என் எட்டு வடிவங்களும் அவர்களைப் பின்தொடர்கின்றன. எட்டிப் பார்ப்போர் கண்ணுக்கு நான் எட்ட மாட்டேன். எட்டும் வரை விட மாட்டேன் என்று சொல்லுவோர் சொல்லை நான் தட்டமாட்டேன். இந்தத் தரிசனம் உன்னோடு இருக்கட்டும். இதுவே உன் தீர்க்க தரிசனமாக இருக்கட்டும்.

''மரணம் உன்னால் உணரப்படும் போது மறுபடியும் என் நினைவு வரும். அடுத்த கணம் திருப்பாற்கடல் அலைகளின் மீது உன் பாதங்கள் நடந்து வரும். இந்தத் திருமகள் சமேதராய்த் திருமகள் நாதன் உனக்குக் காட்சி அளிப்பான்'' என்றாள் அவள்.

''தாயே! வைகுந்த வாசல் திறக்கும் முன்னாலே என் மைந்தனை ஒருமுறை நான் காண்பேனா?'' என்று கேட்டார், குலசேகர ஆழ்வார்.

மகாலட்சுமி சிரித்தாள். ''மகனே! பற்றை நீ அறுக்கிறாய்; அது மறுபடியும் ஒட்டிக் கொள்கிறது. தந்தை மகன் என்ற உறவு கால காலங்களுக்கு நிரந்தரமாகி விட்டால் உலகம் வெறும் சந்தையாகிவிடும். பிறப்பைக் கொடுத்து விட்டு இறப்பை எடுத்துக் கொள்ளும் நிலை மட்டும் பூமியில் இல்லாதிருந்தால், பகவானின் இயக்கமே பொய்யாகி விடும். உன்னை நீ உணர்ந்து கொள்ளும் போது, உன்னால் உருவாக்கப்பட்ட தலைமுறைகளை நீ மறந்துவிட வேண்டும். சிருஷ்டியின் நோக்கம் பரிபூரணமாக உணரப்பட்டால்தான் திருஷ்டியில் ஞானம் வரும்.

''உனது காலத்தின் முடிவை உணர்த்தவே நான் தோன்றினேன்.

''உனது வேலை முடிந்து விட்டது.

''உனது தாயும், தந்தையும், மனைவியும் வைகுந்தத்தில் உனக்காகக் காத்திருக்கிறார்கள்.

''நான் விடைபெறட்டுமா?''

—கலங்கிய கண்களோடு அவளையே பார்த்துக்கொண்டிருந்தார் குலசேகர ஆழ்வார்.

''தாயே! என் மரணத்தின்நாழிகை



யைக் குறித்தே சொல்லிவிடலாமா?'' என்று கேட்டார்.

''அதை நான் உனக்குச் சொல்லிவிட்டால் மீண்டும் பந்தபாசங்கள் தோன்றி விடும். இவர்களையெல்லாம் விட்டுப் பிரியப் போகிறோமே என்று ஒவ்வொருவர் முகமும் நினைவுக்கு வரும்.

''யோகியைக் கடைசிக் காலத்தில் ரோகியாக்குவது என் வேலை அல்ல.

''அந்த நாழிகை எது என்பதை உன் சிந்தையே ஒரு நாள் சொல்லிவிடும்'' என்றான் அவன்.

— குலசேகர ஆழ்வாருக்கு அப்போதே கண்கள் செருகுவதுபோல் தோன்றிற்று.

அது தூக்கமா? சாக்காடா ?

அவரால் உணர முடியவில்லை.

சந்தியா காலத்து மணி ஓசை கோயிலில் எழுந்தபோது, குலசேகர ஆழ்வார் கண் விழித்தார்.

பள்ளி எழுந்தார்.

இரவில் ஏதோ நடந்ததுபோல் அவருக்குத் தோன்றிற்று.

முன்பு அவர் முன் தோன்றிய உருவங்கள் அவர் நினைவில் இருந்தது போல் இரவில் நடந்த நிகழ்ச்சி அவர் நினைவில் இல்லை.

திரும்பத் திரும்ப யோசித்தார்.

யார் வந்தார்கள் ? என்ன பேசினார்கள்? எதையும் அவரால் உணர முடியவில்லை.

இது ஊமை கண்ட கனவு என்று காலைக் கடமைகளுக்காக அவர் அறையைவிட்டு வெளியேறினார்.

அத்தியாயம் 9

பரிசுத்த ஆவிகள்

அகதீஸ்வரம் ஆசிரமத்திலிருந்து சிடனைப் பின்தொடர்ந்த மார்த்தாண்டவர்மனும், மெல்லிளங்கோதையும், திருவேங்கடத்தான் ஸ்ரீ வல்லபரைக் கூடச் சந்திக்க முடியவில்லை.

நேரே ஒரு வேட்டுவர் குடிலுக்கு அவர்களை அழைத்துக் கொண்டு போனான் சிடன்.

அந்தக் குடிலைப் பார்த்தவுடனேயே மெல்லிளங் கோதைக்கு மேனியெல்லாம் வியர்த்தது.

அந்தச் சிவப்பு மூக்குத்திக்காரி அழைத்துக் கொண்டு போன அதே குடில் !

உள்ளே நுழைந்ததும் அவள் மார்த்தாண்டவர்மனைப் பார்த்து, ''இங்கே தான் அவன் என்னை அழைத்து வந்தான்'' என்றாள்.

என்ன, ஏது என்று மீண்டும் நினைவு படுத்திக் கேட்கும் நிலையில் மார்த்தாண்டவர்மன் இல்லை.

'நாட்டைப் பறித்துக் கொண்ட ரவிவர்மன், தன்னைக் காட்டிலும் தேடிக் கொண்டிருக்கிறானே' என்று எண்ணியபோது, அவன் உள்ளம் கொதித்தது. தெய்வ வழிபாட்டின் மீதே அவனுக்கு அவநம்பிக்கை தோன்றிற்று.

இறைவன் திருப்பணி எவ்வளவோ செய்தும் தெய்வம் சேரமான் குடும்பத்துக்கு எதிராகவே இருப்பதுபோல் அவனுக்குத் தோன்றிற்று.

வஞ்சகம் அறியாத மார்த்தாண்டவர்மன் கண் கலங்கினான்.

சிடன் அவர்களை உள்ளே வைத்து விட்டு வெளியே வந்து கதவைச் சாத்திப் பூட்டினான்.

வெளியிலே நின்றபடி, ''நமோ நாராயணா!'' என்றுகுரல் கொடுத்தான்.

அந்தக் குரல் வேட்டுவர்களுக்கு ஒரு பரிபாஷையாகும்.

திருவேங்கடத்தான் ஸ்ரீ வல்லபரை, வேட்டுவர்கள், ''சாமி! சாமி!'' என்று அழைப்பார்கள்.

ஆசிரமத்துக்கு வெளியே 'நமோ, நாராயணா' என்ற குரல் ஓங்கி ஒலித்தால், சுவாமிக்கு ஏதோ ஆபத்து என்று பொருள். அந்தக் குரல் யார் யார் காதில் விழுகிறதோ, அவர்களெல்லாம் 'நமோ நாராயணா' என்று ஒலிப்பார்கள். ஒலித்தபடியே முதல் குரல் வந்த இடத்தில் எல்லோரும் கூடிவிடுவார்கள்.

சிடனின் குரல் கேட்டு நூற்றுக்கணக்கான வேட்டுவர்கள் அந்த இடத்தில் கூடிவிட்டார்கள்.

அதே நேரத்தில், ரவிவர்மனின் படைகள் ஸ்ரீவல்லபரின் ஆசிரமத்துக்குள் நுழைந்தன.


அவர்கள் சுமார் ஐம்பது பேரே இருப்பார்கள்.

பல்வேறு திசைகளிலும் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து சென்று தேடும் படைகளில் அது ஒரு குழு — அவ்வளவு தான்.

உள்ளே புகுந்த படைகள் சுற்று முற்றும் தேடின. உள்ளே சுரங்கப் பாதை ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தன.









ரம்யா
இவர்கள் இருவரையுமே திருப்தி செய்கிறது

பொங்கி வரும் நுரை— பொலிவு தரும் சலவை



இத்தரமான தயாரிப்பை அளிப்போர்:
அல்ட்ராமரீன் & பிக்மண்ட்ஸ் லிமிடெட், ராணிப்பேட்டை, தமிழ்நாடு
விற்பனையாளர்கள்: பாரி & கம்பெனி லிமிடெட்

SAA UP/2120



வாரீர் —
புதுமை
தவழ்ந்திட
எலுமிச்சைப்
புத்துணர்வுப்
பரவசத்தோடு
லிரில் புத்துணர்வு.
பார்த்தறியாப் புதுமை,
பரவசக் கிளுகிளுப்பு.
லிரில்.
அலையெறியும் தளதள
பச்சை. அதன் நயமோ
குளுகுளு எலுமிச்சை.
பொங்கிப் பீறிடும்
நுரைவளம்.
Liril
THE FRESHNESS SOAP
Liril
லிரில்
புத்துணர்வு சோப்
கிளுகிளு புத்துணர்வில் குளித்தெழ
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்புக்கள்.
லின்டாஸ்-LR.21-140TM

ஸ்ரீ வல்லபர் பூஜை செய்யும் சிலையை உருட்டித் தள்ளினர்.

அந்தப் படைகளுக்குத் தலைமை தாங்கி வந்தவன் ஸ்ரீவல்லபரை நெருங்கினன்.

ஓர் ஈட்டியை அவர் மார்பில் சாய்த்தபடி, ''ஏ, சந்நியாசி, மரியாதையாகச் சொல். மார்த்தாண்ட வர்மன் எங்கே?'' என்று கேட்டான்.

ஸ்ரீவல்லபர் சிரித்தார்.

''சிரிக்கிறாயா? மரியாதையாகச் சொல்லவில்லையென்றால், உன் தலையை அறுத்து இந்த ஈட்டியிலேயே சொருகி, மன்னர்பிரான் சேரமான் ரவிவர்மர் காலடியில் போடுவோம்!'' என்றான் அவன்.

ஸ்ரீ வல்லபர் மீண்டும் சிரித்தார்.

ஒருவன் அவர் கைகளைப் பின்புறமாகக் கட்டினன். சீடர்களின் கைகளையும் மற்ற வீரர்கள் கட்டினார்கள்.

''உங்களைக் கட்டி இந்தக் குதிரைகளிலேயே இழுத்துக் கொண்டு போகிறோம். வஞ்சிக்கு வந்து உண்மைகளைக் கக்குங்கள்'' என்றான் ஒருவன்.

ஸ்ரீ வல்லபர் அப்போதும் சிரித்தார்.

ஆனால் சீடர்களால் அந்த அவமானத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அவர்கள் உரத்த குரலில், ''நமோ நாராயணா'' என்று ஒலித்தார்கள்.

அந்தக் குரல் குடிலருகே கூடி நின்ற வேட்டுவர்கள் காதில் விழுந்தது.

அவர்களிலே சிலரைக் குடில் அருகேயே நிறுத்திவிட்டு, மற்றவர்கள் கிளம்பினார்கள்.

அவர்கள் ஆசிரமத்தை நெருங்கும் போது ஸ்ரீவல்லபரை ஒரு குதிரையில் படுக்க வைத்துக் கயிற்றால் கட்டிக் கொண்டிருந்தார்கள், ரவிவர்மனின் படை வீரர்கள்.

சுவாமிக்கு நேர்ந்த கதியைப் பார்த்ததும் வேட்டுவர்களின் ரத்தம் கொதித்தது.

ஸ்ரீவல்லபரின்மீது உயிரையே வைத்திருந்த வேட்டுவர்கள் ஆத்திரத்தோடு படைவீரர்கள் மீது பாய்ந்தார்கள்.

அவர்கள் உண்மைக்காகப் போராடுபவர்கள். ரவிவர்மனின் படைவீரர்களோ பொருளுக்காகப் போராடுபவர்கள்.

ரவிவர்மனின் வீரர்கள் அனைவரும் ஒருவர் மீதமில்லாமல் பிணமாக்கப் பட்டார்கள்.

தளபதியின் பிணத்தைத் தவிர ஒவ்வொரு பிணத்தையும் வேட்டுவர்கள் இறுதிச் சடங்குகளுக்காக அப்புறப்படுத்தினார்கள்.

போனவர்கள் போக, மிச்சம் இருந்த வேட்டுவர்கள் ஸ்ரீ வல்லபரைப் பயபக்தியோடு குதிரையி விருந்து இறக்கி, அவர் காலில் விழுந்து தண்டனிட்டார்கள். சிலர் ஓவென்று வாய் விட்டு அழுதுவிட்டார்கள்.

படைத் தளபதியின் சடலத்தை ஒருவன் குதிரையிலே கட்டினான். குதிரையை ஓங்கி முன் சவுக்காலே அடித்தான். குதிரை அந்தச் சடலத்தோடு வஞ்சி நோக்கிப் பறந்தது.

மற்றக் குதிரைகளைக் கையில் பிடித்துக் கொண்டு, வேட்டுவர்கள் ஸ்ரீவல்லபரையும், சீடர்களையும் அழைத்துக் கொண்டு, மார்த்தாண்டவர்மன் தங்கியிருந்த குடிலை நோக்கிப் புறப்பட்டார்கள்.

குடிலருகே வந்து அன்பும் பாசமும் பொங்கி வழிய நின்ற வேட்டுவர்களைக் கண்டதும், பக்குவஞானி ஸ்ரீ வல்லபரின் கண்களிலும் ஒரு சொட்டுக் கண்ணீர் வந்தது.

குடிலைத் திறந்து மார்த்தாண்டவர்மனையும், மெல்லிளங்கோதையையும் வெளியே அழைத்து வந்தான் முதல் சீடன்.

ஸ்ரீ வல்லபர் சொன்னார்

''என் அன்புக்குரிய குழந்தைகளே,

மனித குலம் முழுவதும் உங்களைப் போல் கள்ளம் கபடமின்றி இருந்தால், வைகுந்த நாயகனை நாம் வணங்குவது போய், அவன் நம்மை வணங்கி இருப்பான்.

இவ்வளவு காலம் உங்களோடு இருந்த நான், உங்களைப் பிரியும் நேரத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறேன்.

ஆழ்வார் திருமகனை, அரசிளங்குமரனைக் காப்பாற்றிக் கொடுத்த உங்களுக்கு எப்படி நான் நன்றி சொல்லப் போகிறேன்!

ஏழுமலையையும் ஒரு மாலையாக்கி உங்கள் தோளுக்குப் போட்டாலும் என் மனம் நிறைவு பெறாது.

உங்களுக்கு நான் எதுவும் செய்ததில்லை; எனக்கு நீங்கள் செய்யாத உதவியே இல்லை!

தானே முளைத்து, தானே தண்ணீர் குடித்து, தானே வளர்ந்து, தன்னையே வழங்கும் பனைமரம் போல் தன்னலமற்றுப் பணி புரிந்த உங்களைக் கண்ணன் காப்பாற்றுவான்.

ஆயர் குலத்தின் அருமருந்து இங்கே ஒரு தாயின் வயிற்றில் பிறப்பான்.



திருடன்: என்னண்ணே! அந்த வீட்டிலே நுழைந்து திருடினயே என்ன கிடைச்சது?

மற்றவன்: ஒரு உதை, நாலு குத்து!

- பி. வேணுகோபால்

காலம் கண் திறக்கும்போது மீண்டும் நாம் சந்திப்போம்.

இப்போது நாங்கள் புறப்படுகிறோம்''

வேட்டுவர்களில் பலர் விம்மி விம்மி அழத் தொடங்கினார்கள்.

''சாமி; சாமி!'' என்று கதறினார்களே தவிர, தடுக்க முடியவில்லை.

''இனி மார்த்தாண்ட வர்மன் இங்கிருந்தால் ஆயிரக் கணக்கான படைகள் வரக்கூடும். குறை தொகையினராயுள்ள வேட்டுவர் குலமே நாசமாகிவிடக் கூடும். நான் மார்த்தாண்ட வர்மனையும் காப்பாற்றி, உங்களையும் காப்பாற்ற விரும்புகிறேன்.. எங்களுக்கு விடை கொடுங்கள். நாங்கள் கள்ளியங்காட்டு கிருஷ்ணன் கோயிலுக்குச் செல்ல விரும்புகிறோம்'' என்றார் ஸ்ரீவல்லபர்.

மீண்டும், ''சாமி! சாமி!'' என்று வேட்டுவர்கள் கதறினார்கள். வேட்டுவப் பெண்கள் எல்லாம் ஓடி வந்து, காலில் விழுந்தார்கள்.

கடைசியாக 'ஒரு முறை, ''நமோ நாராயணா'' என்றார் ஸ்ரீவல்லபர்.

முன்பு தாலாட்டாகவும், பின்பு போர்ப்பாட்டாகவும் பாடிய வேட்டுவர்கள் இப்போது ஒப்பாரியாக அதைப் பாடினார்கள்.

ஸ்ரீவல்லபர், சீடர்கள், மார்த்தாண்ட வர்மன், மெல்லிளங்கோதை அனைவரும் குதிரையில் ஏறி அமர்ந்தார்கள்.

வேட்டுவர்களிடம் பிரியாவிடை பெற்றுக் கொண்டார்கள்.

இது கள்ளியங்காட்டு கிருஷ்ணன் கோயில்.

கற்றளிகள் ஆரம்பமாகிவிட்ட காலம்தான் என்றாலும், இந்தக் கோயில் ஒரு கதைக் கோயில்.

சோநாட்டு அரச கட்டில் பல நூற்றுண்டுகளுக்கு முன்பே அரசு வீற்றிருந்த சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் இதனைக் கட்டினான் என்பார்கள். ''ஆகவேதான் அது கதைக் கோயிலாக இருக்கிறது'' என்பார்கள்.

எட்டாம் நூற்றாண்டில் கற்றளிகள் ஆரம்பமானபோது, இது மாற்றிக் கட்டப்படவில்லை.

பல வகையான மண்டபங்களைக் கொண்டது இந்தக் கோயில்.

சுற்றிலும் அடர்ந்த காடு.

இந்தக் கோவிலுக்கு யானைகளையே நிவந்தம் விட்டவர்கள் பலர்.

பறவைகள், விலங்குகளின் சரணாலயம் போலிருந்த அந்தக் காட்டில், அவற்றுக்கு ஆசி புரியவே பகவான் கிருஷ்ணன் அங்கே அமர்ந்திருந்தான்.

பெருஞ் சோற்று உதியன் கட்டியது என்பது உண்மையோ, பொய்யோ காட்டு வழி யாத்திரீகர்களுக்குப் பெருஞ்சோறு படைக்கும் கோவிலாகவே அது அமைந்திருந்தது.

அந்தக் கோவிலைப் பல தலைமுறைகளாகக் காப்பாற்றி வந்தது ஒரு நம்பூதிரி குடும்பம். அந்தக் குடும்பத்தின் அப்போதைய வழித்தோன்றல் கிருஷ்ணன் நம்பூதிரி.

நள்ளிரவில் குதிரைகளின் காலடிச் சத்தம் கேட்டது.

ஏராளமான அகல் விளக்குகளை எரிய விட்டுக் கொண்டு உள்ளே படுத்திருந்த கிருஷ்ணன் நம்பூதிரி, யாரோ அதிதிகள் வருகிறார்கள் என்று அறிந்து, கதவைத் திறந்தான்.

கிருஷ்ணன் நம்பூதிரிக்குச் சுமார் இருபத்தைந்து வயது இருக்கும். 'ஓயா மடம்' என்று சொல்லத் தக்க அந்தக் கோவில் மடத்துக்கும் அவனே தலைவன். ஆகவே வரும் அதிதிகளுக்கு அமுது படைப்பதோடன்றி, அவர்கள் தங்கும் வசதிகளையும் செய்யக் கூடியவன் அவனே. அவன் கதவைத் திறக்கவும், வாசலிலே குதிரைகள் வந்து நிற்கவும் சரியாக இருந்தது.

எல்லோரையும் உள்ளே அழைத்துக் கோரைப் பாய்களை விரித்து உட்கார வைத்தான் கிருஷ்ணன் நம்பூதிரி.

''மகனே! நீதான் இந்தக் கோயில் காப்பவனா?'' என்று கேட்டார் ஸ்ரீவல்லபர்.

''ஆமாம் சுவாமி!'' என்றான் கிருஷ்ணன் நம்பூதிரி.

அருகில் நின்ற மார்த்தாண்ட வர்மன் அவன் முகத்தைக் கூர்ந்து கவனித்தான்.

கவனித்தான், கவனித்தான், கவனித்துக் கொண்டேயிருந்தான்.

என்ன ஆச்சரியம்!

அவன் முழுக்கமுழுக்க மார்த்தாண்ட வர்மனைப் போலவே இருந்தான்.

(தொடரும்)

இந்தியாவிலிருந்த முன்னாள் அமெரிக்கத் தூதர் கால்ப்ரெய்த் பொருளாதார நிபுணர். தாம் எழுதிய பொருளாதாரப் புத்தகம் கிடைக்குமா என்று நியூயார்க் விமான நிலையத்தில் உள்ள கடைக்குப்போய் விசாரித்தார். தம் பெயரைச் சொல்லாது புத்தகத்தின் பெயரைக் குறிப்பிட்டு "இருக்கிறதா?" என்று கேட்டார். "அந்தப் பெயர் கொண்ட புத்தகத்தை விமான நிலையங்களில் விற்பார்கள் என்று எப்படி நீங்கள் எதிர்பார்த்தீர்கள்?" என்று கடைக்காரர் திருப்பிக் கேட்டார்.

அந்தப் புத்தகத்தின் பெயர்: 'THE GREAT CRASH'

— டெக்கான் ஹெரால்ட் - பாபு



கலியுக அரிச்சந்திரன் தர்மலிங்கம் தான் துயரப்படுவது போதாதென்று, தன் அருமைத் தம்பி குமரனையும் அவனுடைய முறைப் பெண் வாணியையும் தன் சத்தியத்தைக் காக்க வேண்டிப் பிரித்து வைத்து விடுகிறான்.

இடைவேளை வரையில் ஒழுங்காகவும் அமைதியாகவும் சென்று கொண்டிருந்த திரைக் கதை அதன் பின் பயங்கரப் புயலில் அடிபட்ட கப்பலின் கதியை அடைகிறது. இந்தக் கோர விபத்திலிருந்து படத்தைக் காப்பாற்றுவது நடிக, நடிகையர்களின் இணையற்ற நடிப்பாற்றல்தான்!

நடிகர் திலகம் சிவாஜி கணேசன், இப்படத்தின் ஹீரோ அல்ல; ஆனால் நடிப்பில் ஹீரோவாயிருக்கிறார். அவர் முக பாவங்களில் தான் எத்தனை உணர்ச்சிக் கொந்தளிப்பு, எத்தனை சாந்தம், எத்தனை சோகம், எத்தனை விரக்தி...! இத்தகைய அரிய நடிப்பைக் காண்பதற்காகத் திரைக் கதைகள் திக்குத் திசை தெரியாமல் தவிப்பதென்ன, அவற்றின் மீது இடியே விழலாம்! கதாநாயகனுக்கு வழி விட்டு விலகி நின்றாலும் நடிகர் திலகம்தான் நம் நினைவில் நிற்கிறார்.

ஜெய் சித்ரா, கள்ளம் கபடில்லாத கிராமப் பெண்ணாக வரும்போதுதான் எத்தனை துள்ளல், எத்தனை துடிப்பு, எத்தனை நொடிப்பு! தொடக்கத்தில் குழந்தைத்தனமாயிருந்த அந்தப் பாத்திரம் எவ்வளவு சோகமாக இறுதியில் மாறிவிடுகிறது.

கமலஹாசன் துள்ளிக் குதிக்கும் கன்றுக் குட்டியாக வந்து, கடைசியில் கண்ணீரில் கரைகிறார்.

பணக்கார, படித்த பெண்ணாக வந்து குமரனைக் காதலிக்கும் மஞ்சுளா அடக்கமாகவும் அழகாகவும் தோன்றி நிறைவளிக்கிறார். தர்மலிங்கத்தின் மனைவியாக வரும் தேவிகா பழம் 'பெரும்' நடிகை. உருவம் நடிப்பைச் சிறிதும் பாதிக்கவில்லை.

முன்பு சிவாஜி கணேசன் நடித்து வந்த "விதி" என்ற நாடகத்தின் மறு உருவமே "சத்தியம்". 'வியட்நாம் வீடு' சுந்தரம் வசனம் எழுதியிருக்கிறார். இவ்வண்ணப்படம் கே.எஸ். பிரசாத ராவின் திறமையான ஒளிப்பதிவினால் அற்புத வடிவம் பெற்றிருக்கிறது.

"கல்யாணக் கோயிலின் தெய்விகக் கலசம்" என்ற கண்ணதாசனின் பாடல் பி. சுசிலாவின் இனிமையான குரலில் ஒலிக்கிறது.

சத்தியத்தின் பாதை எவ்வளவு சிரம சாத்தியமானது என்பதை விளக்க, மிகவும் சிரமப்பட்டிருக்கிறார்கள், பாவம்!

—காந்தன்



பொன்னியின் புதல்வர்



சுந்தா

35. துணைக் குழுவினர்

இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல் — திருக்குறள்

கல்கிப் பத்திரிகையின் வெள்ளி விழா, 1966ல், பெரியதொரு கொண்டாட்டமாய் நடைபெற்ற போது, தொடக்க காலம் முதல் இருபத்தைந்து ஆண்டுகளாய் அதில் தொடர்ந்து பணி ஆற்றிய ஆறு பேர்களுக்கு, பாராட்டு வெகுமானமாய் வெள்ளி விளக்குகள் வழங்கப் பெற்றன. அந்த அறுவரில் ஒருவர் உதவி ஆசிரியர் சு. ஸோமாஸ் கந்தன் — ஸோமாஸ், காந்தன், விஜயம் என்ற புனைபெயர்களைக் கொண்டவர்.

வெள்ளிவிழா மலரில், தமது 'ஆரம்ப கால நினைவுகள்' பற்றிய கட்டுரை ஒன்றில், எந்த எழுத்தாளனும் எந்தப் பத்திரிகையிலும் நீடித்து நிலைத்து இருந்ததில்லை என்ற அவப் பெயரைத் தாம் நீக்கிவிட்டதாகப் பெருமையுடன் ஸோமாஸ் அறிவித்தார். இன்னமும் தொடர்ந்து முப்பத்தைந்தாவது வருடமாக அவர் கல்கியில் இருந்து வருவது, தமிழ்ப் பத்திரிகை உலகில் அரியதொரு சாதனை.

வகையான இலக்கியப் பின்னணி கொண்டவர் ஸோமாஸ். அவருடைய தந்தையார், வரகவி அ. சுப்பிரமணிய பாரதி, கவிதைகளுடன் வசன நூல்களும் இயற்றியவர்; அவருடைய ''ஜடாவல்லபர்'' தமிழ் முன்னோடி நாவல்களில் ஒன்று. அக்காலத்துச் சஞ்சிகைகள் பலவற்றில் எழுதிய அவர், சிறிது காலம் ''பால விநோதினி'' ஆசிரியராயும் இருந்தவர். மகாகவியாகப் பின்னர் புகழ்பெற்ற சி. சுப்பிரமணிய பாரதியின் சகாவாகச் சுதேசமித்திரனில் பணியாற்றிய பெருமையும் கொண்டவர்.

தந்தை வழியே அடைந்த தமிழ் அறிவை, வித்துவான் பரீட்சைக்காகக் கி. வா. ஜகந்நாதனிடம் இலக்கண இலக்கியம் கற்றதன் மூலம் ஸோமாஸ் பெருக்கிக் கொண்டார். அதே சமயத்தில் தமிழ்த் தாத்தாவின் நூற்பதிப்பு வேலைகளிலும் உதவி செய்தார். கல்கியில் சேருவதற்கு முன்னால், கே. எஸ். வேங்கடரமணியின் ''பாரதமணி'' சஞ்சிகையில் ஓராண்டு காலம் அனுபவம் அடைந்திருந்தார்.

கல்கியில் ஸோமாஸ் எழுதிய சிறு கதைகளை எண்ணினால் ஐந்நூறுக்கு மேல் இருக்கும். நாடக, திரைப்பட விமரிசனங்கள் எண்ணில் அடங்காதவை.

ஸோமாஸைப் போலவே தொடக்க காலம் முதல் கல்கியில் பணி புரிந்து வருபவர் ஓவியர் சாமா. கார்ட்டூன்கள், காரிகேச்சர்கள், கதைகளுக்கான படங்கள் முதலியவற்றை எளிய கோடுகளில் நேர்த்தியாய் வரையும் அவருடைய திறமையைக் கல்கி பாராட்டி, அடிக்கடி குறிப்புக்கள் எழுதினார். வெகுவான மூலத்தன்மையுடன் எண்ணிலா ஜோக்குகளையும் வேடிக்கைக் கதைகளையும் சாமா புனைந்து சித்திர வண்ணம் கொடுத்து வாசகர்களுக்கு மகிழ்ச்சியூட்டி யிருக்கிறார்.

குழந்தை எழுத்தாளர்களில் ஒரு முன்னோடியான ராஜி, சாமாவின் மூத்த சகோதரர் என்பது சிலருக்கே தெரிந்திருக்கக் கூடியது. அண்ணனின் கதைகளும் தம்பியின் சித்திரங்களும் இணைந்ததான எத்தனையோ ''பாப்பா மலர்''கள் கல்கியில் வெளியாயின.

(தாமாகவே பழகிச் சித்திரத் தேர்ச்சி அடைந்தவர் சாமா. இவரைப் போலவேதான், இப்போது பிரபல கார்ட்டூன் கலைஞர்களாய் விளங்கும், தாணு, ஸ்ரீதர், உமாபதி ஆகியோரும். இவர்களுடைய ஆரம்ப முயற்சிகளை வெளியிட்டு ஊக்கம் ஊட்டியவர் கல்கி. இது குறித்து இவர்கள் நன்றி பாராட்டுகிறார்கள்.

அரசியல் கார்ட்டூன்களைத் தமது பத்திரிகையின் முக்கியமான அம்சங்களில் ஒன்றாகக் கருதிய கல்கி, ஒவ்வோர் இதழிலும் இரண்டு பக்கங்கள் வரை அவற்றை வெளியிட்டு வந்தார். வெவ்வேறு பாணிகள் கொண்ட உம்மன், ரகு ஆகியோர் அவற்றை அடுத்தடுத்து வரைந்து கொடுத்தார்கள்.)

சாமாவுடனும் ஸோமாஸுடனும், தொடக்கத்திலேயே ''கதிர்'' வேங்கட

ராமனும் கல்கியில் சேர்ந்திருந்தார். ஆனால் அவர் சிறிது காலத்திலேயே, தாம் விட்டு வந்த ஆனந்தவிகடனுக்குத் திரும்பிச் சென்றார்.

''கதிர்'' அங்கே சென்றார் என்றால், அங்கிருந்து துமிலனும் நாடோடியும் ஒருவர்பின் ஒருவராய் விலகிக் கல்கியில் சேர்ந்து கொண்டார்கள். அவர்களைக் கல்கி மகிழ்ச்சியுடன் வரவேற்று, அந்த மகிழ்ச்சியை வாசகர்களுடன் பகிர்ந்து கொண்டு குறிப்புக்கள் எழுதினார். அவற்றில் ஒன்று, கல்கிப் பத்திரிகையின் மூன்றாவது ஆண்டுத் தொடக்க இதழில் வந்தது. அதில் அவர், ஏற்கனவே நியமனமாகியிருந்த ''வஸந்தன்'' என்ற வி. எஸ். ராமகிருஷ்ணனையும் சேர்த்து, ''இவர்களுடைய வரவினால் 'கல்கி' மிகுந்த சிறப்பை அடைந்திருக்கிறது'' என்று எழுதினார். அதன்படியே, தமது சிறுகதைகளினால் வஸந்தனும், தமது நகைச்சுவை எழுத்துக்களால் மற்ற இருவரும் சிறப்பளிக்கவே செய்தார்கள். ஆனால் அவர்கள் நெடுநாட்கள் கல்கிப் பத்திரிகையில் நிலைக்கவில்லை.

பத்திரிகைகளில் வேலை பார்க்கும் எழுத்தாளர்களின் பெயர்ச்சிகளுக்கு ஒரு தனிக் காரணம் உண்டு என்பதை, சொந்த அனுபவத்திலிருந்து கல்கி சொல்லியிருக்கிறார். நவசக்தியிலிருந்து தாம் விலக நேர்ந்தது பற்றி, ''பாங்கர் விநாயகராவ்'' நூலின் 'முன்னுரையில் குறிப்பிடுகையில் சொன்னது இது :

எழுத்தாளர்கள் ஒரு பத்திரிகையிலிருந்து இன்னொரு பத்திரிகைக்கு மாறியதாகவோ, தாங்களே புதிய பத்திரிகை ஆரம்பித்ததாகவோ கேள்விப்படும்போது நான் சிறிதும் வியப்படைவதில்லை. எழுத்தாளர் என்போர் ஒரு விநோதமான இனத்தினர். இஷ்டம் போல் சுயேச்சையாக எவ்விதக் கட்டுப்பாடுமின்றி எழுத வேண்டும் என்ற ஆவல் பெரும்பாலான எழுத்தாளர் உள்ளத்தில் எப்போதும் இருந்து கொண்டிருக்கும். மேலே உள்ளவர்கள் எவ்வளவு நல்லவர்களாய் இருந்தாலும் சரிதான்; மாறுதல் வெறி திடீரென்று சில சமயம் தோன்றத்தான் செய்யும்.

இவ்வாறு எழுத்தாளர்களின் மனப்போக்கைக் கல்கி நன்கு அறிந்திருந்ததால்தான், தமது பத்திரிகையில் சேர்ந்து ஓராண்டு முடிந்ததும், சொந்தப் பத்திரிகை போடப் போவதாய்த் துமிலன் தெரிவித்து விலகியபோது, நல்லாசியுடன் அவருக்கு விடை கொடுத்தார். ''சுதாமணி'' என்ற மாத இதழைத் துமிலன் தொடங்கிய சமயத்தில், தமது பத்திரிகையின் ''என்ன சேதி?'' பத்தியில் அதைக் கல்கி வரவேற்று ஆசி கூறினார்.

நாலாண்டுப் பணிக்குப் பிறகு நாடோடி விலகிக் கொண்டார்; அவரைத் தொடர்ந்து வஸந்தனும் விலகினார். இருவரும் பின்னர் சொந்தப் பத்திரிகை போட்டார்கள்.

வஸந்தன் நடத்தியது, ''பாரிஜாதம்''. அதன் இதழ்களில் அவர் தமது முன்னாள் ஆசிரியர் கல்கிக்குப்

கல்கி வெள்ளி விழாக் கொண்டாட்டத்தில் வெள்ளி விழாச் சேவை புரிந்தவர்கள் வெள்ளிக் குத்துவிளக்கு பரிசளித்துப் பாராட்டப் பெற்றனர். இடமிருந்து வலமாக :
திருவாளர்கள் : வரதன், மணவாள நாயுடு, ராஜாபாதர், சாமா, ஸோமாஸ், அக்கௌண்டண்ட் கல்யாணம்.



புகழ் மாலை சூட்டிக் கொண்டே இருந்தார். அவ்வாறேதான், சாவியும், தமது ''வெள்ளிமணி'' இதழ்களில் சூட்டிக் கொண்டிருந்தார் என்பதை முன்பே பார்த்தோம்.

ஆனந்த விகடனிலிருந்து கல்கி விலகியதை அடுத்துச் சாவி விலக்கப்பட்டார். சொந்த வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டே தேசியப் போராட்டத்திலும் அவர் ஈடுபட்டுச் சிறை புகுந்தார். வெளியே வந்தவர், ''தமிழன்'' என்ற பத்திரிகையில் சேர்ந்து கொண்டார். அதில் அவர், திரைப்பட நீளம் சம்பந்தமான விவாதத்தில் தமது கட்சிக்கு ஆதரவாய் எழுதிய கட்டுரை ஒன்றைக் கல்கி படித்துவிட்டு, தமது பத்திரிகையில் சேர்ந்து கொள்ளும்படி அவரைக் கூப்பிட்டார்.

1943 இறுதி முதல் 47 மத்தி வரை, கல்கியில் துணை ஆசிரியராய் இருக்கையில், சாவியின் எழுத்துவன்மையும் பத்திரிகை அனுபவமும் வெகுவாக விரிவடைந்தன. அக்காலத்தில் அவர், மகாத்மா காந்தியின் நவகாளி யாத்திரையில் கல்கி நிருபராய்க் கலந்து கொண்டு எழுதிய தொடர் கட்டுரைகள், அவருக்குப் பெரும் புகழ் அளித்தன. அந்த அரிய வாய்ப்பினை அவருக்கு அளித்த கல்கி, அக்கட்டுரைகளை இலக்கியச் சிறப்பும் தார்மீகச் சிறப்பும் கொண்டவை எனப் பாராட்டி எழுதினார். அவ்விதப் புகழுடன் சாவி தொடங்கிய சொந்தப் பத்திரிகை ''வெள்ளிமணி''யை, முன்பு தூமிலனின் பத்திரிகையை வரவேற்றது போலவே கல்கி வரவேற்றார்.

இங்கிலாந்தைப் பற்றி நகைச்சுவை நடிகர் பாப் ஹோப் கூறியது:

''எனது பெரும் சாதனை இங்கிலாந்தில்தான் நிகழ்ந்தது. அங்குதான் நான் பிறந்தேன்.''



''நகைச்சுவை நிகழ்ச்சி நடத்த சிறந்த இடம் இங்கிலாந்துதான். காரணம், அது ஒரு தீவு — ரசிகர்கள் எங்கும் ஓடிவிட முடியாது !''

''லண்டனின் பனி மூட்டத்தில் நான் ஒரு முறை சிக்கிக் கொண்டேன். திடீரென்று என் எதிரில் ஓர் ஒளி புள்ளி வர வர அருகில் தெரிந்தது. கையைச் சுட்டபோதுதான் புரிந்தது. அது என் சிகரெட் நெருப்பு என்று !''

சம்பத் குமாரி - ஆதாரம்: 'மிர்ரர்'

இப்போது பத்து ஆண்டுகளாய், ''தினமணி கதிர்'' ஆசிரியராய் இருந்து வரும் சாவி, அண்மையில் தமது அறுபதாம் ஆண்டு நிறைவைக் கொண்டாடிய போது, தக்கதொரு முறையில் கல்கிக்கு அஞ்சலி செலுத்தினார். அவருடைய மணி விழா மலரின் முதல் மூன்று பக்கங்களில் மூன்று படங்கள்: முதல் படத்தில், ''தாய்—தந்தை'' என்ற தலைப்புடன் சாவியின் பெற்றோர்கள்; மூன்றாவது படத்தில், ''தெய்வம்'' என்ற மகுடத்துடன் காஞ்சிப் பீடாதிபதி; நடுப் படத்தில் குரு கல்கி.

சாவிக்கு இணையாகக் கல்கியிடம் குரு பக்தி கொண்டவர் இன்னொருவர் உண்டு. அவருடைய சொற்களின் மூலமே அதன் பெருக்கைப் பார்க்கலாம் :

என் ஜீவ யாத்திரையில் எனக்கு எல்லாமாக இருந்த புனிதரின் திருநாமத்தைப் போற்றுகிறேன். ஏறத்தாழ பதினைந்து வருஷ காலம் அவருடைய நிழலாக இருந்தேன். அவருக்குப் பணி செய்வதையே பெரும் பாக்கியமாகக் கருதி வாழ்ந்து வந்தேன். அவருடைய விருப்பம்தான் என் விருப்பமாக இருந்தது ; அவருடைய காரியந்தான் என்னுடைய காரியமாக இருந்து வந்தது ; அவருடைய ஆசைதான் என் லட்சியமாக இருந்தது. அவருடைய ஏவல்தான் என் கடனாக இருந்தது. பரிபூரணமாக — ஜோதிமயமாக — ஒளி வீசிக் கொண்டு அவர் முன்னே போய்க் கொண்டிருந்தார் ; நான் கண்ணை மூடிக் கொண்டு அவரைப் பின்பற்றி நடந்து கொண்டிருந்தேன்.

''பகீரதன்'' என்ற புனைபெயர் கொண்ட கி. மகாலிங்கத்தின் வாக்கியங்கள் இவை; அவருடைய சொந்தப் பத்திரிகையான ''சத்திய கங்கை''யில் 1967 டிஸம்பர் முதல் தேதிய இதழில் வந்தவை. பல ஆண்டுகளாய், கல்கி நினைவு நாளையொட்டிய ஒவ்வோர் இதழிலும் இம்மாதிரியே பகீரதன் எழுதி வந்திருக்கிறார்.

தேசிய உணர்ச்சியுடனும் தொண்டு செய்யும் ஆர்வத்துடனும், பத்தொன்பது வயது இளைஞராய்த் தம்மை அண்டி வந்த பகீரதனிடம், கல்கி ஆசிரியர் தனி அக்கறை கொண்டு, படிப் படியாய் அவருக்குப் பயிற்சி அளித்துத் தமது துணைக் குழுவில் சேர்த்துக் கொண்டார். அத்துடன் தமது இரண்டாவது செயலாளராகவும் அவரைப் பாவித்தார்; தமது பயணங்களில் துணையாகவும் கொண்டார். தாம் கலந்து கொண்ட அல்லது அக்கறை கொண்ட

பொது நிகழ்ச்சிகள் பற்றி அவரை நிருபர் கட்டுரைகள் எழுதச் செய்தார்.

பகீரதன் எழுதிய நிகழ்ச்சிக் கட்டுரைகளும், சிறுகதைகள் முதலியனவும், ஸோமாஸின் பங்கைப் போலவே நூற்றுக்கணக்கில் இருக்கும். இனி குறிப்பிடப் போகும் மற்ற உதவி ஆசிரியர்களின் கதை கட்டுரைகளும் அப்படியேதான்; தனித் தனியே சொல்ல வேண்டியதில்லை. பெயர் போடாமல் வெளியாகும் கட்டுரைகள் குறிப்புக்களும் பல உண்டு.

சுயமாய் எழுதுவது என்பது உதவி ஆசிரியர்களின் பணியில் ஒரு பகுதியே ஆகும். வெளியிலிருந்து வரும் கதை கட்டுரைகளைப் படித்துப் பார்த்துத் தேர்ந்தெடுப்பது, ஏற்ற விஷயங்களைச் செப்பனிட்டு அச்சுக்குக் கொடுப்பது, அச்சுப் பிழைகள் திருத்துவது, ஒவ்வோர் இதழையும் கூட்டு முயற்சியாகத் திட்டமிட்டுத் தயாரிப்பது — இவை போன்றவை அவர்களுடைய பணியின் மற்றொரு பகுதியாகும். அது மிகப் பொறுப்பு வாய்ந்த பகுதி ; பொறுமையும் கடினமான உழைப்பும் வேண்டியதான பகுதி.


தமது துணைக் குழுவினரைக் கல்கி எப்படி நடத்தினார்? அவருடைய காலத்தில் புகழ்மிக்க பத்திரிகாசிரியராய் விளங்கிய ஏ. அரங்கசாமி ஐயங்காரின் வாழ்க்கை வரலாற்றைக் கல்கி விமரிசனம் செய்கையில் அந்த நூலின் ஆசிரியர் ஆர். கிருஷ்ணமாச்சாரி எழுதாமல் விட்ட குறைகள் சிலவற்றைச் சுட்டிக் காட்டினார். அவற்றில் ஒன்று — ''உதவி ஆசிரியர்களையும் மற்றக் காரியாலயச் சிப்பந்திகளையும் இவர் நடத்தியவிதம், அவர்களுடைய யோக க்ஷேமங்களில் இவர் காட்டிய அக்கறை ஆகியவைகளைப் பற்றிய விவரங்கள்.''

இந்தக் குறை கல்கியின் இந்த வரலாற்றில் இல்லாதவாறு, சிறிது சொல்லலாம்.

அலுவல் சம்பந்தப்பட்டவரை தமது உதவியாளர்களிடம் கறார் கண்டிப்புடன் கல்கி நடந்து கொண்டார். மெத்தனமாய் இருப்பது, ஒப்புக்குச் செய்வது, சுணங்குவது, காரியத்தில் அல்லாமல் கடிகாரத்தில் கண்ணாய் இருப்பது — இவற்றில் எதை யாரிடம் கண்டாலும் அவர் பொறுக்கமாட்டார்.... ஏதேனும் பிசகு நேர்ந்தால், அதைச் செய்தவர் தாமாகவே ஒப்புக் கொள்ள வேண்டும் என எதிர்பார்த்தார். யாரும் ஒப்புக் கொள்ளா விட்டால், எல்லாரையும் கூட்டி வைத்துக் கொண்டு விசாரணை நடத்தி, பிசகு செய்தவரைக் கண்டு பிடித்து எச்சரிக்கை செய்வார்.

வேலை விஷயத்தில் அப்படிக் கடுத்தமாய் இருந்த கல்கி, தனி முறையிலான உறவாடல்களில் தோழமையும் பரிவும் கொண்டவராய் இருந்தார். அலுவலகத்துக்கு வெளியேயும் பிறர் முன்னிலையிலும், தமது துணைக் குழுவினரைச் சக நண்பர்களாய் நடத்தினார். அவர்களுடைய சுக துக்கங்களைப் பகிர்ந்து கொண்டார். அவர்களுடைய வீட்டு விசேஷங்களுக்குச் சென்றார். அவர்களுக்குப் பணத் தேவையோ கஷ்டமோ ஏற்பட்டால், அலுவலகத்தின் மூலமாகவும் தம் சொந்தப் பணத்திலிருந்தும் உதவி செய்தார். கடனாய்க் கொடுத்ததும் உண்டு ; வெகுமதியாய்க் கொடுத்ததும் உண்டு.

கல்கியின் இந்த இருவிதக் குணக் கூறுகள் காரணமாய், ஒரு பக்கம் பயத்துடனும் இன்னொரு பக்கம் விசுவாசத்



''இந்த ஆண்டு டெல்லியில் நாலு லட்சம் மரம் நட்டிருக்கிறார்கள். இப்படிப் பார்த்தால் 1970-ல் இருந்து டெல்லியில் மொத்தம் இருபது லட்சம் மரங்களாவது நட்டிருக்க வேண்டும். இது உண்மையானால் டெல்லி ஒரு பெரிய காடாக இருக்க வேண்டும். இந்த வீண் செலவைக் குறைக்க ஒரு நீதி விசாரணை நடைபெற வேண்டும்.''

— இந்துஸ்தான் டைம்ஸ் கடிதம் — பாபு

துடனும் அவருடைய துணைக் குழுவினர் பணியாற்றினர்கள்.

அவரை முன்னதாகவே நன்கு அறிந்து அவரிடம் சேர்ந்து நிலைத்தவர்களில், ''எஸ்.வி.எஸ்.'' என்ற மூன்றெழுத்துப் புனைபெயருக்கு உரிய எஸ். வேங்கடசுப்பிரமணியம் ஒருவர் ; ''குண்டுமணி'' என்பதற்கு உரிய பி. எஸ். மணி இன்னொருவர். இருவரும் ரசிகமணியின் இலக்கியச் சோலையில் கனிந்தவர்கள் என்பது முன்பே நமக்குத் தெரியும்.

தமிழ் முனிவரின் தொடர்புடன் ராஜாஜியின் தொடர்பையும் கொண்டு இரண்டினாலும் பயனும் பெருமையும் அடைந்தவர் எஸ். வி. எஸ். இலக்கியத்தை டி. கே. சி.யின் வழியில் அனுப

விக்கவும், அரசியலை ராஜாஜியின் நோக்கில் அறிந்து கொள்ளவும் பழகியவர். இலக்கியம் சம்பந்தமான கட்டுரைகளையும் குறிப்புக்களையும் நயமாக எழுதுவதும், சீரான முறையில் நூல்களை மதிப்பீடு செய்வதும் இவருடைய சிறப்பான துறை. தெலுங்கைத் தாய்மொழியாய்க் கொண்டு தமிழில் எழுதிப் பேர் பெற்றவர்களில் ஒருவர் எஸ்.வி.எஸ். என்பதும் குறிப்பிடத்தக்கது.

பி.எஸ். மணி (பி. சுப்பிரமணியம்) இருபது வயது இளைஞராய்க் கல்கியில் சேர்ந்தவர், இன்னமும் அதில் இளமைத் தோற்றத்துடனும் சுறுசுறுப்புடனும் பணியாற்றி வருபவர். இளைஞர்களுக்கு விருப்பமான விளையாட்டு (ஸ்போர்ட்ஸ்) விஷயங்கள் பற்றி எழுதுவதில் வல்லவர்; அவ்வாறே சிறுவர் கதைகள் எழுதுவதிலும். இரண்டு வகைகளிலும் கல்கியில் எழுதியவற்றைச் சில நூல்களாயும் திரட்டி வெளியிட்டிருக்கிறார். இயல்பான இன்முகத்தையும் இன்சொல்லையும் பத்திரிகைக்கு அவசியமான பொதுத் தொடர்பாக நன்கு பயன்படுத்துகிறவர் பி. எஸ். எம்.

கல்கியில் சேரும்போதே புகழ் கொண்டிருந்தவர் ஜெயமணி சுப்பிரமணியம். நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் நிறுவிய ஆஸாத் ஹிந்தில் பணி புரிந்தவர்; வீர சாவர்க்கரின் ''முதலாவது இந்திய சுதந்திரப் போராட்டம்'' என்ற நூலைத் தமிழில் ஆக்கி, வீரத்தையும் விடுதலை வேட்கையையும் ஊட்டி, நேதாஜியின் பாராட்டைப் பெற்றவர். 1947 தொடக்கத்தில் அவரைக் கல்கி தமது பத்திரிகையில் தமக்கு அடுத்த ஸ்தானத்தில் அமர்த்திக் கொண்டு, அச்செய்தியைப் பெருமையுடன் வாசகர்களுக்கு அறிவித்தார். உள்நாட்டு அரசியல் பற்றியும் வெளி உலக நிலவரம் பற்றியும், ஆராய்ச்சியுடனும் தெளிவுடனும் கல்கியில் கட்டுரைகள் எழுதியவர் ஜெயமணி; பல் தலையங்கங்களை எழுதிய தனிப் பெருமைக்கும் உரியவர்.

இன்னொருவர் பன்மொழித் தேர்ச்சியுடன் வந்து அதைப் பயன்படுத்திக் கல்கிக்குப் பெருமை அளித்துத் தாமும் பெருமை அடைந்த ரா. வீழிநாதன். (அக்ஷயம் என்ற புனைபெயரிலும் எழுதுவார்). சம்ஸ்கிருதம், ஹிந்தி, உருது, குஜராத்தி, வங்காளம் ஆகியவை அவர் அறிந்த பிறமொழிகள். ஹிந்தியில், ப்ரவீண், வித்வான் பட்டங்களைச் சென்னை மாகாணத்திலேயே முதன்மையாய்த் தேறி அடைந்தவர். இவ்விதத் தகுதிகளுடன் தமிழில் எழுத்தாற்றலும் கொண்ட வீழிநாதனைக் கல்கி விரும்பிக் கூப்பிட்டுத் தமது குழுவில் சேர்த்துக் கொண்டார். கல்கியின் நூல்களை அவர் ஹிந்தியில் ஆக்கிய விவரங்களை முன்பே தெரிந்து கொண்டோம். கல்கியின் காலத்தில், ஹிந்தியிலிருந்து எட்டு நாவல்களையும் சுமார் நூறு சிறுகதைகளையும் அவர் தமிழில் ஆக்கிக் கல்கி வாசகர்களுக்கு அளித்தார். அவற்றில் சுதர்சனின் ''இரு நண்பர்கள்'' என்ற நாவல் புத்தக வடிவில் வந்தபோது, அதற்கு வழங்கிய முன்னுரையில், வீழிநாதனை மொழிபெயர்ப்பாளராய் அடைந்தது மூல ஆசிரியரின் பேரதிர்ஷ்டம் என்று கல்கி எழுதினார்.

தமது சொந்த எழுத்துத் திறமையை அல்லாமல், மொழிபெயர்ப்புத் திறமையைக் கல்கி பயன்படுத்திக் கொள்ள விரும்பியதை வீழிநாதன் கண்டு முதலில் வருத்தமுற்றார். அவருடைய மனக் குறையைக் குறிப்பால் அறிந்த கல்கி அவரைச் சமாதானப்படுத்தினாராம். எப்படி என்பதை, வீழிநாதனே 1957ல் தாம் வெளியிட்ட, ''குலப் பெருமை'' என்ற மொழிபெயர்ப்பு நாவலின் முகவுரையில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

''மொழிபெயர்ப்பு என்பது ஓர் அருங்கலை. அதைக் குறைவாக எண்ணாதே. நிறைவாக எண்ணி இப்பணியில் இறங்கு. அவையே உனக்குப் பெரும் புகழ் தேடித் தரும். வெவ்வேறு ஆசிரியர்களின் கருத்தைப் புரிந்து கொண்டு, நடையைப் புரிந்து கொண்டு, அவற்றுக்கேற்பத் தமிழ்ப்படுத்துவதில் உள்ள

இங்கிலாந்து இளவரசர் ஃபிலிப் சாதுர்யமாகப் பேசக் கூடியவர். அவர் பேச்சுத் தொகுப்பை 'மோர் விட் ஆஃப் பிரின்ஸ் ஃபிலிப்' என்று புத்தகமாக வெளியிட்டிருக்கிறார்கள். அதிலிருந்து சில:



- ''சுய ஒழுக்கத்தைப் போலச் சிறந்த ஒழுக்கம் வேறில்லை; சுய கட்டுப்பாட்டைப்போல் சிறந்த சுதந்திரம் வேறில்லை.''
- ''இந்தப் பல் ஆஸ்பத்திரியை நான் பெரிதாக 'ஆ' வெனத் திறந்து வைக்கிறேன்!''
- ''விளையாட்டின் உண்மையான மதிப்பும் பொழுது போக்குதலும் அந்த விளையாட்டில் எத்தனை பேர் ஈடுபாடு கொள்கிறார்கள் என்பதில் இருக்கிறது; விளையாட்டின் தரத்தில் அல்ல.'' --ஆர்.எம்.

சிரமத்தை நான் நன்கு உணர்வேன். இக் காரியத்தில் நீ வெற்றி கண்டுவிட்டாயானால், நீ சொந்தமாக எழுதும்போது, அவ்வாசிரியர்கள் அனைவரும் பகைப்புலனில் நின்று கொண்டு உனக்குக் கைகொடுத்து உதவுவார்கள். உனது எழுத்தும் மெருகு ஏறிச் சோபையுறும். உன் நலனில் அக்கறை கொண்டே இதை நான் சொல்கிறேன்.''

ஏற்கனவே மொழிபெயர்த்தும் சொந்தமாயும் எழுதிப் பேர் எடுத்தவரும், பத்திரிகை அனுபவம் கொண்டவருமான, மீ. வி. சபரிராஜன், சுமார் நாலாண்டு காலம் கல்கியில் பணியாற்றினார். அவருடைய திறமைக்கு ஒப்புதலாக, இரண்டு சிறப்பு மலர்களின் தயாரிப்பில், அவருக்குக் கல்கி பெரும் பங்கும் பொறுப்பும் அளித்தார். அந்த மலர்களில் ஒன்று, ஜெர்மனியை ஸோவியத் நாடு தோற்கடித்ததைக் கொண்டாடுவதற்காக, 1945 மே ஆறும் தேதி வெளியான ருஷிய வெற்றி மலர்; மற்றது, 1947ல் நம் நாடு விடுதலை அடைந்ததைக் கொண்டாடிய சுதந்திர மலர்.

இன்றளவும் கல்கி அச்சுக்கூடத்தில் இருந்து வரும் ராஜாபாதர், ஆனந்த விகடனிலேயே கல்கி மீதும் அவருடைய எழுத்து மீதும் வியப்பும் மதிப்பும் கொண்டு, அவருடைய சொந்தப் பத்திரிகைக்குத் தொடர்ந்து வந்தவர். கடமை உணர்ச்சிக்கும் விசுவாசத்துக்கும் உதாரணமாய் விளங்கும் அவர், பெரும் துக்கம் நேர்ந்த சமயங்களிலும் வேலையைப் புறக்கணித்தது கிடையாது. ''இப்படி ஓய்வில்லாமல் வேலை செய்தால் உன் உடம்பு என்ன ஆவது?'' என்று எத்தனையோ தடவை அவரைக் கல்கி கடிந்து கொண்டிருக்கிறார்.

இவ்வளவு சுருக்கமாகத்தான் ராஜாபாதரைப் பற்றி இங்கே குறிப்பிட இயன்ற போதிலும், அவருடைய பணிகளையும் பண்புகளையும் பற்றி ஒரு தனி அத்தியாயமே எழுதலாம்.

பிரஸ் ஃபோர்மன் ராஜாபாதருடன், இயந்திர ஃபோர்மன் மணவாள நாயுடுவும், அச்சுக் கோப்பாளர் பி. வரதராஜன் என்னும் வரதனும் வெள்ளிவிழாவில் பாராட்டப்பெற்றார்கள்.

ராஜாபாதரின் சிபாரிசின் பேரில், இளம் அச்சுக் கோப்பாளர் ஒருவர் கல்கி அச்சுக்கூடத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அந்த இளைஞரின் எழுத்து வன்மையைக் கண்ட கல்கி, அவரைத் தமது துணைக் குழுவில் ஒருவராய் ஏற்றுக் கொண்டார். அவர்தான் ''விந்தன்''.

விந்தனின் எழுத்தாற்றலை எவ்வாறு கல்கி மதித்து மெச்சினார் என்பதை, ''முல்லைக் கொடியாள்'' என்ற கதைக் கொத்துக்கு அவர் வழங்கியுள்ள முன்னுரை புலப்படுத்துகிறது :

உழைப்பாளி மக்களிடையே பிறந்து வளர்ந்து உழைத்துப் பண்பட்டவர் (விந்தன்). ஏழை எளியவர்கள், தொழிலாளிகள், பாட்டாளிகளின் சுக துக்கங்களை இதயம் ஒன்றி அனுபவித்து உணரும் ஆற்றல் பெற்றவர். அந்த உணர்ச்சிகளை உயிருள்ள தமிழ் நடையில் சித்திரித்து இலக்கியப் பண்பு வாய்ந்த சிறுகதைகள் பலவற்றை அவர் நிரம்பட எழுதியிருக்கிறார்.... அவருடைய கதாபாத்திரங்கள் அனுபவிக்கும் கஷ்டங்களுக்கெல்லாம் நாம்தான் காரணமோ என்று எண்ணி எண்ணித் தூக்கம் இல்லாமல் தவிக்க நேரும்.

அவ்விதம் வாசகர்களின் மன அமைதியைக் குலைக்கக்கூடிய இயல்பு வாய்ந்த கதைகள்தான் உண்மையான இலக்கியம் என்று தற்காலத்து இலட்சிய புருஷர்களும் இலக்கிய மேதாவிகளும் சொல்கிறார்கள். இது உண்மையானால் விந்தனுடைய சிறுகதைகள் உண்மையான இலக்கியம் என்பதில் ஐயமில்லை.

கல்கியின் இத்தகைய பாராட்டைப் பெற்ற விந்தன், சொந்தப் பத்திரிகை தொடங்கியபோது, தமது இலக்கியக் குறிக்கோளுக்குப் பொருத்தமாக அதற்கு ''மனிதன்'' என்று பெயர் வைத்தார். அந்தப் பத்திரிகையின் 1954 டிஸம்பர் இதழில், கல்கிக்கு அஞ்சலி செய்து எழுதிய கட்டுரை ஒன்றில், தமது முன்னாள் ஆசிரியரின் சாதனைகளை விந்தன் போற்றியதுடன், மனிதப் பண்புகளில் உயரியதான ஒன்றை அன்னார் கொண்டிருந்ததைச் சிறப்பாகக் குறிப்பிட்டார் :

''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்''

என்பது வள்ளுவர் வாக்கு. அந்த வாக்கைப் பிரதிபலிக்கும் உருவம் ஏதாவது ஒன்று நம் காலத்தில் இருந்திருக்குமானால், நாம் அதைப் பார்த்திருப்போமானால், அது ஆசிரியர் கல்கி அவர்களின் உருவமாய்த்தான் இருந்திருக்க வேண்டும்.

(தொடரும்)


பத்தாம் வகுப்பு !

'அக்கா ஃபெயில், அண்ணன் ஃபெயில், தம்பி, தங்கை இருவரும் ஃபெயில், எங்கள் வீட்டில் எல்லாரும் ஃபெயில் என்னைத் தவிர!' குதித்துச் சொன்னான் எதிர்வீட்டுச் சிறுவன்.

'நீ மட்டும் பாஸா !' வியப்புடன் கேட்டேன் : 'எந்த வகுப்பு ?'

பதில் வந்தது மெதுவாய் ''பத்தாம் வகுப்பு !''

— பி. அ. தாவீது



புதிய ரெக்ஸோனா உங்கள் மேனியை மென்மையோடு மெருகு மிளிர வைத்திருக்கும் சோப்



ஆரோக்கியம் திகழும் மேனியை அடைய, சரும நலனைப்பெற நவீனகால மங்கையர் நாடுவது புதிய ரெக்ஸோனா. உங்கள் மேனியை மழமழ மென்மையோடு, அங்கமெங்கும் தங்க மெருகு மிளிர வைத்திருக்கும் சோப். குளித்திடுங்கள் ரெக்ஸோனா சோப்பினால்—உங்கள் சருமத்திற்கு இதுவே நல்லது.

புதிய ரெக்ஸோனா உங்கள் சருமத்திற்கு நல்லது

லின்டாஸ்-RX-68-140 TH

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.



ருசிகள்

பொன்னீத் துறைவன்

பொல பொலவென்று விடிந்து வெகு நேரம் கழித்துத்தான் அப்சரா தூங்கப் போனாள். மணி ஆறுக்கு மேலாகவே இருக்குமோ என்னவோ முழு வேகத்தோடு ஷவரைத் திருப்பிவிட்டு அதனடியில் கண்களை மூடிக்கொண்டு நின்றபோது ஹால் கடிகாரத்தின் மணியோசை அரைகுறையாகக் காதில் விழுந்தது. தொண்டைக்குழாயெல்லாம் வறண்டு கிடந்தது. மிளகாயை வைத்து அப்பியது போல் கண்களும் உடலும் எரிந்தன. முன்னிரவின் சம்பவத்தை நினைத்து நினைத்து நெஞ்சு அடையாகக் கனத்தது., அத்தனை களைப்படியிலும் ஷவரின் குளிர்ந்த இனிமை அமுதமாக மயிர்க்கால்களின் வழியே உடலெல்லாம் பரவுவதை அவளால் உணராமல் இருக்க முடியவில்லை.

எவ்வளவோ நாட்கள் பார்ட்டிகளுக்குப் போய் வந்து விடியற்காலை நாலு மணிக்கெல்லாம் ஷவரில் குளித்திருக்கிறாள். குளித்துவிட்டு, ஸெண்ட்டும் சோப்பும் மணக்க, புத்தம் புது மலராகத் தொளதொளவென்று மெல்லிய கவுனை மட்டும் அணிந்துகொண்டு போதைக் கிறக்கத்தில் படுக்கையில் சுருண்டு கிடக்கும் ராஜேஷைச் செல்லமாக, ''கம் ஆன் மை பாய்! ஹேவ் எ ஷவர். யூ ஆர் ஸ்டிங்கிங் லைக் ய ஹார்ஸ்!'' என்று உலுக்குவாள். அவன் முகத்தில் தண்ணீரைத் தெளித்துச் சீண்டுவாள். காதுக்குள் ஊதிக் குறுகுறுப்பூட்டுவாள். அவன் சிணுங்கிக் கொண்டே புரண்டு படுத்து இரண்டு கைகளையும் நீட்டி அவளைத் தழுவ முயல்வான். ''நோ, நோ, நாட் நௌ'' என்று போலிக் கண்டிப்புடன் அவன் பிடியிலிருந்து நழுவி விடுவாள்.

ஆனால் இன்று? ராஜேஷ் வீட்டில் இருக்கிறானா என்பது கூட அவளுக்குத் தெரியாது. காலை ஐந்து மணிக்கு அவன் சோபாவில் — முதல் நாள் இரவு போதையோடு மயங்கிக் கிடந்த நிலையிலேயே — இருந்தான். அப்சரா தோட்டத்துப் பக்கம் சென்று சற்று நேரம் உலவி விட்டுத் திரும்பும் போது அவன் அங்கில்லை. அதைப் பற்றி அவள் கவலைப்படவுமில்லை. அவளைப் பொறுத்தவரை ராஜேஷுக்கும் அவளுக்கும் இருந்த கணவன்—மனைவி என்ற உறவு, அவன் எந்த நிமிஷம் அவளைக் கன்னத்தில் காட்டுத் தனமாக அறைந்தானோ அதே நிமிஷத்தில் அற்றுப் போய்விட்டது. எதற்காக அப்படி மிருகமாக நடந்து கொண்டான் என்பதைப் பற்றிச் சிந்திக்க அந்நிலையில் அவளுக்குப் பொறுமையில்லை. அடிபட்ட பெண் புலியாக மனம் உறுமிக் கொண்டிருந்தது. தனது சுய கௌரவத்தைச் சம்மட்டியால் அடித்து நொறுக்கி விட்டதாக மட்டும் அவளுக்குப் புரிந்தது. அடுத்த கணம் நெஞ்சு மெல்லாம் கருமையான துவேஷப் பகை படருவதை அவளால் உணர முடிந்தது. தனது படிப்பு, சுய கௌரவ வளர்ப்பு, அந்தஸ்து, சுய கௌரவத்திற்குத்தான் புழங்கும் வட்டாரத்தில் அளிக்கப்படும் முக்கியத்துவம், ஆண் — பெண் உறவு இன்ன வகையில் இருக்க வேண்டும் என்று தனக்குள்ளாகவே போட்டிருந்த புள்ளி — இவை அனைத்துமாகச் சேர்ந்த நியாயத்தின் ஆளுகைக்குள் அவள் குமுறிக் கொண்டிருந்தாள்.

இரவே பம்பாயிலிருந்த அப்பாவுடன் டெலிபோனில் பேசியாகி விட்டது. பகல் பதினொரு மணி பிளேட்டில் அவர் வருகிறார். படுக்கை அறைக்குள் நுழையு முன்னர் சமையல்காரனை அழைத்து, அப்பா வந்த பிறகு தன்னை எழுப்புமாறும் வேறு எதற்காகவும் தொந்தரவு செய்ய வேண்டாமென்றும் கட்டளை பிறப்பித்து விட்டுத் தொப்பென்று மெத்தையில் விழுந்தாள் அப்சரா. உடல் சோர்ந்திருந்தாலும் மூடிய இமை



களுக்குள்ளே முன்னிரவின் சம்பவங்கள் நிழற் படம் போல் ஓட ஆரம்பித்தன.

ஐந்து நட்சத்திர ஹோட்டல். புது வருட 'ஜாம் ஸெஷன்'. விஸ்கி நெடி — ஸிகரெட் புகை — ஸென்ட்டின் மணம். வெளிச்சத்தின் இதமான மங்கலில் பிறந்த கனவுலக பிரமை. வயதானவர் களின் இரத்தத்தைக் கூடக் கிளர்ந் தெழச் செய்யும் 'மட்டமான' இசை.

குமாருடன் நடனமாடிக் கொண்டி ருந்தாள் அப்சரா. திருமணத்துக்கு முன் பிருந்தே அவனுடன் இருந்த தொடர்பைப் பற்றி ராஜேஷிடம் சொல்லி யிருக்கிறாள். தனக்கு இருந்த ''பாய் பிரண்ட்ஸ்களில்'' இவன்தான் உருப்படியானவன் என்று சிரித்துக் கொண்டே அவனை ராஜேஷுக்கு அறி முகம் செய்து வைத்தபோது, ராஜேஷ் குமாரின் கைகளைக் குலுக்கியபடியே, ''ஹல்லோ சம் ! ஹௌ நைஸ் டு மீட் யூ'' என்று முகமன் கூறியிருக்கிறான். அதே போல் ராஜேஷும் தனது பல ''கேர்ல் பிரண்ட்ஸ்''களை அப்சராவுக்கு அறிமுகம் செய்து வைத்திருக்கிறான்.

இசை துரித கதியில் முழங்கிற்று. பன்னிரண்டு மணியை அனைவரும் ஆவலுடன் எதிர் நோக்கி யிருந்தனர். விளக்குகளெல்லாம் சில கணங்கள் அணைக்கப்படும் தருணம் அது தான். அந்தரங்கமும் அந்தகாரமும் கூடும் புனிதமான கல்யாண வேளை.

குமார் சற்று அதிகமாகவே குடித்திருந் தான். நடனம் ஆடிக் கொண்டே, தன் னுடன் சுற்றிச் சுற்றி வரும்போது அவனது செய்கைகள் ''ஓவராக''ப் போவதை அப் சரா உணர்ந்தாள். ஆயினும் தனது பூர்வ காலப் பிணைப்பின் ஆக்கிரமிப்பில், மட்ட மானஇசையின் கிளுகிளுப்பில், சூழ்நிலையின் சிருங்காரத்தில், மங்கலான வெளிச்சத்தின் மயக்கத்தில், தனது நடத்தை ராஜேஷின் நோக்கில் எவ்வாறு புரிந்து கொள்ளப்படும் என்பதைப் பற்றிச் சிந்தனை செய்யும் திராணி அந்த நேரத்தில் அவளுக்கு இல்லை.

இருட்டைத் துளைத்துக் கொண்டு செக் கச் செவேலென்ற இரு பெரிய விழிகள் தன்னை நோக்கிப் பயங்கர வேகத்தில் வரு வதை அவள் நிச்சயம் செய்து கொள் வதற்கு முன், அவளது பிடரியில் கல்லிய ஒரு கை அவளைக் குமாரிடமிருந்து இழுத் துத் தூர எறிந்தது. இன்னொரு கை குமாரின் வயிற்றுக்குள் 'கும்'மென்று நுழைந்தது. ''ஹோ மை காட்'' என்ற குமாரின் பரிதாபமான அலறல் நடன இசையைக் கிழித்துக் கொண்டு ஒலித் துக் கொண்டிருக்கும்போதே, ராஜே ஷின் இரும்புக் கரம் தன் பின்



கழுத்தில் உடும்புப் பிடியாகப் பதிந்து தடதட வென்று தன்னைத் தள்ளிக் கொண்டு போவதை உணர்ந்தாள் அப்சரா. பிறகு கார் பின் சீட்டில் மூட்டை போல் நிர்தாட்சிண்யமாக உருட்டி விடப்பட்டது. வண்டி எண்பது மைல் வேகத்தில் அசுரத்தனமாக ஓடியது. வீட்டை அடைந்தவுடன் தலை முடியைப்பற்றி வேகமாக இழுத்து நிறுத்தி அவளது முகத்தைத் தன் முகத்துக்கு வெகு அருகில் பிடித்துக் கொண்டு கடித்த பற்களுடன் கொடுத்த பளார் என்ற அறை மீட்டிய 'ஙொய்ய்'' என்ற சுருதியை ஆதாரமாகக் கொண்டு அவன் கூறிய வார்த்தைகள்:

''யூ ஆர் ய ப்ளடி பிராஸ்டிட்யூட்!''

அப்சராவுக்குக் கத்தக்கூட நாவெழவில்லை. பிரமை பிடித்த மாதிரி கன்னத்தையும் காதையும் பொத்தியவாறு சில கணங்கள் அடித்த சிலையா யிருந்தாள். பிறகு ஆவேசம் பிடித்தாற்போல் கத்திக் கொண்டே கையில்

xxxxxxxxxxxxxxxxxxxxxxxxx

சம்பல் பள்ளத்தாக்கில் இப்பொழுது திரும்பவும் கொள்ளைக்காரர்கள் அதிகமாகி விட்டார்கள். 1972ல் ஜெயப்பிரகாஷ் நாராயண் முன் இவர்கள் சரண் அடைந்தது போல இந்த ஆண்டு புதிய கொள்ளைக் காரர்கள் சஞ்சய் காந்தி முன்னிலையில் சரண் அடைவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது. -- ஆன்லுக்கர் - பாலி



xxxxxxxxxxxxxxxxxxxxxxxxx

கிடைத்த பத்திரிகை, பேப்பர் வெயிட், ஆஷ்ட்ரே எல்லாவற்றையும் சரமாரியாக அவன் மீது எறிந்து கொண்டே யிருக்கையில், அவன் ஒரே பாய்ச்சலில் அவளது குரல்வளையைப் பிடித்துச் சோபாவில் தள்ளித் திக்குமுக்காடச் செய்து விட்டான். அவளுக்கு மயக்கமே வந்து உடலெல்லாம் வியர்த்து விட்டது. ''இப் யூவர் மௌத் ஷட். ஆர் ஐ வில் கில் யூ'' என்ற எச்சரிக்கையுடன் அவன் திரும்பிப் போய் ஒரு புதிய விஸ்கி பாட்டிலைக் கொண்டு வந்து உடைத்து மடமடவென்று குடிக்க ஆரம்பித்தான். சோபாவிலேயே பம்மிப் போய்க் கிடந்த அப்சரா அவன் மயங்கிப் பக்கத்து சோபாவில் விழும்வரை அசையவே யில்லை. பிறகு எழுந்து அவன் விழுந்து கிடந்த இடத்துக்கு வந்து, அவனை உற்றுப் பார்த்துவிட்டு, ''உனக்குச் சரியான பாடம் கற்பிக்கிறேன்'' என்பது போல் மேலும் கீழும் தலையை ஆட்டிவிட்டு அப்பாவுக்கு டெலிபோன் செய்ய ஆரம்பித்தாள்.

அப்சராவின் தந்தை நாராயண் மத்திய தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்தான். அந்தக் காலத்திலேயே பம்பாய்க்குச் சென்று யாரோ ஒரு குஜராத்தி வியாபாரியிடம் காரியஸ்தராக அமர்ந்து படிப்படியாகத் தொழில் நுணுக்கங்களை யெல்லாம் அறிந்து உரிய காலத்தில் தனியாகவே ஒரு தொழிலை ஆரம்பித்துச் செல்வம் குவித்தார். வியாபார நுணுக்கங்கள் என்பதெல்லாம் நாற்பது சதவீதம் சாமர்த்தியமும் அறுபதுசதம் திருட்டுத்தனமும் சேர்ந்ததே என்பதை நன்கு அறிந்தவர். 'வளர்ந்து' வரும் சமுதாயத்துக்கேற்பத் தமது குடும்பமும் ஈடு கொடுத்து முன்னுக்கு வரவேண்டுமே என்ற கவலையிலும், கடைசல் பிடித்த யோக்கியனாக இருந்தால் மூலையில் உட்கார வைத்து மண்ணைப் போட்டு மூடி விடுமே இப்பொல்லாத உலகம் என்ற ஞாபகத்திலும், தர்ம நியாயங்களைத் தாலாட்டித் தூங்கவைத்துவிட்டு, கொஞ்சம் தாராளமாகவே சம்பாதித்தார். ஆயினும் உடலில் இரத்தம் கண்டி வயது ஆக ஆக, தமது வாழ்க்கைப் பிலாஸபியிலிருந்து நம்பிக்கை தளர ஆரம்பித்தது. ஒரே பெண் அப்சராவின் நடவடிக்கைகள் அவருக்குத் தளர்ச்சியூட்டின. எம். எஸ்ஸி. ஹோம் ஸைன்ஸ் படித்துவிட்டு, ஜர்னலிஸம் டிப்ளோமா வாங்கி, நடனம், பாட்டு, நீச்சல் யாவற்றிலும் சிறந்து சகல கலா வல்லியாகப் பேரெடுத்ததோடு நிற்காமல், இரவு பகலென்று பாராமல், ஸர்வ சுதந்திரமாகச் சுற்றி வந்தாள். விளம்பர நிறுவனங்களுக்கு வேறு மாடலாகப் பணியாற்றி வந்ததால் சொந்தமாகச் சம்பாதிக்கும் தெம்பும் சேர்ந்து கொண்டது. ராஜேஷை ஒரு நாள் வீட்டுக்கு அழைத்து வந்து அவனை மணக்க இருக்கும் திட்டத்தை வெளியிட்ட போது நாராயண் ஆச்சரியப்படவில்லை. திருமணம் மிகத் தடபுடலாக நடந்து, ஆறு மாத காலத்துக்கு எல்லாம் ஒழுங்காகவே இருப்பது போல் தோன்றியது....

விமானத்தை விட்டிறங்கிய நாராயண் நேராக ராஜேஷின் அலுவலகத்துக்கே சென்று அவன் அறைக்கு 'விசிட்டிங் கார்டை' அனுப்பி வைத்தார். அழைப்பு வந்தவுடன் உள்ளே சென்றபோது, ''நீங்கள் வருவீர்களென்று தெரியும்'' என்ற வார்த்தைகளோடு கொஞ்சம் கேலி ததும்ப அவரை வரவேற்றான் ராஜேஷ். நடந்தவற்றை அப்படியே சொன்னான். தனக்கு இனி அப்சராவுடன் வாழும் உத்தேசம் இல்லை என்பதையும், குடும்பப் பெண்ணாக இருக்க அவள் லாயக்கில்லை என்பதை உணர இத்தனை காலமானது தனது துரதிர்ஷ்டம் என்றும் அவன் சாடியதைக் கேட்டும் நாராயண் அதிர்ச்சி அடையவில்லை. கோபமும் கொள்ளவில்லை. நிலைமை படுமோசம் என்பது விளங்கிற்று. ராஜேஷிடமிருந்து மௌனமாக விடைபெற்று வெளியே வந்து, கடமையின் உண்மைப் பொருளைக் காலம் கடந்து உணரும் அசட்டுத் தனத்துடன் அப்சராவிடம் பேசக் கிளம்பினார்.

சரளமான ஆங்கிலத்தில் சாங்கோபாங்கமாக நடந்தவற்றைக் கூறினாள் அப்சரா. ராஜேஷ் ஒரு ''குகை மனிதன்; பொறாமைக்காரன், திமிர் பிடித்தவன், கணவன் பதவிக்குச் சிறிதும் லாயக்கற்றவன்'' என்றெல்லாம் பாஷ்யம் செய்தாள். விவாக ரத்து ஒன்றுதான் அதற்குப் பரிகாரம் என்றும்,

அன்றும் இன்றும் சிலருக்கு அதே இளந்தளிர் மேனி!





பியர்ஸ்— அசல் கிளிசரின் சோப்

கனிவான பியர்ஸ் சோப்பினால் காத்திடுவீர்
உங்கள் மேனி மெருகை. மாணிக்கப் படிகம்போல
மிளிரும் ஒவ்வொரு வில்லையிலும் ஒரு நூறாண்டு
கால சோப்-உற்பத்தி அனுபவம் உள்ளிறங்கியுள்ளது.
மிருது மென்மை சொரூபம் பியர்ஸ்—தூய்மைக்
கொழுந்து—கண்கூடாக நீங்கள் ஊடுருவிப்
பார்க்கக்கூடிய உன்னதத் தூய்மை.

பியர்ஸ் சருமக் களை...
கன்னிப் பருவக் களை

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

லிண்டாஸ்-PS. 56-140 TM

தான் ஏற்கனவே வக்கீலுடன் கலந்தாலோசித்து விட்டதாகவும், 'ஜூடிஷியல் செபரேஷ'னை விட 'டைவோர்ஸ்'தான் நிம்மதி என்று தான் தீர்மானித்து விட்டதாகவும் அதில் ஆட்சேபணை இருக்காது என்றும் கூறினாள். இனிக் கேட்பதற்கு என்ன இருக்கிறது என்று சோர்ந்துபோன நாராயண் தம்மையும் மீறி ஒரு கேள்வியைக் கேட்டார்.

''ஏம்மா, என்ன இருந்தாலும் அவன் ஆண் பிள்ளை இல்லையா?''

இக்கேள்விக்குப் பதிலாக அப்சரா, 'ஹோ, ஹோ'வென்று ஏளனமாக சிரிக்கத் தொடங்கி நீண்ட நேரம் சிரித்துக் கொண்டேயிருந்தாள். விழிகளில் ஈரம் கசியக் கசியச் சிரித்தாள். பிறகு, சிறிது மௌனத்துக்குப் பிறகு, ஆத்திரத்துடன் காலைப் பூமியில் அடித்தவாறே சொன்னாள் :

''அவன் ஆண் பிள்ளை என்று நினைத்தது தான் நான் செய்த முதல் தவறு !''

அதை எப்படிப் புரிந்து கொள்வது என்று தெரியாமல் திண்டாடினார் நாராயண். ''என்னம்மா, சொல்றே நீ?'' என்று பரிதாபமாகக் கேட்ட போது அவள், ''எஸ். ஐ மீன் இட்'' என்று ஆவேசமாகச் சொல்லிவிட்டு அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

தொய்ந்து போய் உட்கார்ந்துவிட்டார் நாராயண். தாம் மும்முரமாக வியாபாரத்தில் ஈடுபட்டுப் பண விருட்சத்துக்கு ஊட்டம் கொடுத்து, கொள்ளை கொள்ளையாக அம்மரம் காய்க்கத் தொடங்கிய அதே நேரத்தில் வீட்டில் ஓர் இளம் செடி துளிர்த்துக் கொண்டிருந்ததையோ, அதைச் சுற்றிப் பயங்கரமான பூச்சிகள் ஊர்வதையோ கவனித்துத் தக்க நடவடிக்கைகள் எடுக்காத பாபம் எப்படி நிழல் போல் தொடர்ந்து வந்து, இன்று, எளிமை, தியாகம், பொறுமை, கற்பு என்ற வாழ்க்கையின் உயிர்ச் சத்துக்களெல்லாம் இந்திரிய ருசிகளின் கோரப் பசிக்குப் பலியாகி, திருமணம் என்பது இரண்டு படித்துப் பட்டம் பெற்ற அகங்காரங்கள் மோதிக் கொள்ளும் போர்க்களமாகப் பாவிக்கப்படும் நிலை ஏற்பட்டுவிட்டது என்பதை நினைக்கையில் நாராயணனுக்கு நெஞ்சை அடைத்தது.

ஜன்மாந்தர வாசனைகளால் ஏற்படும் ருசிகள், அந்த ருசிகளை ஒரு நடைமுறை ஒழுங்கில் பக்குவப்படுத்தா விட்டால் தனி மனிதனுக்கு உண்டாகும் அனர்த்தங்கள், அவ்வனர்த்தங்களால் ஏற்படும் சமூகச் சீர்கேடுகள், அதில் விளையும் கலாச்சார அழிவு— இவைகளைப் பறைசாற்றிய கோவில் மண்டபங்கள், பிரவசனக் கூடங்கள், ஆற்றுப் படித்துறைகள் ஆகிய பொறுப்பான சமூக ஏற்பாட்டின் அரவணைப்பில் இளமையைக் கழித்திருந்த தானே இப்படி அநியாயமாக ஏமாந்துவிட்டதை எண்ணுகையில் அவருக்கு அழுகையே வந்துவிட்டது. ராஜேஷ், அப்சராவைக் குடும்பப் பெண்ணாக இருக்கவே லாயக்கில்லாதவள் என்றதும், அப்சரா ராஜேஷை ஆண்பிள்ளையே இல்லை என்றதும் காதில் ஒலித்துக் கொண்டேயிருந்தது. பெற்றோர்களாயிருப்பதற்கு அருகதையில்லாதவர்களிடம் வளர்ந்த பிள்ளைகள் வேறு எப்படி இருக்க முடியும் ?

ஒரே நாளில் தீர்க்கக் கூடிய பிரச்னையல்ல இவ்விஷயம் என்பது நாராயணனுக்குத் தெரியும். அதே நேரத்தில் ஒரே நாளில் வந்த பிரச்னையும் அல்ல இது என்பதும், இதைத் தோற்றுவித்த பெருமை ஒரு தலைமுறையைச் சேர்ந்த பெற்றோர் அனைவருக்குமே உண்டு என்பதும் இப்பொழுதுதான் விளங்கிற்று.

இரவு விமானத்திலேயே பம்பாய் திரும்புவது என்று தீர்மானித்துவிட்டார் நாராயண். சதா வைரத் தோடுகளைத் துடைத்துவிட்டுக் கொண்டும் பட்டுப் புடவைகளை எண்ணி வைத்துக் கொண்டுமே காலம் தள்ளிவிட்ட தம் மனைவியை நினைத்தபோது அவருக்குச் சப்பென்றிருந்தது. ஆனால் மனைவியைவிடத் தான் எவ்வகையிலும் உயர்ந்தவனல்ல என்பதும் விளங்கிற்று. புரிந்தும் கையாலாகாமல் இருப்பதைவிடப் புரியாமல் இருப்பதே மேல் அல்லவா என்று நினைத்தார்.

வீடு வெறிச்சென்று கிடந்தது. டைனிங் ஹாலில் சமையற்காரன் மட்டும் ஏதோ செய்து கொண்டிருந்தான்.

மாடம் டுஸ்ஸாண்ட் மெழுகுச் சிலை கண்காட்சியில் வைத்திருக்கும் சிலைகளில் அவ்வப்போது சிலவற்றை அப்புறப்படுத்தி விடுவார்கள். சமீபத்தில் அப்படி அப்புறப்படுத்தப்பட்டவை அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன், பிரிட்டிஷ் இளவரசி மார்கரெட்டின் கணவர் டோனி ஜோன்ஸ் இவர்களுடையது.

டைம் —கே.ஆர்.




திடீரென்று டெலிபோன் ஒலித்தது. நாராயணனே ரிஸீவரை எடுத்தார். பம்பாயிலிருந்து மனைவி பேசினாள் : ''பெரிய சண்டை ஒன்றுமில்லையே ? அப்சரா என்ன சொல்றா?'' என்று பொறுமை இ[illegible]ாமல் கேட்டுக் கொண்டே இருந்தாள். [illegible]ல் விளக்கினாலேயே புரிந்து கொ[illegible]டியாதவளுக்கு டெலிபோனில் என்னத்தைச் சொல்வது? என்று குழம்பிய நாராயண், ''அதெல்லாம் ஒன்றும் பெரிய சண்டையில்லை. நான் ராத்திரியே திரும்பறேன். வந்து சொல்றேன்'' என்று கூறி வைத்தார். ''அப்பாடி!'' என்று பெருமூச்சுவிட்டவாறே, ''கிளம்பின அவசரத்துலே உங்ககிட்டச் சொல்ல மறந்துட்டேன். ஞாபகமா இரண்டு கிலோ சாம்பார்ப் பொடி வாங்கிண்டு வாங்கோ'' என்று கூறினாள் மனைவி. நாராயணனுக்கு வந்த ஆத்திரத்துக்கு அளவேயில்லை. பதில் பேசாமல் பல்லைக் கடித்துக் கொண்டு பொத்தென்று ரிஸீவரை வைத்தார். இதைக் கவனித்துக் கொண்டே வந்த சமையல்காரன், ''யாரு?'' என்று கவலையோடும் கவாதினத்தோடும் கேட்டான். அவனை ஒரு முறை முறைத்தார் நாராயணன். பிறகு, ''ஜென்மாந்திரக் கடன்'' என்று கூறி அவனை வெட்டினார். அவன் அசடு வழிய நின்றான்.

"ஸ்ரீ யோகாம்பிகை அதிஷ்டானம்"

ஸ்ரீ யோக கருமாரி அம்மன் அதிஷ்டானம்

திருவேற்காடு டெலிபோன்: 841785 சென்னை-77


புதுக்கோட்டை ஸ்ரீ புவனேஸ்வரி பீடாதிபதி ஸ்ரீமத் சாந்தானந்த சரஸ்வத்யவதூத ஸ்வாமிகள் ஸ்ரீ சக்ர பூர்ண மஹாமேருவை மேற்படி அதிஷ்டானத்திற்கு அளித்து மஹா பிரதிஷ்டை செய்தனர்.

உலக நலனுக்காக 4வது ஆண்டில்

"ஸ்ரீ நவசண்டி மஹா ஹோமம்" நடைபெறும்

ஆரம்பம்: 9-6-76, மஹா பூர்ண ஆஹுதி 11-6-76 பகல் 12 மணி

ஸ்ரீ சக்ர பூர்ண மஹா மேருவுக்கு விசேஷ நவாபரண பூஜை நடைபெறும்

9-6-76 காலை ஸ்ரீ லக்ஷ்மி ஸம்புடித கணபதி மூலமந்த்ர ஹோமம்.
மாலை ஸ்ரீ P.P. ராமகிருஷ்ணன் & ஸ்ரீ M. பாலகிருஷ்ணன் பார்ட்டி-வயலின்

10-6-76 காலை ஸ்ரீ நவக்ரஹ ஹோமம். ஸப்த ஸதி பாராயணம்
மாலை ஸ்ரீமதி சீதாலக்ஷ்மி நாராயணன் குழுவினர் - கச்சேரி

11-6-76 காலை கோ பூஜை, கஜ பூஜை, கன்னிகா பூஜை, சுவாசினி பூஜை, வடுக பூஜை, வசோத்தாரை, ஸ்ரீ நவசண்டி மஹா ஹோம மஹாபூர்ணா ஆஹுதி, ஸ்ரீ யோக கருமாரி அம்மனுக்கு மஹா அபிஷேகம், மஹா தீப ஆராதனை.
மாலை குமாரி ஹேமலதா - வீணை. *(Disciple of Chittibabu)*
சிவாகம-சிரோமணி இலுப்பப்பட்டு S. கல்யாண சுந்தர சிவாச்சாரியார் குழுவினர் மேற்படி ஹோமங்களை நடத்துகின்றனர்.

திருமதி சௌந்திரா கைலாசம் வித்வான்களை விமர்சிப்பார்

ஒரு சங்கல்ப ஹோமத்திற்கு ரூ. 125ம், பூஜித்த ஒரு யோக கருமாரி அம்மன் வெள்ளி டாலருக்கு ரூ. 15ம் மேற்படி முகவரிக்கு அனுப்பவும்.


வட திருமுல்லைவாயில் ஸ்ரீ வைஷ்ணவி ஆலயம் தவத்திரு அருட்கவி ஸாது ராம் ஸ்வாமிகள் ஆசுகவியாக அருளியுள்ள ஸ்ரீ யோக கருமாரி அம்மன் அருட்பாடல் புத்தகமும் அனுப்பப்படும்.

தலைவர்: அருள்மொழி அரசு திருமுருக கிருபானந்த வாரியார்
உபதலைவர்: அம்பிகை அடிமை ஸ்ரீ N. சங்கரன், (ஸ்தாபகர்) திருவேற்காடு
காரியதரிசிகள்: ஸ்ரீ M. V. சுவாமிநாதன், B. Com., ஸ்ரீ R. V. ரமணி, B. E.,
ஸ்ரீமதி ஜானகி அம்மாள்

கலை கலையாம் காரணமாம்...


சாருகேசி

கலைகள் தினசரி வாழ்க்கையோடு ஒட்டியதாக இருத்தல் வேண்டும் என்று சிலர் சொல்கிறார்கள். கொஞ்சம் கற்பனை பண்ணிப் பார்த்தபோது —



★ குமாரி குந்தளாவின் பரத நாட்டியத்தைப் பற்றி விமர்சகர் ஒருவர் எழுதுகிறார் :

'எத்தனை தரம் சொன்னாலும் — அழுகல். கத்திரிக்காயை வாங்கி வர எப்படி மனம் துணிந்தீர்?' என்ற பதத்துக்குக் குந்தளா பிடித்த முத்திரைகளும் அபிநயமும் சபையை மெய்ம்மறக்கச் செய்தன. அருவருப்பும் கோபமும் முகத்தில் வெளிப்படுத்தும் மனைவியாகவும், அவர் முன்னே எண்சாணும் ஒரு சாணாகக் குறுகி, நடுநடுங்கி நிற்கும் கணவனாகவும் மாறி மாறி அபிநயித்து அவர் ஆடிய பதங்கள் இனிப் பல வருஷங்களுக்குச் சபையோர் மனத்தைவிட்டு அகலா.



★ அண்மையில் நடைபெற்ற பிரபல ஓவியர் செல்லையாவின் ஆயில் பெயின்டிங்குகள், உண்மையான கலைப் பொக்கிஷங்கள். ஒரு கையில் கன்னங்கரேல் என்ற பறவையைப் பிடித்துக் கொண்டும், மற்றொரு கையில் காகிதம் ஒன்றைச் சுருட்டி வைத்துக் கொண்டும் இருக்கிறமாதிரி இளைஞன் ஒருவனைச் சித்திரிக்கும் பெயின்டிங் உண்மையிலேயே சிந்தனையைத் தூண்டக் கூடியது. ஆனால் பத்திரிகைக் கார்ட்டூன் மாதிரி, பறவையின் மேல் 'காக்காய்' என்றும், — காகிதச் சுருளில் 'பதவி — பதவி உயர்வு' என்றும் எழுத வேண்டுமா ?



★ தேவகான சபையில் புல்லாங்குழல் இசை பொழிந்த ஜெய ஜெயலால் அவர்களின் வாசிப்பைப் பார்த்து, அவரை எண்பது வயதுக் கிழவர் என்று யாரும் சொல்லமாட்டார்கள். அப்படி ஒரு வாசிப்பு, போங்கள். சபையோரை முக்கால் மணி நேரம் மயக்கிப் போட்டு விட்டார். ஆனால் கச்சேரி ஆரம்பிக்குமுன் அவர் சற்று நேரம் ஒரு நீண்ட கழியை இரண்டு ஓரத்திலும் ஊதிப் பார்த்து விட்டு, ஒலி எதுவும் அதிலிருந்து கிளம்பாததும், ரசிகர்கள் சிலர் வியப்புடன் அவரையே நோக்கியதும், சிலர் மரியாதையுடன் பயந்து பயந்து சிரித்ததும் பெரிய சஸ்பென்ஸாக இருந்தது. பிறகு தான் அந்தக் கழி, பக்கத்திலேயே வைத்திருந்த அவரது வாக்கிங் ஸ்டிக் என்று அவர் புரிந்து கொண்டு, கீழே வைத்தார். அதே நீளத்திலிருந்த தமது புல்லாங்குழலை எடுத்து வாசித்தார். அமைப்பாளர்கள் அவரை மேடையில் உட்கார வைத்துவிட்டு, வாக்கிங் ஸ்டிக்கைத் தனியே வாங்கி வைத்திருக்கலாம்.....



★ சிற்பக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களின் கண்காட்சியைப் பார்த்துவிட்டு ஓர் அன்பர் எழுதிய கடிதம்:

மரத்தினாலும் கல்லினாலும் ஆன நவீன சிற்ப வடிவங்கள் மிகச் சிறப்பாக இருந்தன. அதிலும், எரிந்து போன எல். ஐ. சி. பில்டிங் என்று ஓர் உருண்டை மரக்கட்டையைப் பதினாறு அடி உயரத்துக்கு நடு ஹாலில் வைத்திருந்தது அற்புதம். பதினாறு அடியும் பதினாறு மாடியைக் காட்டுகிறதாம். ஆனால் பார்வையாளரில் கிராமவாசியான ஒரு முதிய பெண்மணி, 'இத்தனை பெரிய உலக்கையை வைத்திருக்கிறார்களே, யாரால் பிடித்துக் கொண்டு இடிக்க முடியும்?' என்று கேட்டது வேடிக்கையாக இருந்தது.



மர்மக் ⇨

ஒரு நாள் விநோபாவின் அடிச்சுவடுக் களைத் தரையில் பார்த்தேன். ''ஆஹா ! இனி விநோபாவின் அடிச்சுவடுக்களைத்தான் நாம் பின்பற்ற வேண்டும். அதுதான் நமக்கு எளிது'' என்ற முடிவுக்கு உடனே வந்தேன். காரணம் என்னவென்றால், நான் நடக்கும் போது என் அடிச்சுவடுக்களுக்கு இடையில் என்ன இடைவெளி ஏற்படுமோ, அதே இடை வெளி விநோபாவின் கால் அடிச்சுவட்டுக் களுக்கு இடையில் இருப்பதைக் கண்டேன். விநோபா அவர்களைப் பின்பற்ற எனக்குத் தகுதி உண்டு என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும் !

ஆனால் என்ன அக்கிரமம்! அவர் அடிச் சுவடுக்களைப் பின்பற்ற, அவர் பின்னால் சென்ற கூட்டம் என்னை விடவேயில்லை. என்னை முந்திக் கொண்டு சென்ற அந்தக் கூட்டம் அவருடைய பொன்னான அடிச் சுவடுக்களை அழித்துக் கொண்டே சென்று விட்டது.

சமீபத்தில்தான் ஓர் அறிஞர் என்னைப் பார்த்து, ''ஒரு பெரியவரின் அடிச்சுவடுக் களைப் பின்பற்றுவது என்பதற்கு அர்த்தம் வேறு : அவரது குணங்களையும் செயல்களை யும் பின்பற்ற வேண்டும்'' என்று கற்றுக் கொடுத்தார்.

''இது முன்னமேயே தெரியாமல் போய் விட்டதே !'' என்று மிகவும் வருந்தினேன். சரி, இனியாவது விநோபா எப்படி நடந்து கொள்கிறாரோ, அப்படியே நாமும் நடக்க வேண்டும் என்று தீர்மானித்து விநோபா வைப் பற்றி ஏதாவது செய்தி வந்திருக்கிறதா என்று அறிய அன்றையப் பத்திரிகையைப் பிரித்தேன்.

தில்லியில் நடந்த அகில இந்திய, வர்த்தக, தொழில் சபையின் பொன் விழா வுக்கு விநோபா ஒரு செய்தி அனுப்பியிருந் தார்.

அதில் விநோபாஜீ தம் விலாசத்தை பி.வி. என்று குறிப்பிட்டிருந்தார். பிறகு கடிதத் தின் இடது பக்கத்தில் கோவில், பௌனுர், மகாராஷ்டிரா, பாரதம், உலகம், விசுவம் என்று சில வார்த்தைகள் எழுதியிருந்தார். பிறகு வலது பக்கத்தில், $100+100=100$ அதாவது நூறும், நூறும் சேர்ந்தால் நூறு தான் வரும் என்கிற சம கரணத்தை எழுதி யிருந்தார்.

பாவம், இதற்கு அர்த்தம் விளங்காமல் தொழில் அதிபர்கள் தவித்தார்கள். பிறகு விநோபாஜியின் சிஷ்யரான திரு ஸ்ரீமன் நாராயண் அவர்களைக் கூப்பிட்டு விளக்கம் கேட்டார்கள். அவர் பின்வருமாறு விளக்கம் கூறினார்:

''பி. வி. என்றால் பிரம்ம வித்தை என்று அர்த்தம். நூறும், நூறும் சேர்ந்தால் நூறு என்னும் சம கரணத்துக்குத் தனியார் துறைக்கும், அரசுத் துறைக்கும் உள்ள வித்தி யாசம் ஒழிந்து இரண்டும் மக்கள் நன்மைக்குப் பாடுபட வேண்டும் என்று அர்த்தம்.

''கோவில் பௌனர்'' முதலிய சொற் களைக் கவனித்தால் ஓர் உண்மை விளங்கும். கோவில் பௌனர் கிராமத்தில் இருக்கிறது. பௌனர் மகாராஷ்டிரா ராஜ்யத்தில் இருக் கிறது. மகாராஷ்டிரா பாரதத்தில் இருக் கிறது; பாரதம் உலகில் இருக்கிறது. உலகம் விசுவத்தில் இருக்கிறது. ஆகவே நாம் வேலை செய்யும் க்ஷேத்திரம் சிறியதாக இருந்தா லும் நம் நோக்கு விசுவம் முழுவதையும் அளாவி யிருக்க வேண்டும்.''

சரி, இந்த விஷயத்திலாவது நாம் வினோபா ஜியைப் பின்பற்ற வேண்டியதுதான் என்று தீர்மானித்து பம்பாயில் உள்ள என் மாம னுக்கு உடனே ஒரு கடிதம் எழுதினேன்.

''உப்பு இல்லை, கத்தல், கூட்டம், பட் டினி, சென்னை எக்ஸ்பிரஸ், தாதர் எக்ஸ் பிரஸ், துணை — மாப்பிள்ளை.''

இதுதான் கடிதம். கூட ஒரு சமகரணமும் அனுப்பினேன். . $1-1=1$ என்பதுதான் சம கரணம்.

இதை விளக்கிச் சொல்ல என் மாமனார் திரு ஸ்ரீமந் நாராயண் தயவை நாட முடிய

வில்லை. ஆகவே நானே இதற்கு ஒரு விளக்கம் அடுத்த தபாலில் போட்டேன்.

கடிதத்துக்கு விளக்கம் என்ன தெரியுமா?

''நான் சாம்பாரில் உப்பு இல்லை எட்டு வெகு பணிவாக எடுத்துக் காட்டியும், உங்கள் பெண் சரசு கத்த ஆரம்பித்தாள். அந்தக் கத்தலைக் கேட்டு ஊரே வீட்டுக்கு முன்னால் கூட்டம் கூடியது. அவமானம் பொறுக்காமல் நான் பட்டினி. உடனே சென்னை எக்ஸ்பிரஸில் புறப்பட்டு வந்து, தாதர் எக்ஸ்பிரஸில் புறப்பட்டுப் போகவும். போகும் போது உங்களுக்குச் சரசு துணையாக இருப்பாள்.'' இதுதான் கடிதத்தின் விளக்கம்.

சமகரணத்தின் விளக்கம் என்ன தெரியுமா? ''என்னை விட்டு சரசு போனால் நான் தவிப்பேன் என்று நினைக்க வேண்டாம். ஒன்றுமில்லாத என்னை விட்டு ஒன்றுமில்லாத சரசு போனாலும், ஒன்றுமில்லாத நான் ஏங்கவேன்'' என்பது தான் சமகரணத்தின் விளக்கம்.

கடிதம் கிடைத்த மறுநாளே மாமனார் சென்னை வந்து இறங்குவார் என்று பார்த்

கடிதங்கள்

நாடோடி



தால், மாமனார் வரவில்லை, அதற்குப் பதில் அவரிடமிருந்து ஒரு கடிதம்தான் வந்தது.

என்ன வேடிக்கை! என் மாமனாரும் விநோபாஜியைப் பின்பற்ற ஆரம்பித்து விட்டார் என்று தோன்றுகிறதே! அவர் எழுதிய கடிதம் பின்வருமாறு:

''சர்க்கரை இல்லை, கத்தல், கூட்டம், பட்டினி, நான் சென்னை எக்ஸ்பிரஸ், சரசு தாதர் எக்ஸ்பிரஸ் —மாமனார்.''

அதாவது அங்கேயும் இதே கதை நடந்திருக்கிறது. காப்பியில் சர்க்கரை இல்லை என்று மாமனார் கோபித்துக் கொண்டிருக்கிறார். அதற்கு மாமியார் கத்த, மக்கள் கூட்டம் போட, மாமனார் வந்து சென்னையில் என்னோடு தங்கப் போகிறார், பெண் சரசுவை பம்பாய்க்கு அனுப்பிவிடப் போகிறார்.

அப்படியே அடுத்த நாள் மாமனார் சென்னைக்கு இறக்குமதியாக, சரசு பம்பாய்க்கு ஏற்றுமதி செய்யப்பட்டாள்.

சரசு போய்ச் சேர்ந்ததும் மாமியார் ஒரு கடிதம் அனுப்பினார். அதில் ஒரே ஒரு சமகரணம் மட்டும் காணப்பட்டது.


0 + 0 = 0 என்பதுதான் அந்த சமகரணம்!


என் மாமியாரும் விநோபாஜியைப் பின்பற்ற ஆரம்பித்து விட்டாரே!

அவர் அனுப்பிய சமகரணத்துக்கு என்ன அர்த்தம் தெரியுமா?

''மாப்பிள்ளை ஒரு பூஜ்யம், மாமனாரும் ஒரு பூஜ்யம். இரண்டு பூஜ்யங்களும் சேர்ந்து என்னத்தைக் கிழிக்க முடியும்?'' என்பது தான் அதற்கு விளக்கம்.

விநோபாஜியைப் பின்பற்றப் போக இப்படியா அவமானப்பட வேண்டும்!





சேமிப்பதற்கு யூகோ பாங்க் அருகாமையில் உள்ள வசதியான பாங்க்

நீங்கள் எங்கு இருந்தாலும் அங்கே உங்களருகில் ஒரு வசதியான யூகோ பாங்க் உள்ளது. சேமிப்பை எளிதாக்குவதற்காகவே. உங்களை வரவேற்கவும், உங்கள் சேமிப்பை வளரச் செய்யவும் நாடு முழுவதும் எங்கள் கிளைகள் பரந்து இருக்கின்றன.

விவரங்களுக்கு உங்கள் அருகில் உள்ள யூகோ பாங்க் கிளையை அணுகவும்

யுனைடெட் கமர்ஷியல் பாங்க்

UCOC-50A TAM

குட்மார்னிங் டாக்டர்!

ஓடி விளையாடாத பாப்பா!

குழந்தையைத் தோளில் சாத்தியவாறு என் அறைக்குள் நுழைந்த அந்த நடுத்தர வயதுப் பெண்மணி கவலை தோய்ந்த முகத்துடன் விளங்கினார். "குழந்தையைப் பாருங்க, டாக்டர் அம்மா! இரண்டு நாளா ஜல தோஷமும் ஜுரமும் இருந்தது. இன்னைக்குக் காலையிலே இடது காலைச் சரியா ஊன்றவே முடியாமல் தள்ளாடுகிறான். காலே தொய்ஞ்சு போயிருக்கு. நாலு நாளைக்கு முன்பு வரைக்கும் வீடு முழுவதும் ஓடி ஓடி விளையாடிண்டு தான் இருந்தான். இன்று..." நெஞ்சைக் கவ்விய சோகமும் வேதனையும் அந்தத் தாயைப் பேசவொட்டாமல் தடுத்தன.



குழந்தையின் இடது காலைப் பார்த்துத் தசைகளைச் சோதித்தவாறு, "குழந்தைக்கு என்னம்மா வயசு? போலியோ ட்ராப்ஸ் மூன்றுவது மாதத்துக்குப் பிறகு கொடுத்ததுண்டா?" என்றேன்.

"சரியா பதினெட்டு மாசம் ஆகிறது, டாக்டரம்மா. இவ்வளவு நாளும் குழந்தையோடு நான் கிராமத்திலேயே இருந்துட்டேன். அங்கே அந்த மருந்து கொடுக்க வசதி இல்லை. என் குழந்தைக்கு இளம் பிள்ளை வாதமா, டாக்டரம்மா?" தாயின் கண்கள் குளமாகி விட்டன. "காலை வலிக்கிறதாகக்கூட அவன் காட்டிக் கொள்ளவில்லையே?"



"இதற்கு அநேகமாக வலி இராது. வைரஸ் கிருமியால் வரும் நோய் இது. நான் மருந்து எழுதிக் கொடுக்கிறேன். மருந்தை விட அவனுக்கு ஓய்வு மிகவும் அவசியம். பி-காம்ப்ளெக்ஸ் மாத்திரை எழுதியிருக்கிறேன். இன்னொரு மாத்திரை தூக்கத்துக்கு. எந்தக் காரணத்தைக் கொண்டும் குழந்தைக்கு ஊசி போடக் கூடாது. காலை நீவி விடுவது (*Massage*) கண்டிப்பாகக் கூடாது. ஒரு மாதத்துக்குப் பிறகு அவனுக்குத் தேவையான சில பயிற்சிகளை எலும்பு முறிவுச் சிகிச்சையாளரின் யோசனைப்படி நீங்கள் அளிக்க வேண்டும். இந்தச் சிகிச்சை அளிக்கத் தனிப் பயிற்சி பெற்றவர்கள் (*Physio - therapist*) இருக்கிறார்கள். அவர்களுடைய உதவியையும் நீங்கள் நாடலாம்."

"இவன் மீண்டும் சரியாக நடக்க எத்தனை காலம் பிடிக்கும் டாக்டர்?"

"ஆறு மாதம் ஆகலாம்; ஒரு வருடமும் ஆகலாம். நீங்கள்தாம் தகுந்த பயிற்சி கொடுத்து அவன் நடக்க உதவ வேண்டும். நீங்கள் மனம் தளர்ந்துவிடக்கூடாது. இவனை முன்போல நடமாடச் செய்வதில் உங்களுடைய பொறுமை மிகவும் இன்றியமையாதது." அன்னைக்கு யோசனையும் ஆறுதலும் கூறி அனுப்பினேன்.

"வைரஸ் கிருமி எப்படிக் குழந்தையைத்தாக்குகிறது?"

"உணவு மூலமாக உடலுக்குள் செல்லலாம். அல்லது இந்நோய் உள்ள ஒரு குழந்தையின் மூக்கில் உள்ள வைரஸ் கிருமிகள் தும்மல், இருமல் மூலம் வெளிப்பட்டு அருகில் உள்ள குழந்தைக்குக் காற்றின் மூலம் பரவும். உணவுக் குழாயின் மூலம் குழந்தையின் குடலுக்குள் சென்று சில தசைப் பகுதிகளைத் தாக்கி வலுவிழக்கச் செய்யும்."

"இளம் பிள்ளை வாதம் வந்த குழந்தைக்கு உணவுக் கட்டுப்பாடு ஏதாகிலும் உண்டா?"

"அப்படி ஒன்றுமில்லை. நல்ல சத்துள்ள உணவுகளைத் தாராளமாகக் கொடுக்கலாம்."

"போலியோ வராமல் தடுக்க என்ன வழி?"

"வருமுன் காத்தல் இந்நோய்க்கு மிக்க இன்றியமையாதது. குழந்தை பிறந்து மூன்று மாதங்களுக்குப் பிறகு வாய் மூலம் சில சொட்டுக்கள் போலியோ தடுப்பு மருந்து கொடுக்க வேண்டும். நான்கு முறைகள் இம்மாதிரி கொடுத்து விட்டு ஓராண்டுக்குப் பிறகு இன்னொரு முறையும், ஐந்து வயதில் ஒரு தடவையும் கொடுத்தால் குழந்தைகளை இக்கொடிய நோய் பிடிக்காமல் காப்பாற்றலாம். குழந்தைக்கு ஜலதோஷம், வயிற்றுப் போக்கு இருக்கும்போது இந்த மருந்தைக் கொடுக்கக் கூடாது. தடுப்பு மருந்து பெறாத குழந்தைகள் நீச்சல் குளங்களுக்குப் போகக் கூடாது. கூட்டம் மிகுந்துள்ள திருவிழா போன்ற இடங்களுக்குப் போவதைத் தவிர்க்க வேண்டும்."

டாக்டர் ஸ்ரீமதி ஆர். சாக்கோ கூறக் கேட்டு எழுதியவர்: ஆர்.பி.





ஹெலிகாப்டர் சண்டை!

"'**து**ணிவே துணை'யில் ஹெலிகாப்டர் சண்டைக் காட்சியை ரசித்து எழுதியிருக்கும் கல்கி வாசகர்கள் உண்மையிலேயே மிகவும் பாராட்டுக்குரியவர்கள். ரொம்ப சிரமப்பட்டுத்தான் இக்காட்சியைப் படமாக்கினோம். அதைப் புரிந்து கொண்டிருக்கிறார்களே" என்று முத்துராமன் நன்றி பரவசத்துடன் சொன்னார்.

"ஹெலிகாப்டர் ஐடியா யார் கொடுத்தது?" என்று கேட்டேன்.

"இப்படத்தில் புது மாதிரியாக எதையாவது செய்ய வேண்டும் என்னும் ஆர்வத்தின் அடிப்படையில் கதாசிரியர் பஞ்சு அருணாசலமும் நானும் யோசித்து இக்காட்சியைத் தீர்மானித்தோம். மறு கணமே அதற்கு ஆகக்கூடிய செலவைப் பற்றிய நினைவு எங்களைத் தயங்க வைத்து விட்டது. ஆனால் இது பற்றிப் படத் தயாரிப்பாளர் இரு துளசிராம் அவர்களிடம் சொன்னதும் அவர் மிகவும் உற்சாகத்துடன் 'செலவைப் பற்றி யோசிக்காதீர்கள். உடனே படப் பிடிப்புக்கு ஏற்பாடு செய்யுங்கள்!' என்று சொல்லி விட்டார்."

"ஹெலிகாப்டரை எங்கிருந்து தருவித்தீர்கள்?"

"ஸதர்ன் ஏவியேஷன் கம்பெனிக்காரர்கள் பூச்சி மருந்து தெளிக்க ஹெலிகாப்டரைப் பயன்படுத்துகிறார்கள். அதை வாடகைக்குப் பேசிக் கொண்டோம். மணிக்கு இவ்வளவு என்று வாடகை."

"இந்தக் காட்சியை எத்தனை நாட்களில் படமாக்கினீர்கள்?"

"இரண்டு நாட்கள் தேவைப்பட்டன. மிஸ்டர் கோஸ்வா என்ற ஹெலிகாப்டர் பைலட் மிகவும் உதவியாயிருந்தார்."

"இந்தக் காட்சி சம்பந்தமாக ஏதாவது திடுக்கிடும் தகவல் உண்டா?" என்று நான் கேட்டதற்கு, டைரக்டர் முத்துராமன் "ஹெலிகாப்டர் காட்சியே திடுக்கிட வைப்பதுதானே ? இருந்தாலும் நீங்கள் விரும்புவதால் ஒரு திடுக்கிடும் தகவலைச் சொல்கிறேன். இந்த இறுதி 'க்ளைமாக்ஸ்' காட்சியில் ஐந்து லாரிகள் ஹெலிகாப்டரில் மோதிச் சேதம் அடைந்தன. தயாரிப்பாளர் இரு துளசிராமின் புத்தம் புதிய கார் உடைத்து நொறுக்கப்பட்டது..." என்று கூறினார்.

"...இதில் மேலும் ஏதாவது சுவையாகச் சொல்லும்படி ...தகவல்..." என்று நான் கேட்டதும் டைரக்டர் முத்துராமன் வாய் விட்டுச் சிரித்து விட்டார். ஆனாலும் சளைக்காமல், "ஒரு தகவலைக் கூறுகிறேன். சுவைத்துப் பாருங்கள்" என்றார். "ஹெலிகாப்டரில் மோதுண்ட லாரிகளையும், காரையும் அவ்வப்போது பழுது பார்த்துச் சரி செய்து மீண்டும் மீண்டும் மோதலுக்குத் தயாராக்கினோம். இதற்காகக் கார் ரிப்பேர் தொழிற்சாலை ஒன்றை நிறுவிக் கொண்டோம்..."

"இந்த 'க்ளைமாக்ஸ்' காட்சி எங்கே படமாக்கப்பட்டது?"

"கோவளம் கடற்கரைப் பகுதியிலும், மாமல்லபுரத்துக்கு அருகிலும் படமாக்கினோம்."

"இன்னும் ஏதாவது ருசிகரமான தகவல்....?" என்று கேட்டேன்.

"என்ன ஸார், நான் இதுவரை சொன்னதெல்லாம் ருசிகரமில்லையா?" என்றார் டைரக்டர் முத்துராமன்.

"அது இல்லை ஸார்! வாசகர்களுக்கு சினிமா சம்பந்தமான சுவையான, ருசிகரமான, விநோதமான, சுவாரசியமான விஷயங்களைத் தொகுத்துத் தர வேண்டுமல்லவா நான்?" என்றேன்.

"இந்தக் காட்சியில் ஏராளமான மக்கள் தோன்றுகிறார்கள். பக்கத்துக் கிராமங்களிலிருந்தெல்லாம் லாரியில் மக்களைக் கொண்டு வந்தோம். அவர்களுக்கெல்லாம் விருந்துச் சாப்பாடு தயார் செய்து போட்டோம்.. பெரிய கல்யாண விருந்து மாதிரி இருந்தது.."

"அதில் பிரச்னை இருந்திருக்குமே?"

"அப்போது விருந்தினர் கட்டுப்பாடு சட்டமும் இல்லை. இவர்கள் விருந்தினரும் இல்லை. ஊழியர்களாகவே கருதப்பட்டனர். ஆனால் வேறு பிரச்னை இருந்தது. விருந்து சாப்பிட்டவர்களுக்குக் குடிக்கத் தண்ணீர் வேண்டுமே. வெகு தூரத்திலிருந்து லாரி லாரியாகக் கொண்டு வந்து சமாளித்தோம்" என்றார் முத்துராமன்.

கிரிக்கெட்டைப் போல் சினிமாவிலும் ரிகார்ட் விவரங்களைச் சேகரிப்போருக்கு ஒரு தகவல்: டைரக்டர் எஸ். பி. முத்துராமனின் முதல் வண்ணப் படம் இது. —காந்தன்

பண்டிட் P.S. ராமசர்மாவின்

சக்தி சஞ்சீவி

குழந்தைகளின்

ஈரல், குலைக்கட்டிகளுக்கு.

எமது வைத்தியரின் மாதாந்திர சுற்றுப் பிரயாண விபரம் I

ஊர்	தேதி	நேரம்	தங்கும் இடம்
தாராபுரம்	2	காலை 9-00 -- 10-00	Dr. K. R கோபாலன், முருகன் ஸ்டோர்ஸ், சர்ச் ரோடு.
பழனி	2	காலை 11-00 -- 12-00	ஜெனா மெடிகல் மார்ட்
உடுமலைப்பேட்டை	2	மாலை 3-00 -- 4-00	ராஜேந்திரா அண்டு கோ., கடை வீதி
பொள்ளாச்சி	2	மாலை 5-00 -- 6-00	தி [illegible] பார்மஸி.
கோயமுத்தூர்	3	காலை 9-11	சிதம்பரம் லாட்ஜ், ஸ்டேட் பாங்க் ரோடு,
,,	3	மாலை 2-4	ரெயில்வே ஸ்டேஷன் எதிர்புறம்
மேட்டுப்பாளையம்	3	மாலை 5-00 -- 6-00	தி மேட்டுப் பாளையம் மெடிகல் ஸ்டோர்ஸ்.
சத்தியமங்கலம்	4	காலை 8-00 -- 9-00	C. R. K. மெடிகல்ஸ், கடை வீதி. [மெயின் ரோடு
கோபி	4	காலை 10-00 -- 11-00	ஸ்ரீனிவாஸா டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட், 56,
பவானி	4	மாலை 2-00 -- 3-00	M. L. செட்டியார் அண்டு சன்ஸ், கடை வீதி.
மேட்டூர் அணை	4	மாலை 4-30 -- 5-30	ஸ்ரீ ராமன் லாட்ஜ்.
ஈரோடு	5	காலை 9-00 -- 11-00	ஸ்ரீ கிருஷ்ணா டாக்கீஸ்.
திருப்பூர்	5	மாலை 4-00 -- 5-30	P. R. மணியம் ஸ்டோர்ஸ், பல்லடம் ரோடு.
திருச்சி	6	காலை 11-00 to மாலை 6-00	திருச்சி ஆயுர்வேதிக் யூனியன், சின்னக் கடைத் தெரு.
தஞ்சாவூர்	7	காலை 7-00 -- 9-00	Dr. S. வெங்கடராஜன் வைத்தியசாலை, சகாநாயக்கன் தெரு.
கும்பகோணம்	7, 17,27	காலை 10-00 to மாலை 5-00	ஸ்ரீ சக்தி விலாஸ வைத்தியசாலை பிராஞ்சு, [illegible] ஹைஸ்கூல் ரோடு.
சீர்காழி	8	காலை 7-00 -- 8-00	பிரம்ம வித்யா [illegible] வைத்தியசாலை, [illegible] சன்னதி
மாயூரம்	8	காலை 9-30 -- 12-00	ஸ்ரீ வெங்கடேசா மெடிகல் ஹால், பட்டமங்கலம் தெரு.
நாகப்பட்டிணம்	8	மாலை 5-00 -- 6-00	நாகை மெடிகல் ஸ்டோர்ஸ், கடை வீதி.
திருவாரூர்	9	காலை 7-30 -- 9-00	தன்வந்தரி மெடிகல் ஹால், 21, மடப்புரம் பாட்டை.
விஜயபுரம்	9	காலை 10-00 -- 11-00	சகுந்தலா பார்மஸி, நாகை ரோடு.
திருத்துறைப்பூண்டி	9	மாலை 2-00 -- 3-30	ஸ்ரீ T. V. சந்திரசேகரம் பிள்ளை, கடை வீதி.
பட்டுக்கோட்டை	9	மாலை 4-30 -- 6-30	கோபால் விலாஸ், பெரிய தெரு.
புதுக்கோட்டை	10	காலை 8-00 -- 10-00	நியூ லக்ஷ்மி டிஸ்பென்சரி, கீழ ராஜவீதி.
தேவகோட்டை	10	மாலை 2-30 -- 3-30	ஸ்ரீ சோமசுந்தரம் மெடிகல் ஸ்டோர்ஸ், ஆர்ச் ரோடு.
காரைக்குடி	10	மாலை 4-30 -- 6-00	நியூ கௌரி லாட்ஜ், மகர் நோன்பு அக்ரஹாரம்.
சிவகெங்கை	11	காலை 8-30 -- 10-00	கௌரி அண்டு கோ., கடை வீதி.
மதுரை	11	காலை 11-00-12-30	T. N. சொக்கலிங்கம் பிள்ளை சன்ஸ்,
,,	11	மாலை 3-00- 6-00	வடக்கு சித்திரை வீதி.

குறிப்பு: பிரதி இங்கிலீஷ் மாதம் 10, 25 தேதிகளில் மாலை 4 முதல் 6 மணி வரை எமது வைத்தியர் மயூர வைத்தியசாலை B-11, 1வது கிராஸ், தில்லை நகர், திருச்சி என்ற விலாசத்தில் முகாம் செய்கிறார்.

ஸ்ரீ சக்தி விலாஸ வைத்தியசாலை, கரூர் (போன்: 87)
திருச்சி ஜில்லா

சவாலைச் சந்தித்தேன்:



ஒரே மாதத்தில் ஒரு கல்யாணம்...

1962-ம் ஆண்டில் ஜூலை மாதத்தில் ஒரு நாள். நான்கைந்து நண்பர்களுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தேன். ஒரு நண்பர் தம்முடைய திருமண அழைப்பிதழ்களை அங்கிருந்தவர்களுக்கு வழங்கி, எல்லோரையும் அழைத்தார்.

பேச்சு பொதுவாகத் திருமணம் சம்பந்தமாகத் திசை மாறியபோது அங்கிருந்தவர்களில் ஒருவர், ''எல்லோருக்கும்தான் கல்யாணம் நடக்கிறது. ஆனால் முப்பது வயசாகியும் நம்ப குப்புசாமிக்கு ஒரு கல்யாணம் நடக்கும் அறிகுறியைக் காணோமே!'' என்று சொல்லி வைத்தார்.

எனக்குச் சுருக்கென்றிருந்தது. எங்கள் வீட்டுக் குடும்பப் பிரச்னைகள், நிலவரங்கள் அவருக்குத் தெரிய நியாயமில்லை. ஏதோ விளையாட்டாகச் சொன்னார் என்று நான் கருதியிருக்கலாம்! ஆனால் அவருடைய விமரிசனத்தை நான் ஏனோ படபடப்புடன் ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு விட்டேன்.

''நண்பர்களே! இதோ பாருங்க! எனக்கு அடுத்த மாசம் முப்பத்தோராம் தேதிதான் முப்பது வயது நிரம்புகிறது. அந்தத் தேதிக்குள் எனக்குத் திருமணம் நடக்கும். உங்களுக்கும் அழைப்பு வரும்'' என்று சூடாகக் கூறிவிட்டுக் கிளம்பினேன்.

அந்த நேரத்தில் எனக்குத் திருமணமாகாத ஒரு சகோதரி இருந்தாள். அவள் திருமணத்தை முடித்துவிட்டுத்தான் என் திருமணப் பேச்சை எடுக்க வேண்டும் என்பது என் பெற்றோர்களின் தீர்மானம். என் பெற்றோர் எண்ணத்தை அப்படியே முழுக்க ஏற்றுக்கொள்ளவில்லை என் சகோதரி என்றும் எனக்குத் தெரியும். ஆகவே, அவள் மனம் நோகாது என்ற தைரியத்தில் என் பெற்றோர்களுக்குத் தெரியாமல், பத்திரிகையில் 'ஒரு மணமகள் தேவை' விளம்பரத்தைக் கொடுத்தேன். பதில்கள் வர, என் மாமா திரு 'குகன்' விலாசத்தைப் பத்திரிகைக் காரியாலயத்தில் கொடுத்திருந்தேன்.

அந்த விளம்பரத்துக்கு ஏறத்தாழத் தொண்ணூறு பதில்கள் வந்தன. நானும் என் மாமாவும் வந்த பதில்களையெல்லாம் ரகசியமாக ஆராய்ந்து மூன்று இடங்களைத் தேர்ந்தெடுத்தோம். முதல் இடம் புரசவாக்கம். இரண்டாம் இடம் சிந்தாதிரிப்பேட்டை. மூன்றாம் இடம் அடையாறு. இதற்கு மேல்தான் விஷயத்தையே என் பெற்றோர்களிடம் சொன்னேன்.

என் தாயாருக்கு ஒரே கோபம்! பெண் பார்க்க என்கூட வர மறுத்து விட்டாள். என் தந்தையும் மற்ற உறவினர்களும் வந்தார்கள். முதலில் புரசைவாக்கம் பெண்ணைப் பார்த்தோம். அப்புறம் சிந்தாதிரிப்பேட்டைக்குப் போனோம். அடையாறு போகும்எண்ணத்தைக் கைவிட்டு விட்டோம். ஏனென்றால் புரசைவாக்கம் சம்பந்தம் எனக்குப் பிடித்து விட்டது. அப்புறம் என் தாயாரும் சம்மதித்து விட்டார்.

இது நடந்தது ஆகஸ்ட் முதல் வாரம். 'எப்போது முகூர்த்தத்தை வைத்துக்கொள்ளலாம்?' என்று புரசைவாக்கத்துக்காரர்களிடம் கேட்டபோது அவர்கள் ''குறைந்தபட்சம் இரண்டு மாத அவகாசம் வேண்டும்! சத்திரம் பார்த்து ஏற்பாடு செய்ய வேண்டும், அது பெரிய பிரச்னை'' என்று நிதானமாகச் சொல்லி விட்டார்கள்! அவர்களுக்குத் தெரியுமா என் சவால்?

ஆகஸ்ட் மாதம் 19ந் தேதியை விட்டால் அப்புறம் அந்த மாதத்தில் வேறு வாய்ப்பான முகூர்த்த நாள் இல்லை என்று நான் ஏற்கனவே விசாரித்து வைத்திருந்தேன். ஒரு யோசனை தோன்றியது.

காலம்சென்ற செம்பை வைத்தியநாத பாகவதரை எனக்கு நன்றாகத் தெரியும். அவருடைய சாந்தோம் ஜாகையில் மைதானம் போன்ற காலி இடம் உண்டு. அவரை அணுகி, விவரத்தைச் சொல்லி அங்கேயே பெரிய பந்தல் போட்டுத் திருமணம் நடத்த அனுமதி கேட்டேன்.

மனிதர் ஆனந்தமாகச் சிரித்துக்கொண்டே, ''உனக்கில்லாத இடமா? ஜமாய்!'' என்று சொல்லி விட்டார். பெண் வீட்டாரிடம் வந்தேன். ''ஆகஸ்ட் பத்தொன்பதாம் தேதி முகூர்த்தம் நடந்தாக வேண்டும்! இடம் ரெடி. பந்தல், நாதஸ்வர ஏற்பாடுகளைக் கவனியுங்கள்'' என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டேன். அவர்களுக்கும் திருப்தி.

என் திருமணம் செம்பை அவர்கள் இல்லத்தில் ஜாம் ஜாம் என்று நடந்தது. அவர் கூடவே இருந்து நடத்தி வைத்தார்.

திரு சி. குப்புசாமி கூறக் கேட்டு
எழுதியவர்: பட்டினத்தார்

பிறர் பார்வை

ஆல்பிரட் ஹிட்ச்காக்கின் புதுப்படம் 'ஃபிரென்ஸி'. இதில் கொலைகள் செய்பவன் யார் என்பதை முதலிலேயே காட்டி விடுகிறார். ஆனால் அவன் எப்படிக் கொலை செய்கிறான் என்பதில்தான் சஸ்பென்ஸ்.

— ஹிந்துஸ்தான் டைம்ஸ் - பாலி

சில ஏமாற்றங்களும் சில அனுபவங்களும்

அவன் அழுதழுது துடித்துத் துவண்டு கொண்டிருந்தான்.

நான் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தேன்... வேறுவழி? அவனுடைய வேதனையை, குமுறலை, துக்கத்தை என்னால் உணர முடிகிறது! ஆனால் நான் என்ன ஆறுதல் தர முடியும்?

இழப்பின் சோகத்தை அனுபவித்து அவன் அணு அணுவாக என் எதிரில் சித்திரவதைப் பட்டுக் கொண்டிருப்பதை என்னால் நேருக்கு நேர் கண் கூடாகக் காண முடிகிறது.

அவனுக்குள் நிகழக்கூடிய போராட்டங்களை, 'ஒரே துணை' என்று நம்பிய ஒன்று அவனைக் கைவிட்டுவிட்ட துன்பத்தை, ஏமாற்றத்தைத் தாங்கிக் கொள்ள முடியாத அவன் பெண்மை சீறுவதும், தவிப்பதும், அழுவதும், அரற்றுவதுமாக இருந்ததைக் காண நேர்ந்த போது என் இதயத்தின் மிக ஆழமான பகுதியில் பதிந்துள்ள, மண் மேடிட்டுப் போன சில பழைய நினைவுகள் மணல் சரிந்தபின் தோன்றும் மெல்லிய பனிப் பாறையாகத் தோன்றியது. ஏமாற்றங்கள் எனக்குப் புதியவை அல்ல!

நானும் பல முறை ஏமாற்றங்களைக் கண்டிருக்கிறேன். அந்த முறையில் வரிசை வரிசையாக வந்த ஏமாற்றங்கள் பலவற்றை அனுபவித்தவன் நான். பெண்மையால் வீழ்த்தப்பட்ட நான் நொறுங்கித் தவித்து, இக்கி, இணைறி இப்போதுதான் கொஞ்சம் கொஞ்சமாக மீண்டு வருகிறேன். இந்த நேரத்தில்தான் என் நண்பன் மாதுவைப் பல நாட்களுக்குப்பின் நான் சந்தித்தேன்.

''நல்ல வேளை...நீ வந்தாய்.... இன்று பீச்சுக்குப் போக வேண்டும். ரொம்ப முக்கியமான சமாசாரம்.... நீதான் சரியான ஆள்...''

''ஏண்டா, யாரையாவது காதலிக்க வேண்டுமா? அதற்கு ஏதாவது ஒரு வகையில் நான் உதவ வேண்டுமா?''

அவன் ஒரு நிமிடம் மௌனம் சாதித்தான்.

''இல்லை...குமார்...நான்...நான்... ஒரு பெண்ணைக் காதலிச்சேன்.''

நான் சிரித்தேன்.

மாதுவை எனக்கு நன்றாகத் தெரியும். அவன் பல பெண்களைக் காதலித்திருக்கிறான். பல கதைகளை எனக்குச் சொல்லியிருக்கிறான். ஒவ்வொரு பெண்ணையும் காதலித்துக் கைவிட்ட கதை. அது அவனுக்கு ஒரு சுகமான அனுபவம். ஆரம்பத்தில்



அவன் செயல்களை நான் கண்டித்தேன்..... ஆனால் வரிசையாகப் பெண்மையிடத்து நான் தோற்றுப்போன கதை என் மனத்துள் ஒரு வன்மையைத் தோற்றுவித்திருந்தது. அவன் பெண்களை ஏமாற்றிய கதையை என்னிடம் சொல்லச் சொல்ல என் உள்ளத்துக்கு அந்தக் கதைகள் சற்றுத் தெம்பூட்டின.

'அவர்கள் இப்படித்தான் ஏமாற்றப்பட வேண்டும்!' என்கிற ஆத்திரம் என்னுள் மூண்டது.

யாரோ யாருக்கோ செய்த கொடுமைக்காக நான் யாருக்கோ மானசீகமாகத் தீர்ப்பும், தண்டனையும் வழங்கிக் கொண்டிருந்தேன். போகட்டும், இது பழங் கதை. ஆனால் இப்போது நடப்பது புதிது!

''சிரிக்காதே குமார்...! நான் காதலிச்ச மற்றப் பெண்கள் மாதிரி அல்ல இவள். இவள் என்னை மனப்பூர்வமாக நேசித்தாள். நான் இவளை, இவள் அன்பை, இவள் பெண்மையை மற்றவர்களைவிடச் சற்று அதிகமாகவே நேசித்தேன். சரியாய்ச் சொல்லப் போனால் இவளைக் கல்யாணம்கூடப் பண்ணிக்கலாமா என்கிற அளவுக்கு யோசிச்சேன்....''

பேஷ்.... காதலித்து, தன் தேவைகள் எல்லாவற்றையும் தீர்த்துக் கொண்ட பிறகு கல்யாணம்கூடப் பண்ணிக் கொள்ளலாமா என்று யோசித்தானாம் பையன்!

மாது தொடர்ந்தான்.

''ஆனா... இப்போ என்னாலே முடியாது..''

''ஏன்?''

''அதுக்கு எத்தனையோ காரணம்...... மத்தவாகிட்டே நான் 'ஐ ஆம் ஸாரி'ன்னு சொல்லிட்டு வந்துட்டேன். அது எனக்குச் சிரமப்படலே. ஆனால் இவகிட்டே சொல்ல முடியாது... நேரிலே இவளைப் பார்க்க நான்... நான் வெட்கப்படறேன்... இந்த லெட்டரிலே விவரமா எழுதி இருக்கேன்... இதை 'போஸ்ட்' பண்ணினா அவங்க வீட்டிலே வேறு யார் கையிலேயாவது இது கிடைச்சா ரொம்ப ஆபத்து. என்னாலே அவளோட வாழ்வைத் தான் அமைக்க முடியல்லே. அழிவைத் தேடித் தரக் கூடாது. இன்னிக்கு என்னைச் சந்திக்க பீச்சுக்கு வர்றதா சொல்லியிருக்கா.. கண்ணகி சிலை முன்னாலே காத்துக்கிட்டு இருப்பா... இந்த லெட்டரை அவகிட்டே 'ஹேண்ட்ஓவர்'— பண்ணிடு.... ஏற்கனவே அவளை என்னோட ரெண்டு மூணு தடவை நீ பார்த்திருக்கே! அவதான் நளினி....''

விமலா ரமணி



நளினியா? எனக்குப் பகீரென்றது. அழகான நல்ல பெண்! குனிந்த தலை நிமிராமல் தானுண்டு, தன் கல்லூரி உண்டு என்று இருந்தவளை இவன் வலை போட்டுக் காரில் தூக்கிச் சென்று அடித்து வீழ்த்திய கதை எனக்குத் தெரியும். எனக்குத் தெரிந்த எத்தனையோ அக்கினிப் பிரவேசங்களில் இதுவும் ஒன்று. அடப் பாவி! அவளுக்கா? அவளுக்கா? அடுத்த கணமே என்னுள் ஒரு வக்கிரமான எண்ணம். 'நன்றாக வேண்டும்... கல்லூரிக்குப் போகிற பெண்ணுக்குக் 'கார்' 'லிப்ட்' எதற்கு? அந்தக் கார் பாதை மாறாது என்பது என்ன நிச்சயம்? பாதை மாறும்.... அல்லது பள்ளத்திலும் விழும்...'

''உங்க நண்பராலே இவ்வளவு சுலபமா என்னை மறந்துடுன்னு எப்படி ஸார் கடிதாக எழுத முடிஞ்சது? 'ஏழேழு ஜென்மத்துக்கும் நம்ம அன்பு தொடரும். இந்த ஒரு பிறவியிலே மட்டும் இல்லே... அடுத்த அடுத்த பிறவியிலேயும் நாம்தான் கணவன் மனைவி' என்று கதை கதையாகச் சொன்னாரே! இந்த ஒரு ஜென்மத்திலேயே அவரால் உறவை நிலை நிறுத்த முடியல்லே! அடுத்த ஜென்மம் என்ன ஸார், அடுத்த ஜென்மம்?''

விம்மியபடி, இரைந்தபடி, வார்த்தைகளின் கோவைகள் அவள் கண்ணீரைத் தடைப்படுத்த, இதயத்தின் அடித்தளத்திலிருந்து வார்த்தைகளை அவள் கஷ்டப்பட்டுத் தோண்டி எடுத்துக் கொண்டிருந்தாள். கோபமும், விரக்தியும், வேதனையுமாக அவள் பொங்கியது என் மனத்தை என்னவோ செய்தது. அவள் அழுது தீர்க்கும் வரை நான் கிளம்ப முடியாது! அது மனிதத் தன்மையும் அல்ல! என் முதல் காதலி புவனாவின் நினைவு வந்தது.

அவளும் நானும் எங்கோ சந்தித்தோம், எப்படியோ எங்கள் அன்பை வளர்த்தோம். அவள் ஏழைக் குடும்பம் என்பது தெரிந்தே அவளை நான் காதலித்தேன். அவள் அன்பு ஒன்றே போதும் என்று பைத்தியக்காரத்தனமாக நினைத்தேன். அவளுக்காகப் புடவைகள், அவள் அற்ப ஆசைகளைத் திருப்திப்படுத்த என்ன என்னமோ நகைகள் வாங்கித் தந்தேன். என்னைவிடப் பணக்காரன் ஒருவன் அவள் அப்பாவிடம் பேரம் பேசினான். ஐம்பது பவுன் நகையும், ஐந்தாறு பட்டுப் புடவைகளும் அவள் மதிப்பில் உயர்ந்து நின்றன. புவனா புது மணப் பெண்ணானாள்!

இதோ இவள் குமுறுவது போல்தான் அன்றும் நான் குமுறினேன்! நான் ஆண் பிள்ளை. வாய்விட்டு அழ முடியவில்லை. எனக்குள் நொறுங்கிப் போனேன்.

நளினி குமுறுவது கேட்கிறது.


நான்கூட இப்படித்தான் ஒரு சமயம் பைத்தியம் பிடித்தவன் போலிருந்தேன்.

புவனாவுக்குப்பின் சோர்ந்து கிடந்த என் வாழ்வில் வசந்தமாக வந்தவள் ஜெயந்தி.

ரஷ்யாவில் எல்லோருக்கும் மூன்று பெயர்கள் உண்டு. உதாரணமாக, நிக்கோலஸ் அலக்ஸாண்ட்ரோவிச் ரோமனுவ் என்று ஒரு பெயர். இதில் முதல் பெயர்தான் அந்த நபருக்கு இடப்பட்ட பெயர். கடைசி பெயர் குடும்பத்தைக் குறிக்கும் பெயர். நடுப் பெயரில்தான் ஒரு வேடிக்கை உள்ளது.



ரஷ்யாவில் எந்த ஆணின் நடுப் பெயரைப் பார்த்தாலும், அது 'விச்' என்கிற விகுதியுடன் முடிவதைப் பார்க்கலாம். உதாரணமாக, நிக்கோலோவிச், அனடோலிவிச், ஸ்டெபனோவிச் என்று இப்படி இருக்கும். இதற்குக் காரணம், 'விச்' என்றால் இன்னாரின் மகன் என்று அர்த்தம். அனடோலிவிச் என்றால் அனடோலியின் மகன், நிக்கோலோவிச் என்றால் நிக்கோலோவின் மகன் என்று அர்த்தம்.



அதே மாதிரி, பெண்களின் நடுப் பெயர்கள், 'ஓவ்னா' அல்லது 'ஏவ்னா' என்ற விகுதியுடன் முடியும். நிக்கோலேவ்னா என்றால் நிக்கோலஸின் மகள் என்று அர்த்தம்.

உதவி: நாடோடி

நாங்கள் இருவரும் ஒரே ஆபீஸில் பணி புரிந்தோம். என் வேதனை, தாடி வளர்த்த என் முகம் அவளுள் இரக்கத்தை உண்டு பண்ணி இருக்க வேண்டும். பேசினாள். பேசினேன். சிரித்தாள். மெல்லச் சிரிக்க ஆரம்பித்தேன். ஸ்பரிசித்தாள். அந்த மென்மைக்கு நானும் என்னை மென்மைப்படுத்திக் கொண்டேன்! முரட்டுத் தாடியும், மீசையும் மறைந்தன.

மகாபலிபுரம் போனோம். மாலை நேர மயக்கங்கள், கடற்கரையில் இனிய தென்றலின் தாலாட்டில் எதிர்காலக் கற்பனை நயங்கள், எங்கோ ஒரு சிறு கலக்கம் அவ்வப்போது தோன்றாமல் இல்லை.... ஆனால் அதையெல்லாம் ஜெயந்தியின் மடியில் தலை வைத்துப் புரண்டபோது துடைத்தெறிந்து விட்டேன்.

வாரக் கடைசி, பிக்னிக், மகாபலிபுரம், ஹோட்டல் அறை. சொர்க்கத்தின் புதிய பாடம், பிறகு அதை அடிக்கடி படித்துப் பார்க்கும் ஆசை வெறி!

மகாபலிபுரம் பழகிப் போய்விட்டது!

எனக்கல்ல! ஜெயந்திக்கு!

அது ஒரு நாள் எங்களைப் 'பலி' வாங்கி விட்டது!

வழக்கமான மயக்கம்!

காதல் போதை! ஜெயந்தியின் மடியில் குழந்தையாய் நான் தவழ்ந்த நேரம்.....

'' அயோக்கிய ராஸ்கல்!'' — என்கிற கர்ஜனை. அவள் அண்ணன்!

அவன் பேசாத வார்த்தைகள் இல்லை. நான் குற்றவாளி... பேசவில்லை....

ஆனால் ஜெயந்தி...... அவளுக்கும் பங்கு உண்டல்லவா? தான் இதிலே சம்பந்தப் படாத மாதிரி அவள் ஒதுங்கி நின்றது எனக்கு வியப்பாக மட்டும் அல்ல; வேதனையாகவும் இருந்தது!

''அண்ணா...! அவரைத்தான் நான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன்'' என்று ஒரு வார்த்தை என் காது குளிரச் சொல்லி இருந்தால்கூட நான் மகிழ்ந்திருப்பேன். அது... அது பொய்யாக இருந்தாலும் சரி..... அதை நான் அந்த நேரத்தில் நம்பத் தயாராக இருந்தேன்..... ஆனால்... ஆனால் ஜெயந்தி எல்லாவற்றையும் பொய் பண்ணி விட்டாள்! அது மட்டும் அல்ல... அண்ணனுடன் ஏதும் நடவாதது போல் பெட்டிப் பாம்பாய்க் கிளம்பிப் போய்விட்டாள்!

தபாலில் ஒரு நெடிய கடிதம்!

அவளுக்கு வேறு வழியில்லையாம்! அவள் அண்ணன் தயவில்தான் வாழ வேண்டுமாம். அவளுக்குக் கல்யாணம் நடக்கப் போகிறதாம்! அவள் கடந்த காலக் கதையை நான் யாரிடமும் சொல்லிவிடக் கூடாதாம்! நான் தெய்வமாம்! நான் விரக்திச் சிரிப்புச் சிரித்தேன். இவர்கள் சுலபமாகக் கோவில் கட்டி விடுகிறார்கள். மனிதனை ஒரு நொடிப் பொழுதில் தெய்வமாக்கிக் கொலு ஏற்றிவிடுகிறார்கள். தெய்வமாக்கிவிட்டால் இதயமும் கல்லாகிப் போய்விடும் என்கிற கணிப்போ? நான் தெய்வமாக வில்லை! கல்லாகிப் போனேன்....

இவள் — நளினி இன்னமும் அழுது கொண்டிருக்கிறாள்......

இவளை எப்படிச் சமாதானப்படுத்துவது?

எனக்கு இப்பொழுது மிருதுளாவின் நினைவு வருகிறது.

தோல்விகள் என்னைப் பந்தாடியபின் நான் தோற்றுப் போனேன்.... என்னிடம்! குடிக்க ஆரம்பித்தேன்.....

தேவதாஸ் சினிமாவைப் பார்த்துவிட்டு நான் அழுதேன்.... அப்புறம் குடித்தேன்.... அந்தக் குடி வெறியின் போதுதான் மிருதுளா எனக்கு அறிமுகமானாள். ஓர் அமெச்சூர் நாடக நடிகை.


ஆபீஸிலும் வேலை பார்த்துக் கொண்டு நாடகங்களிலும் 'கௌரவமாக' நடிப்பவள். எங்கள் ஆபீஸிலும் ஏதோ நாடகம் போடுகிறார்களாம். அதற்கு வந்திருக்கிறாள் போல் இருக்கிறது. என் அறையில் நுழைந்திருக்கிறாள். நான் அரை மயக்கத்தில்....

அவள் சுபாவமாக என் அருகே வந்தாள். ''நீங்கள் எழுதிய நாடகமாமே...? ரொம்ப நன்றாக இருக்கிறது.... வசனங்கள் அற்புதம்... நான் உணர்ந்து நடிக்க முயல்கிறேன்...'' ஓஹோ... இப்போதுதான் கதை புரிகிறது. என் தோல்விகளை வைத்து என்றோ, எப்போதோ நான் எழுதிய நாடகத்தை என் ஆபீஸ் நண்பர்கள் தேடிப் பிடித்து இப்போது அரங்கேற்றப் போகிறார்களா? அதில் நடிக்கத்தான் இவளா? எனக்கே தெரியாமல் என் தோல்வி அரங்கேறப் போகிறது!

இது எனக்கு அவமானமாக இருந்தது.

கூடாது... இதை நான் அனுமதிக்கமாட்டேன்.... அவள் என்னை அடக்கினாள்.

''எல்லாக் கலைஞர்களின் வாழ்விலும் ஏதோ ஒரு சோகம்தான் அவர்களை இலக்கியச் சிற்பிகளாக்கி யிருக்கிறது. இதை அவமானமாக



எல்லா விதத்திலும் சிறந்த பல்புகள்
பிலிப்ஸ் பல்புகள்
டி எல் லாம்புகள்
ஹேலோஜென் லாம்ப்
பிலிப்ஸ் இந்தியா 45 ஆண்டுகளுக்கும் மேலாக ஒளித்துறையில் புதுப்புது சாதனைகள் புரிந்து கொண்டிருக்கிறது. அதிகத் திறனும் சிக்கனமும் ஒளித்துறையில் எப்போது தேவைப்பட்டாலும் அவற்றுக்கேற்றவாறு புது சாதனைகளைப் புரிவதில் பிலிப்ஸ் முதலிடம் பெற்று வந்துள்ளது.
1938ல் தொடங்கிய இத்துறையில், பிலிப்ஸ், இல்லங்கள், வர்த்தகத்துறை, தொழில்துறை மற்றும் விசேட பணித்துறைகளுக்கேற்ற லாம்புகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தியாவில் பிலிப்ஸ் மட்டுமே இவ்வளவு நேர்த்தியான லாம்ப் அணிவகுப்புகளை அளிக்கவல்லதாகும். நாட்டின் முன்னேற்றத்துடன் இணைந்து இப்பணியும் தொடர்ந்து பெருகிக்கொண்டே வருகிறது.
இன்ஃப்ரா-ரெட் லாம்ப்
காம்ப்டாலக்ஸ் லாம்ப்
ஃபோட்டோக்ராஃபிக் லாம்ப்
எம் எல் எல் லாம்ப்
ஹெச்பிஎல் லாம்ப்
பிலிப்ஸ்—லாம்ப் மற்றும் ஒளித்துறையில் முன்னோடிகள்
PHILIPS
பிலிப்ஸ்
பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

PHL-9364

நினைக்காதீர்கள். அனுபவமாக ஏற்றுக் கொள்ளுங்கள்....''

அவள் பேசப் பேச அவளின் அறிவு நுட்பம் என்னைச் சிந்திக்க வைத்தது. அவளின் நடிப் பாற்றல் என்னை வியக்க வைத்தது.

நான் அவள் பக்தனானேன். எனக்குள் மெல்ல மெல்ல அவளை வணங்கி, அவள் அருகில் நெருங்கி... இணைந்து... என் மன மென்னும் அரங்கில் எத்தனை எத்தனையோ ஒத் திகைகள்....என் இதயத் திரையில் எத் தனையோ ஒளி வட்டங்கள். வசனங்கள், கவிதைகள், உவமைகள்.... உணர்ச்சிகள்.... நாடகம் மிக வெற்றிகரமாக அரங்கேறியது... பாராட்டு! பாராட்டு! கைகுலுக்கல்கள்! மாலைகள்! எனக்கும் ஒரு சிறிய வேடம்! அவ சரம் அவசரமாக 'மேக்அப்பை'க் கலைத்துக் கொண்டிருந்தேன். மிருதுளாவின் மென்மை யான காலடி ஓசை... அன்றலர்ந்த மலராக அவள் வந்தாள். அவள் பின்னே ஒருவன்.

''ஸார்...! இவர் ஒரு நாடக டைரக்டர்... எனக்கும் இவருக்கும் அடுத்த மாசம் கல் யாணம் நடக்கப் போகுது. இன்னிக்குத் தற்செயலா நாடகம் பார்க்க வந்திருக்கார். அப்படியே உங்களைப் பாராட்டிட்டுப் போக ணும்னு சொன்னார். இங்கே அழைச்சிட்டு வந்தேன்.....'' கண்ணாடியிலே என்னைப் பார்த்தேன்.

பாதி மேக்கப் அழிந்தும் அழியாததுமான முகம்! ''வாஸலின் போட்டாத்தான் ஸார் எல்லாத்தையும் சுத்தமா எடுக்க முடியும்...'' மிருதுளா சொன்னாள்.

''ஆமாம்.... எதையாவது போட்டு மொத்தமாக இவைகளை இனி வழித் தெறிந்துவிட வேண்டும்....''

மிருதுளா! நீ.... நீயுமா இந்த லிஸ்டில்? மிருதுளா, உனக்கே தெரியாமல் நான் உன் னைக் காதலித்தது தெரியுமா? உனக்கே தெரி யாமல் உன்னை நான் என் மனைவியாக ஏற்றுக் கொண்டது தெரியுமா? மிருதுளா, இந்தத் தோல்வியை என்னால் தாங்க முடியவில்லை.... நானே எனக்குள் 'மௌனமாக இந்தப் பாரத்தை ஏற்று அழ வேண்டி யிருக்கிறது! உண்மையில் இன்றுதான் மிருதுளா நான் அனாதை! எனக்கென்று உறவில்லை! எனக்கு யாருமே இல்லை மிருதுளா....'

நான் எழுந்தேன். ரொம்ப நேரமானால் மாதுவே சந்தேகப்படுவான்! பட்டுமே...

''இனி மேலும் இப்படி இங்கே தனியா உட்கார்ந்துண்டு அழறது நல்லாயில்லே, நளினி. எழுந்திருங்கள்.'' அவள் ஒரு கணம் மௌனம் சாதித்தாள்.

''உண்மைதான்.... நான் இனிமேல் அழப் போறதில்லே.''

அவளைத் திரும்பிப் பார்த்தேன்.

அழுதழுது சிவந்திருந்த அந்தக் கண்கள் சிறுத்திருந்தன.

விளக்கின் ஒளியில் இன்னமும் அந்தக் கண்கள் கண்ணீர் சிந்தத் தயாராக இருப்பது புரிந்தது.

''உஸ்.... ஐ ஹேட்... டியர்ஸ்...கடந்த காலத்தைப் பத்தி நினைச்சு அழுது காலத்தை வீணாக்காம துணை கிடைக்கிறப்போ மேலே நடக்கிறதுதான் உசிதம்....''

அவள் ஒரு கணம் என்னைத் தீர்க்கமாகப் பார்த்தாள். இருவரும் நடக்க ஆரம்பித் தோம். ஓ! இவள் அழகி!

இவனும் என்னைப் போல் ஏமாற்றப்பட் டிருக்கிறாள்! இவளும் என்னைப் போல் வஞ்சிக்கப்பட்டிருக்கிறாள்! இனி... இனி.... இவள் என்னை ஏமாற்றமாட்டாள்! இவளை... இவளையே என் துணையாக ஏற்றுக் கொள்ளக் கூடாது? இவள் கடந்த காலம்...? பரவா யில்லை.... என் கடந்த காலம்கூட ரோஜா மெத்தை அல்ல! இவள் கடந்த காலத்தின் கரும் புள்ளிகளை நான் கணக்கில் சேர்க்கமாட் டேன்...''ஏன் நின்றுவிட்டீர்கள்...?'' என்று கேட்டேன்.''

'' நான் தனியே போய்க் கொள்கிறேன்... எனக்குத் துணை தேவையில்லை...''

''இருட்டாக இருக்கிறது....''

''பரவாயில்லை...எனக்குப் பழக்கமானது. இந்த இருட்டிலேதான் நான் எதை எதையோ இழந்திருக்கிறேன்.... இப்போது வாழ்வையும் இழந்து கொண்டிருக்கிறேன். நண்பருடைய கடிதத்தைத் தூக்கிகிட்டு ஓடி வந்த உங்க 'பெருந்தன்மையை' முதல்லே பாராட்டி னேன். ஆனால் இப்பத்தான் புரியுது.... பலஹீனமானபோது அடித்து வீழ்த்தி இரை தேடற இன்னொரு புலி நீங்க. கொடிய மிருகம்! ஆண் வர்க்கங்களே அயோக்கியத் தனத்தின் மொத்த வாரிசுகள்! ஐ ஸே... யு கேன் கோ...ப்ளீஸ் லீவ் மி அலோன்...''

நான் தன்னந் தனியனாக நடக்கிறேன்..... அந்த மணலில்... பாலைவனத்தில் நடப்ப தைப் போல்... நான் மீண்டும் ஒரு முறை ஏமாற்றப்பட்டிருக்கிறேன்.... மீண்டும் ஒரு பெண்ணால்! தூரத்தில் கேட்கிற நளினியின் அழுகுரல் என் நடைக்குப் பின்னணியாய் ஒலித்து ஒலித்துத் தேய்கிறது!


கிளர்ச்சியூட்டும்
காட்டன்ஸ்
அளிப்பதோ
செஞ்சரி
சூட்டிங்குகள்—கற்பனை வளம் நிறைந்த டிசைன்களும் சென்ச்சரி பருத்தியின் குளுமையான சுகமும் பரிபூரணமாக இணைந்தவை
ஷர்ட்டிங்குகள்-திகைக்க வைக்கும் கோடுகள் மனதை மயக்கும் கட்டங்கள். எண்ணற்ற திருசுகள்-இவை எல்லாமே சேர்ந்து, சென்ச்சரி பருத்தி எண்ணிலா வண்ணங்களில் குன்றாத ஒளி பெற்றுத் திகழ்கின்றது.
புடவைகள் பருத்தியின் சுகபோக இதம்-ஆம் உங்களுக்கு சென்ச்சரி மட்டுமே இந்த சுகத்தை அளிக்க முடியும். சென்ச்சரி புடவை உங்கள் எழில் உடலை ஒட்டித் தழுவ, கிளுகிளுப்பூட்டும் மகிழ்ச்சியிலே திளைக்கிறீர்கள். நெருப்பை எதிர்த்து உழைக்கும் அக்னியவிரோதக் புடவைகளும் உண்டு.
ஆடை அணி வகைகள் ஜீவன் ததும்பும் டிசைன்கள். களிநடம் புரியும் வண்ணங்கள். சென்ச்சரி பருத்தியின் மென்மையும் உணர்ச்சியைத் தொடும் சிறப்பும் உங்களை என்றும் மகிழ்விக்கும்.
தி சென்ச்சுரி ஸ்பின்னிங் & மான்யுபாக்சரிங் கோ. லிட்.,
பம்பாய் 400 025
செஞ்சுரி நூற்றுக்குநூறு பருத்தித் துணிமணிகள்.
national-913-Tamil



வட்டமேஜை

முதலைக் கண்ணீர் விடாதீர்!

முதலைக் கண்ணீர் என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அதற்கு ஒரு ''மாடல்'' தங்கள் தலையங்கம். (புதிய சட்டங்கள்; புதுப் புது தலைவலிகள்)

திருச்சி — 17
13—5—76 கோ. வன்மீகநாதன்

'புதிய சட்டங்கள்; புதுப்புது தலைவலிகள்' என்ற தலையங்கம் இன்றைய நிலைமையைத் தெள்ளத் தெளிவாகப் புலனாக்குகிறது. அவசரமாக மருந்து வாங்கவோ, வேறு இடர்ப் பயணங்களுக்கோ மக்கள் கடன் கிடைக்காமல் மிகவும் சங்கடப்படுகிறார்கள் என்பது பேருண்மை. சகலத்தையும் கட்டுப்பாட்டுக்குள் அடக்கிவிடலாம் என்று எண்ணுவது மக்களை ஆளும் முறையல்ல; அதற்கு வேறு பெயர் உண்டு என்பது மிகவும் 'பாய்ண்டாக'ச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது!

திருக்குறுங்குடி
14—5—76 ஆழ்வை அ. பட்சிராஜன்

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன் ராஜாஜி அவர்களின் காரியதரிசியாகப் பணியாற்றினார் ஸ்ரீ பி. சங்கரன் என்ற கேரள தேசத்து இளைஞர் (இப்போது சென்னையில் மெயில் பத்திரிகையில் பணி புரிகிறார்) இவருடைய திருமணத்துக்கு ராஜாஜிதான் அழைப்பாளர். அச்சிட்ட அழைப்பிதழில், ''உங்கள் நல்வாழ்த்துக்களைத் தபால் மூலம் அனுப்புங்கள்'' என்ற வாசகம்தான் இருந்தது. இவ்வித மனமாற்றம் மக்களிடம் சுயமாகவே ஏற்பட வேண்டும். சட்டத்தால் அல்ல.

தஞ்சாவூர்
15—5—76 காந்தி ஆசிரமம் கிருஷ்ணன்

கடன் நிவாரணம் சட்டம் பற்றித் தலையங்கம் எழுதியதைப் படித்தேன். மிக நன்றாக இருந்தது. இச்சட்டத்தினால் மக்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். அடகுக் கடைகளில் போதுமான பணம் கிடைப்பதில்லை. பேங்குகளில் போதுமான பணம் கொடுப்பதில்லை. ஆகவே இக்கடன் சட்டத்தைத் தமிழ்நாடு சர்க்கார் தளர்த்தினால் மிகவும் நல்லது.

சென்னை
15—5—76 இ.பழனியப்பன்

அரசாங்கமே முன்மாதிரியாக உணவு விடுதிகளை நடத்த வேண்டும் என்று தாங்கள் கூறி இருக்கும் யோசனை கழுத்தைச் சுற்றிக் கொண்டு மூக்கைத் தொடும் கதைபோல் இருக்கிறது. அரசாங்க உத்தரவுகளையே அமல்படுத்தாத அவர்களா இதற்கெல்லாம் அஞ்சுவார்கள்?

தென்காசி
12—5—76 எம். ராமச்சந்திரன்

[ஆளுனர் ஷா அவர்களே அரசாங்கம் கான்டீன்களை நடத்தவேண்டியிருக்கலாம் என்று கூறியுள்ளார். ஆர்.]

மயிலே மயிலே இறகு போடு என்போம். போடாவிட்டால் நாமே மயிலாக மாறி இறக்கை போட்டுக் காண்பிப்போம். இப்படித்தான் இருக்கிறது வட்டிக்கடை—ஜனதா சாப்பாடு பற்றிய தலையங்க யோசனைகள்.

திருச்சி — 4
14—5—76 பி. ஸ்ரீராம்

'வட்டமேஜை' பகுதியில் 'அண்ணாசாலை' என்று ஆங்கிலத்தில் குறிப்பிடுவது பற்றி அன்பர் ஒருவர் எழுதியுள்ளார். தமிழர் அல்லாதவர்களுக்குப் புரியாது என்பதால் ஆங்கிலத்தில் 'சாலை'க்குப் பதில் 'Road' என்று குறிப்பிடுமாறு யோசனை தெரிவிக்கிறார்.

புதுதில்லி, பம்பாய் போன்ற பெருநகரங்களில் ஆங்கிலத்திலும் 'Marg' என்றே போட்டிருக்கிறதை நேரில் கண்டவன் நான்.

பெங்களூரில்கூட 'விதான வீதி' என்றே ஆங்கிலத்திலும் போடுகிறார்கள்.

பெரியகுளம்
26—4—76 எஸ். சங்கரன்

''ராஜ்கோட்'' என்ற கட்டுரையில் ''குஜராத் நாட்டிய வகையைச் சேர்ந்த காப்ரா டான்ஸ்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அது காப்ராவோ, காப்ரேயோ அல்ல. ''கர்பா'' டான்ஸ். கர்பா டான்ஸ் நவராத்திரி நாட்களில் தினமும் இரவில் பொதுத் தலங்களிலும், கோவில்களிலும், ஆண்களும், பெண்களும் பல வண்ண ஆடைகள் அணிந்து விதம் விதமாக ஆடும் நடனம்.

பாலக்காடு — 7
1—5—76 என். வி. சுப்பிரமணியன்

ஸ்தாபக ஆசிரியர் 'கல்கி' காலத்திலிருந்து கல்கி படித்து வருகிறேன்.

அவருடைய புதிய நாவல் ஒன்றை அவர் வைத்துச் சென்றுள்ள விரிவான கதைச் சுருக்கத்தையொட்டி அவரது மகன் கி. ராஜேந்திரன் எழுதி வருவது எனக்கு அளப்பரிய மகிழ்ச்சி தருகிறது.

மிக உயர்ந்த ஓவியரான மணியம் அவர்களின் புதல்வர் மணியம் செல்வன், அரும்பு அம்புகளுக்குப் படங்கள் வரைந்து வருவது எவ்வளவு பொருத்தம்! அவர் படங்கள் நேர்த்தியாக, துல்லியமாக, இளமைத் துடிப்புடன் காணப்படுகின்றன. இவ்விருபெரியோர்களின் மகன்களுக்கும் எனது வாழ்த்துக்கள்.


சென்னை-34
6—5—76 டாக்டர் எஸ். மோகன்

குட்டிக் கதைகள்

தவளைகளின் கருணை!

ஏ.எஸ்.ப

கோடைக் காலம்; கடுமையான வெய்யில். காட்டில் ஒரே ஒரு குளத்தில்தான் நீர் இருந்தது. அதுவும் ஒதுக்குப்புறமாய், யார் கண்ணிலும் படாமல் இருந்தது. அதில் சில தவளைகள் வசித்து வந்தன.



யானைக் கூட்டம் ஒன்று சற்றுத் தூரத்தில் நீரைத் தேடி அலைந்து சென்று கொண்டிருந்தது. தவளைகள் அவற்றின் மீது இரக்கம் கொண்டன. 'கொரக் கொரக்' என்று கத்தி யானைகளின் கவனத்தைக் கவர்ந்தன. ''யானைகளே! வந்து தாகசாந்தி செய்து கொண்டு போங்கள்'' என்றன.

யானைகள் நீர் இருக்கும் இடம் அறிந்து கொண்டுவிட்டன. வந்து வயிறு முட்ட முட்ட நீர் குடித்தன. குளம் நிமிஷமாக வற்றி விட்டது.

யானைகள் தவளைகளுக்கு நன்றிகூறிப் பிரிந்தன. வெய்யில் தகித்தது. தவளைகள் உஷ்ணம் தாங்காது உயிரை விட்டன.

நீதி: (நீங்களே எழுதிக் கொள்ளவும்)

'ரெடிமேட்' சாப்பாடு

நரி உணவின்றித் தவித்தது. பலவீன முற்றது. சற்று நேரத்தில் ஒரு கழுதையைக் கண்டது. அதனிடம் இப்படிப் பேசிற்று:

''சிங்கராஜா ஆஸ்தான வித்வான்தேவை என்றார். உன் பெயரைச் சிபாரிசு செய்தேன். அரசர் உடனே ஏற்றார். அவர் அதிக நேரம் தூங்கிவிடாமல் குறித்த காலத்தில் எழுப்பி விட இனிய குரலுடைய வித்வான்தான் பாட வேண்டும். இப்போது அவரை எழுப்ப வேண்டிய நேரம்தான். சீக்கிரம் வா. சுப்ரபாதம் பாடு!''

கழுதை புகழ்ச்சியில் மயங்கியது. சிங்கத்தின் குகைக்குச் சென்றது. பலத்த சாப்பாட்டுக்குப் பிறகு சிங்கம் உறங்கிக் கொண்டிருந்தது. நரி சமிக்ஞை செய்ததும் கழுதை உரக்கக் கத்த ஆரம்பித்தது.

திடுக்கிட்டு விழித்த சிங்கம் கோபம் கொண்டு கழுதை மேல் பாய்ந்து பலமாக ஓர் அடி கொடுத்தது. பிறகு மீண்டும் தூங்கப் போயிற்று. நரிக்குக் கழுதை 'ரெடிமேட்' உணவாயிற்று.



நீதி: (நீங்களே எழுதிக்கொள்ளவும்)

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600 031.
Managing Editor: T. Sadasivam. Associate Editor: K. Rajendran.

மூன்று வயதே ஆகிறது...



அதற்குள் உலகமெல்லாம் பரவிப் பெருகியுள்ள நோய் இவளைப் பீடித்துவிட்டது

நூற்றுக்கு 95 பேரைப் பாதிக்கும் நோயான பற்சிதைவு குழந்தைகளையே பெருமளவில் பீடிக்கிறது. பற்சிதைவின் காரணமாக அகாலமாக, பால் பற்கள் விழுந்து, புதிய பற்கள் முளைக்கும் பருவத்தில், பல் வளர்ச்சிக்குக் குழந்தைகளுக்குத் தனிப்பட்ட பாதுகாப்பு தேவைப்படுகிறது.

பினகா ஃப்ளோரைட் பற்சிதைவுக்கு எதிராக நீடித்த பாதுகாப்பளிக்கிறது

பற்சிதைவை 50 சதவிகிதம் வரை ஃப்ளோரைட் குறைக்கிறது என விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன. ஆகவே நாள்தோறும் காலையிலும், படுக்கை வேளையிலும், உங்கள் குழந்தைகளை பினகா ஃப்ளோரைடினால் பல் துலக்கச் செய்யுங்கள். அதன் தனிப்பட்ட, நீடித்து நிற்கும் ஆற்றல் பல் எனாமலைப் பலப்படுத்துகிறது. பற்களைச் சிதைக்கும் கிருமிகளின் வளர்ச்சியையும் வலிதரும் சொத்தையையும் தடுக்கிறது. அதுமட்டுமல்லாமல், பினகா ஃப்ளோரைடினால், 14 வயது வரை, தவறாமல் பல் துலக்கி வந்தால், பற்சிதைவை எதிர்க்கும் நீடித்த ஆற்றல் வந்தடைகிறது.



பல்லுக்கு உறுதி,
பற்சிதைவுக்கு எதிரி—

பினகா ஃப்ளோரைட்

U-BF/38/75 Tam.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka